இந்து ஒளி
HINDU OLI

தீபம் - 20 சுடர் - 01

சிவதொண்டர் மாநாடு - நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சியில் கருத்தரங்கு சிறப்பிதழ்

மன்மத வருடம்
கார்த்திகை 19ம் நாள்

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

5th December
2015

மாத்தளை சிந்தாக்கட்டி குமரமலை குமரப்பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் (25.10.2015)

ஆலயத் தோற்றம்

கும்பாபிஷேகக் கிரியைகள்

பூஜை வழிபாடு

மாமன்றத்தின் அன்பளிப்பான கண்டாமணி அடிக்கப்படுகிறது

இந்து ஒளி மகா கும்பாபிஷேக சிறப்பிதழ் வெளியீட்டின்போது மாமன்றத் தலைவர், திரு.கந்தையா நீலகண்டன், உப தலைவர்களான திரு.சின்னத்துரை தனபாலா, திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன், ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த திரு. தி. விக்கினேஸ்வரன், திரு.எஸ்.புண்ணியசீலன் உட்பட ஏனைய பிரமுகர்கள்

கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அடியார்கள்

தீயமி – 20

இந்து ஒளி

சுடர் – 01

மன்மத வருடம் கார்த்திகைத் திங்கள் 19ஆம் நாள் (05.12.2015)

பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

நீள நினைந்தடியேன் உமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே!

திருவாசகம்

போற்றியோம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோம் நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சி வாய
சயசய போற்றி போற்றி!

திருவிசைப்பா

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம புராந்தகன்
சேலும் கயலும் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோடு
ஆலும் அதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே!

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்குஆட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே!

திருப்புராணம்

மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்
பொதிநலன் நுகர்தரும் புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே!

திருச்சிற்றம்பலம்

தனித்துவமிக்க கிழக்கிலங்கை இந்துப் பாரம்பரியம்

கிழக்கிலங்கையில் மிக நீண்ட வரலாறு கொண்ட இந்துப் பாரம்பரியம் நிலவி வருகிறது. கிழக்கிலங்கை மக்களின் பக்தி தனித்துவமானது. ஆடிப்பாடி, சடங்குகள் செய்து நேர்த்தி வைத்து வழிபாடு செய்யும் பண்பாட்டுப் பாரம்பரியம் வேறு எங்கும் காணமுடியாது. பாரம்பரிய கலைகளை கோயில்களில் அரங்கேற்றி அவற்றைப் பக்தியோடு பாதுகாத்தவர்கள் கிழக்கிலங்கை வாழ் மக்கள் என்றால் மறுப்பதற்கு ஏதுமில்லை. கடலின் தாலாட்டிலும் சிற்றாறுகளின் அரவணைப்பிலும், நெற்கதிர்களின் குவியலிலும் கடவுளை பாடிப் பரவியவர்கள் இப்பகுதி மக்கள். மாமாங்கப் பிள்ளையார் முதல் உகந்தை முருகன் வரை பலநூறு கோயில்கள் கிழக்கிலங்கையில் எழுச்சி பெற்று பாதுகாக்கப்பட்டு வருவதை நாம் பெருமையோடு எடுத்துரைத்தல் அவசியமாகும்.

போர்ச் சூழலில் கிழக்கிலங்கை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். கோயில்கள் பல அழிக்கப்பட்டன. எனினும் கோயில்களை மீளவும் கட்டி எழுப்பவேண்டும் என்ற பேராவல் வீண்போகவில்லை. சிலப்பதிகாரத்து நாயகியான கண்ணகைக்கு கிராமம் தோறும் கோயில்கள் எழுப்பி பள்ளுப்பாடி, தீமிதித்து, இப்பகுதி மக்கள் செய்யும்

சிவதொண்டர் மாநாடு - நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு சிறப்பிதழ்

அகில இலங்கை இந்து மாமன்றம், அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி மட்டக்களப்பு மண்ணில் சிவதொண்டர் மாநாட்டையும், நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கையும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஒழுங்கு அனுசரணையுடனும், கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தின் ஆதரவுடனும் நடத்துகிறது.

இதனையொட்டி இந்து ஒளி சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

பொங்கல் வழிபாடு வேறு எங்கும் காணமுடியாது. மகாபாரதத்து நாயகியாகிய திரௌபதையின் பெயரால் திரௌபதை அம்மனுக்கு பல கோயில்கள் அங்குண்டு. அந்நியரே அதிர்ந்து போகும் வகையில் அற்புதம் நிகழ்ந்த கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரர் திருக்கோயில் கிழக்கிலங்கையின் சைவப்பாரம்பரியத்தின் கருவூலமாக இன்றும் காட்சியளிக்கிறது. வயலும் வயல் சார்ந்த நிலத்திலும் இந்துக் கடவுளர்களின் பேரால் இவர்கள் பேணிய ஆடல் பாடல் வீரம் செறிந்த நிகழ்ச்சிகள் யாவும் எமது பாரம்பரியங்களை எடுத்துச் சொல்கின்றன.

சுவாமி விபுலானந்தரைப் பெற்றெடுத்த கிழக்கிலங்கை மண்ணுக்கு ஈழத்து இந்துக்கள் என்றும் நன்றிக்கடன் பட்டவர்களே. சுவாமி விபுலானந்தர் இந்துப் பாடசாலைகளை கிழக்கிலங்கையில் தோற்றுவித்தது மட்டுமன்றி திருகோணமலையிலும் இந்துக் கல்விச்சாலைகள் எழுவதற்கு வித்திட்டவர். முத்தமிழ்ப் பேராசிரியரை தந்த கிழக்கிலங்கை ஞானபரம்பரையையும் உருவாக்கிய பெருமைக்குரியது. பண்டிதர்கள், பாவலர்கள், புலவர்கள், சைவக் குருமார்கள் கிழக்கிலங்கையில் சமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு மிகவும் மகத்துவமானது. பண்டிதர் வீ.சீ.கந்தையாபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்ற விற்பன்னர்கள் பாதுகாத்து வளர்த்த பாரம்பரியம் இன்றும் தொடர்கிறது. இலங்கைப் பாராளுமன்றத்தில் சிவப்பொலிவோடு கழுத்தில் உருத்திராட்ச மாலையோடு சைவத்துக்கும் தமிழ் இனத்துக்குமாக இன்று கர்ச்சிக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவர்கள் ஈழத்து இந்துக்களுக்கு கிடைத்த அரும் பொக்கிஷம் எனலாம். கிழக்கிலங்கையில் இந்து மதத்தின் வளர்ச்சிக்காக அன்றும் இன்றும் அயராது உழைத்துவரும் பண்புடையாரை பாராட்டி அவர்கள் பணியை தொடரவேண்டியது இன்றைய எதிர்காலத் தலைமுறையின் கடமையாகும்.

நல்லை நகர் நாவலர் பெருமானை ஆண்டுதோறும் கிழக்கிலங்கை வாழ் மக்கள் நினைவு கூர்ந்து பெருவிழா எடுத்து வருகிறார்கள். வடக்கில் சுவாமி விபுலானந்தர் நினைவு வைபவம் விமரிசையாக நடைபெற்றுவருகிறது. வடக்கையும் கிழக்கையும் ஆன்மீகக் கரங்களால் அரவணைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் அதற்கான நல்ல திட்டங்களை செயற்படுத்தி வருவது காலத்தின் கட்டாயமாக அமைந்துள்ளது.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே!

வாழ்த்து

தவமொடு வேள்வி வாழ்க தானமு.மறமு வாழ்க
சிவனரு ளோங்கி மேலாம் சிவநெறி செழித்து வாழ்க
பாவமும் பழியும் வீழ்ந்து பரனருள் தன்னா லென்றும்
சைவமும் தமிழும் வாழ்க தரணியி லுள்ளோருய்ய!

இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு சிறப்பிதழ்
மன்மத வருடம் கார்த்திகை 19ஆம் நாள் (05.12.2015)

ஆசிரியர் குழு :

திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்

ஒரு பிரதியின் விலை	ரூபா 50.00
வருடாந்தச் சந்தா [உள்நாடு]	ரூபா 300.00 [தபாற் செலவு தனி]
வருடாந்தச் சந்தா [வெளிநாடு]	US டொலர் 15

அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இணையத்தளம்	:	http:/www.hinducongress.lk
மின்னஞ்சல்	:	hinducongress@gmail.com
தொலைபேசி	:	0112434990, தொலைநகல் : 0112344720

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.

HINDU OLI

Publication of
HINDU RESEARCH CENTRE OF
ALL CEYLON HINDU CONGRESS
Navalar Memorial Seminar Special Issue
05.12.2015

Editorial Board :

Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar

Price	Rs. 50.00
Annual Subscription (Inland)	Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign)	U. S. $ 15 (Including Postage)

ALL CEYLON HINDU CONGRESS
A.C.H.C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

ISSN : 2012 - 9645

ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்

கிழக்கில் யோகர் சுவாமிகளின் ஞானச்சுடர்

உலகம் போற்றும் ஆத்மஞானி தவத்திரு யோகர் சுவாமிகள் கிழக்கிலங்கை மீது உயர்ந்த மதிப்பு கொண்டிருந்தவர். இதன் விளைவாக இங்கிலாந்திலிருந்து வருகைதந்து யோகர் சுவாமிகளின் ஞானதீட்சை பெற்றவர்களுள் இலங்கையின் ஆள்பதியாக விளங்கிய சோல்பரிப்பிரபுவின் மகன் முதன்மையானவர். சாந்த சுவாமிகள் என்பது இவரது தீட்சாநாமம் ஆகும். யோகர் சுவாமிகள் தனது சீடர்களுள் ஒருவராக விளங்கிய சாந்த சுவாமிகளை "கிழக்கே போ! கிழக்கிலே ஞானச்சுடர் பிரகாசிக்க வேண்டும்" என ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார். இங்கிலாந்தில் பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த சாந்த சுவாமிகளை "சும்மா இருக்காதே. காடு வெட்டி சேற்றுக்குள் நெல் விதைத்து சோற்றை உண்பது உயர்ந்த தவம்" என்றும் சொல்லி வைத்தார். மடத்திலிருந்து கண்ணை மூடி தியானிப்பது மட்டும் கடவுள் வழிபாடு அல்ல. காட்டை வெட்டி நாட்டுக்கு உகந்த நல்ல காரியம் செய்வதும் உயர்ந்த மார்க்கம் என சுவாமிகள் உபதேசித்தார்.

சாந்த சுவாமிகள் மட்டுநகர் சென்று செங்கலடி கிராமத்தில் குடிகொண்டு அடியவர்களுடன் சேர்ந்து சிவதொண்டன் நிலையம் அமைத்தார். பல ஏக்கர் காட்டு நிலங்களை வயல் நிலங்களாக மாற்றினார். தானே உழவு இயந்திர வண்டியை இரவு பகல் செலுத்தி பசுமைப் புரட்சி செய்தார். சிவதொண்டன் நிலையத்தை நெற்களஞ்சியமாக நிறைத்தார். யோகர் சுவாமிகள் சொன்ன சொல்லுக்கு இலக்கணமாய் சோல்பரி மைந்தன் புதுமை செய்தார்.

சாந்த சுவாமிகளின் ஞானப்பாதையை தெரிந்து கொண்ட மட்டுநகர் மக்கள் அவரை நாடிவரத் தொடங்கினர். சிவதொண்டன் நிலையம் சிவனடியார் கூட்டத்தால் நிரம்பியது. தவச்சாலையாக செங்கலடி சிறப்புற்றது. சிவத்தொண்டன் வளாகம் முழுவதும் கனிதரு மரங்களும் இறைவிருட்சங்களும் மூலிகை மரங்களும் நீள்நிழலாகியது. யோகர் சுவாமிகளின் கனவு நனவாகியது. கிழக்கிலங்கையில் ஆத்மீக ஞானமுடைய பலர் காலத்துக்கு காலம் தோன்றியுள்ளனர். இங்குள்ள மக்களின் வைராக்கிய பக்தியை யோகர் சுவாமிகள் மெச்சியுள்ளார். தீக்குள் நடந்து கடவுளை வேண்டுதல் செய்வதும். கால்நடையாக கதிர்காமம் செல்வதும் கிழக்கிலங்கை மக்களின் அபார பக்தியின் அடையாளங்கள் என சுவாமிகள் போற்றினார்கள்.

யோகர் சுவாமிகள், சாந்த சுவாமிகளை செங்கலடிக்கு அனுப்கியது செயற்கரும் செய்கை செய்வார் எனக் கருதியே என்பது முற்றும் உண்மை. பலதடைவைகள் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாந்த சுவாமிகள் நேரில் சென்று அரிசி கொடுத்து மக்களின் துயரைப் போக்கியிருக்கிறார். தீர்க்கதரிசனமிக்க யோகர் சுவாமிகள் சாந்த சுவாமிகளை கிழக்கே அனுப்பியதற்கு நிறைந்த காரணம் உண்டு. அவற்றை சொல்லும் தகுதி எமக்கில்லை. இதே காலப் பகுதியில் யோகர் சுவாமிகளின் மற்றுமொரு சீடராகிய செல்லத்துரை சுவாமிகளும் சாந்த சுவாமிகளுடன் இணைந்து கிழக்கிலங்கை மக்களுக்கு ஆற்றிய சேவைகளும் மறக்க முடியாதவை.

கிழக்கிலங்கையில் உருவான சிவதொண்டன் நிலையம் வடக்கிலும் வாழ்வளித்தது. அங்கு விளைந்த நெல் வடக்கிலும் சிவனடியார்களுக்கு அமுதமாகியது. "பாடுபட்டு உழைப்பதற்கே இப்பாரிடம் சொந்தம் ஐயா" என்ற புலவரின் வரிகள் பெறுமதியானவை. சாந்த சுவாமிகளின் ஆத்மீக சுவாசிப்பு வீண்போகவில்லை. சுவாமிகளின் பாசறையில் வளர்ந்த கல்விமான் ஒருவரின் மைந்தனே இன்று வடக்கிலுள்ள சிவதொண்டன் நிலையத்தின் காவலனாக விளங்குகிறார். யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் விளக்கேற்றி பூசை வழிபாடு செய்து அங்கு ஏற்றப்பட்ட ஞானதீபத்தை அணையவிடாது பாதுகாக்கும் சிவதொண்டர் முரளி அவர்களுக்கு சைவ உலகம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

கிழக்கிலங்கையில் ஏற்றப்பட்ட சுடர் இன்று யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தை வெளிச்சமாக்குகிறது. இவையெல்லாமே யோகர் சுவாமிகளின் திருவருளால் நிகழ்கிறது. கிழக்கிலங்கையில் வாழும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு யோகர் சுவாமிகளின் பேரருளால் அமெரிக்காவில் தோற்றம்பெற்ற ஹவாய் சைவ ஆதீனம் தொடர்ந்து உதவி வருகிறது. ஹவாய் சைவ ஆதீனத்தை தோற்றுவித்தவர் யோகர் சுவாமிகளின் சீடர் சுப்பிரமுனிய சுவாமிகள் என்பது அனைவரும் அறிந்ததே.

யோகர் சுவாமிகளின் ஆத்மீக அலை கிழக்கிலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அடியேன் பல்வேறு சேவைத் திட்டங்களின் நிமித்தம் கிழக்கிலங்கை மக்களை பல தடவைகள் சந்திக்கும் பேறு பெற்றேன். அவர்களின் திறந்த உள்ளம் கண்டு பூரிப்படைந்தேன். யோகர் சுவாமிகளின் திருவருளினாலும். நல்லாசியினாலும் கிழக்கில் ஞானபரம்பரை மேலும் தொடரும் என்பதில் ஐயமில்லை.

சிவஸ்ரீ தொண்டுநாதன்

பேரூர் ஆதீன இளையபட்டம் இலங்கை வருகை



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி, சிவதொண்டர் மாநாடும், நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கும் இருநாள் பெருவிழாவாக டிசெம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் மட்டக்களப்பு நாவற்குடா சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவன அரங்கில் நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இந்தியா பேரூர் ஆதீன இளையபட்டம் வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் வருகை தருகிறார். ஆரம்பநாள் நிகழ்வின்போது இவர் ஆசியுரை வழங்கவிருக்கிறார். இரண்டாம் நாள் நிகழ்வின்போது (06.12.2015) காலை சிறப்புரையாற்றுவார்.

சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் இம்மாதம் 7ஆம் திகதியன்று கொழும்பு விவேகானந்த சபையிலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவிருப்பதுடன், க. பொ. த (சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஆசியும் வழங்குவார். 8ஆம் திகதியன்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் வத்தளை இந்து மன்றம் ஒழுங்கு செய்திருக்கும் நிகழ்ச்சியிலும் அடிகளார் கலந்து கொண்டு பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஆசி வழங்குவார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அழைப்பை ஏற்று வருகைதரும் வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் அவர்களை இலங்கை வாழ் இந்துமக்கள் சார்பாக மாமன்றம் அன்புடன் வரவேற்கிறது.

(மேற்படி இருநாள் நிகழ்வுகள் தொடர்பான முழுமையான நிகழ்ச்சி நிரல் இந்து ஒளியின் 38ஆம், 39ஆம் பக்கங்களில் வெளியாகியிருக்கிறது.)

ஓம்காரம் – தத்துவமும் மகத்துவமும்

இருளிலிருந்து பிரகாசத்துக்கு உயர்த்துவதன் அடையாளக் குறிப்பாகவே ஓம்காரத்தைக் கருதி வந்தனர். இந்துமதத் தத்துவங்களின் ஆதாரமான பிரம்மத்தின் தெளிவின் கண்ணோட்டமான உருவம் இது. ஓம்காரம் உச்சரிக்கும் போதே அந்தச் சின்னம் மனதில் உதிக்கும். இந்துமத கண்ணோட்டத்திற்கு மேல், சீக்கிய, புத்த, ஜைன மதங்களிலும் ஓம்காரத்தை இதே அர்த்தத்தில் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஓம்காரத்தின் பொருள் கோணங்களை விரிவாக ஆசாரியர் விவரித்துள்ளனர் என்றாலும் களங்கமற்ற இறை பஜனம் என்பதே ஜெபத்தின் சாரம். ஒழுங்காக ஓம்காரம் ஜெபிக்கும் நபர் தன்னில் இயல்பாக இருக்கும் மிருகத்தன்மையை அகற்றி வாழ்க்கை வெற்றியில் வந்து சேருவார். 'அ' 'உ' 'ம' என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையே ஓம்காரம் என்பது. இதில் அடங்கியிருக்கும் ஒவ்வொரு எழுத்திலும் தனிப்பட்ட பொருள் அடங்கியுள்ளது. 'அ' என்பது ஆதியையும், 'உ' என்பது உயர்வையும், 'ம' என்பது மிதி(அளவு)யையும் குறிப்பிடுகின்றன. அதனால் ஓம்காரத்தை படைப்பு நிலைகளின் பிரதிநிதிக்கும் சக்தியாக சிறப்பித்துள்ளனர். புண்ணிய புராண நூல்களும், ஆசாரியர்களும் ஓம்காரத்தை விவரித்துள்ளனர். அவற்றில் வேதங்கள், உபநிஷதங்கள், பகவத்கீதை முதலியவை உட்படும். நிரந்தரமான ஓம்கார ஜெபத்தால் தேவேந்திரன் அசுரர்களின் தீய சக்தியை எதிர்கொண்ட கதைகள் அதர்வவேதத்தில் காணலாம். பிரம்மத்தை அறிய ஓம் உபயோகிக்கலாம் என்று யஜுர் வேதம் கூறுகின்றது. கடோபனிஷத் ஓம்காரத்தை பரப்ரம்மமாக சிறப்பிக்கின்றது. ஓம்கார தியானம் பரமாத்மாவுடன் ஆத்தும ஐக்கியம் பெற உதவும் என்று முண்டகோபனிஷத் போதிக்கின்றது. பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னை ஓசைகளில் ஓம்காரமாகவே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். யோகசூத்திரத்தில் பதஞ்சலி மகரிஷி ஓம்கார ஒலியை இவ்வாறு சிறப்பிக்கின்றார். ஓம்கார ஒலியை இறையடையாளமாகக் கொண்டு தொடர்ச்சியாக ஓம்கார ஜெபமும் தியானமும் செய்யும் ஒரு நபருக்கு சமாதியடைய இயலும் என்கின்றார். நவீன யுகத்திலும் சுவாமி விவேகானந்தர், அரவிந்த ரமண மகரிஷிமார் முதலிய அநேகமான மேதைகள் ஓம்காரத்தின் சிறப்புக்களை குறிப்பிட்டுள்ளனர். ஆரம்பமும் முடிவும் இல்லாத ஓம்காரத்தை மேல்நாட்டினர் அங்கீகரிக்கத் தயாராக இருக்கும் காலத்தில் அறிவு குன்றிய அநேகமான மக்கள் இப்போதும் இதை மதச்சின்னமாகவே கருதுகின்றனர். ஆனால் ஓம்காரம் எல்லாவற்றிற்கும் ஆதாரமானது என்ற உண்மை அவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. ஓம்கார ஜெபத்தாலும் தியானத்தாலும் போர்களே நடத்தி வெற்றி பெற்றுக் கொண்டிருப்பவர்களை இந்த சைபர் யுகத்திலும் காணலாம் என்பதே நிஜம். இறைவனும் ஓம்காரமும் ஒன்றுதான் என்பதே கண்டறிவு.

(நன்றி : ஓலைச்சுவடி)

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்

பிள்ளையார் பெருங்கதை எனப்படும் விநாயகர் விரதம் நவம்பர் 26ஆம் திகதி ஆரம்பமாகி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இம்மாதம் (டிசெம்பர்) 16ஆம் திகதியன்று நிறைவு பெறுகிறது.)

விநாயகர் வழிபாடு

விநாயகர் வழிபாடு மிகவும் தொன்மையானது. ஏனைய எல்லா தெய்வ வழிபாட்டைக் காட்டிலும் மிக எளிய முறையில் வழிபட ஏதுவானது விநாயகர் வழிபாடு என்பதோடு மட்டுமல்ல விநாயகரை வழிபட்டால் சகல தெய்வங்களையும் அவ்வழிபாடு போய்ச் சேரும் என்பதும் சிறப்புக்குரியது.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு *(ஔவையார்)*

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கணிந்து.

(கபிலதேவநாயனார்)

விநாயகப் பெருமானை வணங்கி வழிபட்டுச் செய்யும் எந்தவொரு நற்காரியமும் இடையூறின்றி நிறைவுபெறும். இவரை வணங்காமல் ஆரம்பிக்கும் கருமங்களுக்கு விக்கினம் ஏற்படுகிறது. இந்த நம்பிக்கையினால் விநாயகருக்கு விக்கினேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது.

தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர் விநாயகர் என்பது இவரது திருநாமத்திலிருந்தே அறியமுடிகிறது. (வி - மேலான, நாயகர் - தலைவர் என்று பொருள்படும்) இவர் திருமேனி ஞானமயமானது. தம்மை வழிபடும் அன்பர்களுக்கு நாளும் அருள் வழங்கும் வள்ளல். அடியவர்களது இன்னல்களைப் போக்கி இன்பத்தில் இருத்துவதே அவர்பணி. எவ்விடத்தும் நிறைந்து நிற்பவர். ஓம்கார வடிவினர்.

விநாயகர் வணக்கத்தில் ஒரு சிறந்த பகுதி தலையில் குட்டிக்கொள்வதும் காதுகளைப் பிடித்து தோப்புக்கரணம் போடுவதும் ஆகும். இதற்குப் புராண வரலாறுகளிலிருந்து ஆதாரமும் காட்டப்பெற்றுள்ளது.

"பிடியத னுருவுருமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"

என ஞானசம்பந்தப் பெருமான் விநாயகரைப் போற்றிப் பாடியுள்ளார்.

செடியை வெட்டினால் மீண்டும் வேரிலிருந்து செடி முளைக்கும். அதுபோல் வினையைக் களைந்தால் மீண்டும் வினை தளிர்க்கும். வேரையே அகழ்ந்து எடுத்துவிட்டால் செடி முளைக்காதல்லவா? - அவ்வண்ணம் வினைகளின் வேரை அகழ்ந்தெடுக்கும் தெய்வமாக விநாயகப் பெருமான் விளங்குகிறார்.

விநாயகப் பெருமானின் பெருமை எழுத்துக்கும் சொல்லுக்கும் அடங்காதது. கற்பகதரு நினைத்ததை யெல்லாம் தரவல்லது. அதேபோன்று விநாயகரும், தன்னை வழிபடுவோர் நினைத்தவை எல்லாம் ஒருங்கே தரவல்லவர். அதனால்தான் கற்பக விநாயகர் என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

எடுத்த காரியம் எளிதாக, வெற்றிகரமாக, இன்பமயமாக முடிய வேண்டும் என்ற பெருவிருப்பம் அனைவருக்கும் உண்டு. அதனை நிறைவேற்றி வைப்பவர் விநாயகப் பெருமான்.

திருவாக்கும் செய்கருமமுங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் -உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

(கபிலதேவர்)

குமார சஷ்டி விரதம்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் இதுவும் ஒன்று. பிள்ளையார் நோன்பு என்றும் பிள்ளையார் பெருங்கதை என்றும் அழைக்கப்படும் இவ்விரதமானது, கார்த்திகை மாதத்து பூரணையைத் தொடர்ந்து வரும் (தேய்பிறை) பிரதமை திதியில் ஆரம்பமாகி மார்கழி மாதத்து அமாவாசையைத் தொடர்ந்து வரும் (வளர்பிறை) சஷ்டி திதி வரையிலான இருபத்தொரு நாட்களுக்கு அனுட்டிக்கப்படுகிறது.

இந்த விரதத்தை மேற்கொள்வோர் இருபத்தொரு இழைகள் கொண்ட நூலினை காப்பாக அணிதல் மரபு. இந்தக் காப்பினை ஆண்கள் வலக் கரத்திலும் பெண்கள் இடக் கரத்திலும் அணிவர். ஒரு நாளைக்கு ஒரு பலகாரம் என்ற கணக்கில் இருபத்தொரு நாட்களுக்கும் இருபத்தொரு விதமான பலகாரங்களைச் செய்து விநாயகருக்கு நைவேத்தியம் வைத்தல் வேண்டும். தினமும் விநாயகர் அகவல், கற்பக விநாயகர் காரியசித்தி மாலை, விநாயகர் கவசம் முதலானவற்றை பாராயணம் செய்யவேண்டும். இந்த விரதத்தை அனுட்டிப்பதனால் சத்ரு பேதம் களையப்படுவதுடன் ஒவ்வொருவரினதும் இல்லத்தில் செல்வம் செழிக்கும்; அவர் தம் உள்ளத்தில் ஞானம் பெருகும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சீ. யோகேஸ்வரன் அவர்களது
(தலைவர், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை)

வாழ்த்துச் செய்தி

எமது நாடு அந்நியரின் ஆட்சியின் கீழிருந்த காலப்பகுதியில் அவர்களது மதச்செல்வாக்கு, தமிழ் மக்களது மத்தியில் ஆழமாக ஊடுருவிச் சென்று கொண்டிருந்தவேளையில் தமிழையும் சைவத்தையும் பாதுகாக்கும் காவலனாகத் தோன்றிய நல்லை நகர் நாவலர் பெருமானை சைவத்தமிழ் மக்கள் என்றுமே மறந்துவிட முடியாது. அதுபோலவே, கிழக்கிலங்கையில் தோன்றிய சுவாமி விபுலானந்தர் அடிகளாரும் நாவலர் வழிநின்று சைவத்தமிழ் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியிருக்கிறார். இவர்கள் இருவரையும் தமிழ்கூறும் நல்லுலகம் இன்றும் போற்றிப் பாராட்டுகிறது.

மேல்நாட்டு நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் அடிமையாகி, தமிழினம் தன்னிலை தவறித் தத்தளித்தவேளையில் அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக - கலங்கரை விளக்கமாக விளங்கியவர் நாவலர் என்று தந்தை செல்வநாயகம் அவர்களால் சிறப்பாகப் போற்றப்பட்டவர். ஈழம் வாழ் தமிழினத்தின் மிக நெருக்கடியான காலத்தில் நாவலர் தோன்றி பணிபுரிந்திராதிருப்பின் தமிழருடைய வரலாறே வேறுவிதமாக அமைந்திருக்கும் என்றும் தந்தை செல்வா நாவலருக்கு புகழ்மாலை சூட்டியிருப்பதையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அத்தகைய பெருமைக்குரிய நாவலர் பெருமானை நினைவு கூரும் வகையில் எமது விதந்துரைப்பை ஏற்று அகில இலங்கை இந்து மாமன்றம் வருடந்தோறும் கிழக்கிழங்கையிலும், சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு யாழ் நகரிலும் பெருவிழா எடுத்து வருவது போற்றுதற்குரியது. சைவத்தமிழ் பாதுகாவலர்களாகத் திகழ்ந்த இரு பெரியார்களினதும் நினைவாக வடக்கையும் கிழக்கையும் ஆன்மீக சூழ்நிலைகளால் இணைக்கும் ஒரு நிகழ்வாகவே இத்தகைய நினைவுப் பெருவிழாக்கள் அமைந்திருப்பதைச் சிறப்பாகச் சொல்ல வேண்டும்.

வழமைபோல இம்முறையும் நல்லைநகர் நாவலர் பெருமான் நினைவாக ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கும், சிவதொண்டர் மாநாடும், அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு நிகழ்வாக மட்டக்களப்பு பிரதேசத்தில் நடைபெறுவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்தியா பேரூர் ஆதீன இளையபட்டம் வணக்கத்திற்குரிய மருதாசல அடிகளார் எங்கள் பூமிக்கு வருகை தருவதை பெரும் பேறாகவே கருதுகிறோம். இருநாள் பெருவிழாவாக நடைபெறும் இந்நிகழ்வையொட்டி இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி" சிறப்பிதழாக வெளிவரவிருப்பதும் பாராட்டுக்குரியது.

சைவப்பணியுடன் சமூக நலன் மற்றும் கல்விப் பணிகளையும் நாடளாவிய ரீதியில் ஆற்றிவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அரும்பெரும் சேவைகளைப் பாராட்டுவதுடன், கிழக்கு மண்ணில் இடம்பெறும் நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கும், சிவதொண்டர் மாநாடும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் அமையவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

இருபதாவது வருடத்தில் இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் "இந்து ஒளி" பத்தொன்பது வருடங்களை நிறைவு செய்து கொண்டு இருபதாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருப்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1996 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதியன்று திருக்கார்த்திகை திருநாளில் காலாண்டிதழாக (ஐப்பசி - மார்கழி வெளியீடு) அறிமுகமான இந்து ஒளி, 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து இரு மாத வெளியீடாக மலரத் தொடங்கியது.

இப்போது இந்து ஒளி ஒவ்வொரு சஞ்சிகையும் சிறப்பிதழாக வெளிவந்து கொண்டிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

இருபதாவது வருடத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் "இந்து ஒளி" வெளியீட்டின் முதலாவது இதழை (தீபம் 20; சுடர்:01) உங்கள் கரங்களில் சமர்ப்பித்துக் கொள்ளுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

- மாமன்ற வெளியீட்டுக் குழுவினர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய தொண்டுநலம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 – 1879) அவர்கள் பிறந்து, வளர்ந்து பணியாற்றிய காலப்பகுதி, பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆகும். ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ், 1815 ஆண்டில் இலங்கை முழுவதும் கொண்டு வரப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், 1822 ஆண்டு, டிசெம்பர் மாதம் பதினெட்டாந் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே, கந்தப்பிள்ளை என்பவருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் ஆறாவது புதல்வராக, நாவலர் பெருமான் தோன்றினார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் என்பதாகும்.

தமது ஐந்தாம் வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற ஆறுமுகம், ஆரம்பத்தில், யாழ்ப்பாணம் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம்; பின் நல்லூர் வேலாயுத முதலியார், தொடர்ந்து இருபாலைச் சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடமும்; தமிழ் இலக்கிய, இலக்கண மற்றும் ஞானசாத்திர நூல் கல்வியைக் கற்றுப் புலமை பெற்றார். தமிழ் மரபுக் கல்வியைக் கற்றுத் தேறிய அவர், வடமொழியையும் நன்கு கற்றறிந்தார்.

தமிழ் இலக்கியம், இலக்கண தருக்கம், வேதாந்தம், சைவசித்தாந்தம்; சைவ இலக்கியம்; புராண, இதிகாசங்கள் என்பவற்றில் பெரும்புலமை பெற்றிருந்த ஆறுமுகம், யாழ்ப்பாணம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலமொழிக் கல்வியையும் கற்றுத்தேர்ந்தார். 1841 இல், அதே பாடசாலையில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியும் வந்தார். அக்காலகட்டத்தில், வண. பீற்றர் பார்சிவ பாதிரியாருக்குத் தமிழ் கற்பித்து,தேர்ச்சிபெற உதவினார்.

நாவலர் எங்கிருந்தாலும், எத்தகைய சூழ்நிலையில் தம் இளமைக் காலத்தைக் கழித்திருந்தாலும், தம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளை எய்தும் முயற்சிகளிலிருந்து, சிறிதளவேனும் விலகவுமில்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு விட்டுக்கொடுக்கவுமில்லை. அவருடைய மனத்திட்பம், மனவுறுதி, வைராக்கியம் என்பனவே இதற்குக் காரணமாகும்.

பரமசமய கோளரியார்; சைவபானுவாய்; தமிழ் இலக்கிய, இலக்கண , சித்தாந்த நூற்புலமை வித்தகராய்; சைநவத்திருமுறைகளை ஓதி உணர்ந்தவராய்; சைவ சீலராய்; உள்ளும் புறமும் தூய்மையராய்; சிவபக்தியும் சிவனடியாரிடத்துப் பேரன்பு கொண்டவராய்; நல்லொழுக்கம் பேணுபவராய்; சிவத்தொண்டில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவராய்; ஆறுமுக நாவலர் இளமை தொட்டு, இறுதிவரை திகழ்ந்தவராய், விளங்கியமை பற்றி, அவரின் வரலாற்றினை எழுதிய எல்லோரும் குறிப்பிட்டுள்ளனர்.

இளமைக் காலத்திலிருந்தே, நாவலர் தொண்டு உள்ளம் கொண்டவராகவும்; தொண்டு நெறியில் நாட்டம் உள்ளவராகவும்; அதற்கேற்ற மனப்பாங்கு, தன்னல மறுப்பு, தியாகம், அர்ப்பணிப்பு, வைராக்கியம், நற்குண இயல்புகள் என்பவற்றையும் வளர்த்துக் கொண்டும்; தம்மைப் பக்குவப்படுத்தி வந்துள்ளார். தம்மைத் தொண்டு நெறியில் முழுமையாகவே, முழுநேர ஊழியராக, அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்துவதற்காக, வாழ்நாள் முழுவதும் நைட்டிகப் பிரமச்சரியம் மேற்கொள்ளலானார். தம்முடைய நெருங்கின குடும்ப உறவினரோடு கூடப் பந்த பாசத்தை விலக்கி வாழ்ந்து வந்தார்.

1868 ஆம் ஆண்டு, நாவலர் வெளியிட்ட விஞ்ஞானத்தில், அவரின் இளமைக்காலத் தியாக உணர்வுகளும் இலட்சியங்களும், வாழ்வின் நோக்கங்களும், தெளிவாக அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்விஞ்ஞாபனத்தின் ஒரு சில பகுதிகள் கீழே தரப் பட்டுள்ளன.

"நான் ஐய வருடம் முதலாக பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஸ் வித்தியாசாலையிலே இங்கிலிஸ் கற்றேன். பிலவ வருடம், பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனானேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாக இருக்கவும், அவர்களிடமிருந்து பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும் மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருடம், புரட்டாதி மாதம் பரித்தியாகஞ் செய்தேன். என்னோடு இங்கிலிஸ் கற்றவர்களுள்ளும், எனக்குப் பின் இங்கிலிஸ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள், தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்க கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு, முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்குமென்றிந்ததும், அஃதில்லாமையினால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும்; உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத்திரம் கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்ந்த பொழுதும், அதையும் நான் விரும்பவில்லை... நான் இவ்வாழ்க்கையில் புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியும் வளர்த்தல் வேண்டு மென்றும் பேராசையேயாம்,"

நாவலர் தமது தொண்டு நலத்தைப் பேணுவதற்கு, எடுத்த முயற்சியும், அதற்காகச் செய்த தியாகங்களும் மேலே விளக்கப்பட்டுள்ளது.

1848ஆம் ஆண்டு இருபத்தாறாவது வயதில், பார்சிவல் பாதிரியாரிடமிருந்தும், யாழ்ப்பாணம் மெதடிஸ்த ஆங்கில பாடசாலையில் தாம் பார்த்து வந்த ஆசிரியத் தொழிலிலிருந்தும்; ஆறுமுகம் தம்மை விடுத்துக்கொண்டார். சுதந்திர மனிதர் ஆனார். பந்த பாசங்கள், கட்டுக்கள்; தளைகள் என்பவற்றிலிருந்து விடுதலை பெற்றால்தான் தான் சுயாதீனமாகச் செயல்படமுடியும் என்பதனை

நன்கு உணர்ந்திருந்தார். தொண்டு நலம் பேணுவதற்கு இது முக்கியமாகும். சைவசமயத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் கல்விக்கும், முழுநேரத் தொண்டனாக தன்னலமற்ற தலைவனாக ஆவதற்குக் கால்கோள் இடப்பட்டது. ஒரு சிறந்த தொண்டன்தான், சிறந்த தலைவனாகவும் விளங்கி மக்களை வழி நடத்த முடியும் என்பது அனுபவ உண்மை.

தொண்டு

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே," என்பது ஔவை வாக்கு. உலகின் பெரியவற்றுள் எல்லாம் பெரியது, தொண்டு. சைவநெறியின் மறுபெயர், திருத்தொண்டு நெறி ஆகும். சைவ நெறியில் தொண்டுக்குத் தலையாய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

"குரு லிங்க சங்கமம், மூன்றும் சிவ வழிபாட்டிற்குரியவை. இங்கு "சங்கமம்" என்பது தொண்டர் குழாம் – சிவனடியார் கூட்டம் ஆகும்.

பயன் கருதாது, கைம்மாறு எதிர்பாராது, பிறர் நன்மையின் பொருட்டுச் செய்யப்படுவது, தொண்டு, "நான், எனது" என்னும் அகந்தை, மமதைகளை நீக்கி; தன்னலமற்ற உள்ளம் உடைமை, தொண்டு நெறிக்கு அடிப்படையும் ஆதாரமும் ஆகும்.

சேக்கிழார் செய்தருளிய திருத்தொண்டர் பெரிய புராணம், அறுபத்து மூன்று நாயன்மார்களின் தொண்டு திறத்தை உலகத்தவர்க்கு விளக்கிக் காட்டுவதாக அமைந்துள்ளமை, அந்நூலின் சிறப்பாகும். நாவலர் பெருமான் அந்நூலின் பெருமையை உணர்ந்து, செய்யுள் நடையிலிருந்து அந்நூலை, வசனநடையில், பாமரமக்களும் விளங்கிக் கொள்ள வாய்ப்பாக, எளிமையாக்கித் தந்த தொண்டு; சமய சமூக நோக்குக் கொண்டது. சைவமக்கள் ஒவ்வொருவரும், தொண்டு உள்ளம் கொண்டவராகத் தொண்டு செய்து வாழவேண்டும், என்னும் உயர்நோக்குடன் ஆகும். தொண்டு மனம் சித்திக்குமேயானால் மனிதரின் மிண்டுமனம், மறைந்து விடும். தன் முனைப்பு நீங்கி விடும்.

சைவத்தின், சமய, சமூக நோக்கின் பிழிந்த சாரம் தொண்டு ஆகும். தொண்டு ஒரு விழுமியம்; அத்துடன் அது ஒரு வாழ்க்கை நெறி. நாவலர், சிவதொண்டு நெறியையே தமது வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்தார்.

"தொண்டு" என்பது பற்றில்லாத வினையாகும். தொண்டு, இறைவனை விசாரித்து, ஒப்புதல் பெற்று, "நான் செய்கிறேன்." என்ற உணர்வை நீக்கி; "எல்லாம் இறைவன் செயல்" என எண்ணிச் செய்யப்படுகின்ற இறைபணியாகும். தொண்டு மூலம், பிறரின் இடர் கழைதல்; அபிவிருத்தி; மறுமலர்ச்சிப் பணிகள் என்பவற்றில், சிரத்தையுடன் ஈடுபடுதல், அறம் தொண்டுக்கு அடிப்படை அன்பும், கருணையும் ஆகும். இறையுணர்வும், அறநெறியில் நின்று வாழ்வதும், அதற்கு ஆதாரம்.

தொண்டரின் சிறப்பு:

- தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.
- அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து சால்புகளையுடைய சான்றோர்.
- அடக்கம், பணிவு, பொறுமை, சகிப்புத்தன்மை, இன்சொல் – தொண்டரின் அணிகலன்கள்.
- நெஞ்சில் உரம், நேர்மைத்திறன், தூய்மை உடையவர்.
- அன்புவழி, அறிவுவழி, அறவழி, அஹிம்சை வழி, அவர்களின் வழிகள்.
- ஆன்மீகவாதி
- நற்சிந்தனை, நல்லொழுக்கம், நன்னடத்தை, நற்பேச்சு நற்செயல் – இவற்றை உயிரினும் மேலாக ஓம்பி வருபவர். முன் மாதிரியாக நடந்த காட்டுபவர்கள்.
- செயல்வீரர், கரும வீரர், சாதனையாளர்
- முரண்பாடுகளைத் தீர்ப்பதில் சாமாதான வழியைப் பின்பற்றுபவர்கள்.
- உடன்பாட்டுச் சிந்தனையாளர்; எதிர்மறைச் சிந்தனைகளை விலக்குபவர்கள்.
- அக வாழ்வு, புறவாழ்வு, பொது வாழ்வு என்பவற்றில் தூயர்கள்; நடுவுநிலை பேணுபவர்கள்; தமர், பிறர் என்ற வேற்றுமையுணர்வு அற்றவர்கள்.
- சத்தியம், அஹிம்சை விரதிகள்
- "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நாவுக்கரசர் அருள் வாக்கினைத் தாரக மந்திரமாகக் கொண்டவர்.
- நீதி தொண்டர்களின் உயிர்மூச்சு. நீதி வழுவாநெறி முறையில் தமது வாழ்க்கையை இட்டுச் செல்பவர்கள்.
- சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள். சித்தமலம் அறிவித்துச் சிவம் ஆனவர்கள். அன்பே சிவம், உண்மையே சிவம், நீதியே சிவம், நன்மையே சிவம், அழகே சிவம் எனச் சிவமயம் ஆனவர்கள்.
- சிவம் எங்கும் ஊடுருவி நிற்கின்றது. சிவதொண்டர்கள் சிவானுபவத்தை எங்கும் பெறுகிறார்கள். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலர் வாக்குக்கு இணங்க ஒருமையுணர்வு உள்ளவர்கள்.

அதனால், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

நாவலர் பெருமான் கண்ட தொண்டுநெறி

நாவலரின் மக்கள் பணிகள், தொண்டுகள், சேவைகள் என்பன பன்முகப்பட்டனவாக அமைந்திருந்தன. அவையாவன சைவசமய மறுமலர்ச்சியும் விருத்தியும்; தமிழ்மொழி விருத்தி, கல்வி விருத்தி; சமூக நலம்; மானுடம்; அரசியல் – பொருளாதார விருத்தி என்பன சார்ந்தன.

நாவலரின் வாழ்க்கைக் குறிக்கோள்கள், பின்வருமாறு:

- சைவசமய விருத்தி; தமிழ் மொழி விருத்தி; இவையிரண்டின் விருத்திக்கும் கருவியாகிய கல்வி விருத்தி; சமூக, பண்பாட்டுக் கலாசார ஒழுக்க விருத்தி என்பன இவையாவும் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ், சீர்குலைந்து, மங்கி மறையும் நிலையில் இருந்தன.
- ஒருநாடு அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்னர், சமய, மொழி, கலாசார உணர்வு பெற்றால்; விடுதலை முழுமை பெறும் எனத் திடமாக நம்பினர். அதற்காக முழுநேரத் தொண்டனாக, உழைத்தல்.
- தன்னால் உருவாக்கப்பட்ட சைவசமய, தமிழ் மொழி, கல்வி, மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்துதல்.
- திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு, சிவத்தொண்டர் அணியை நிறுவுதல்; பயிற்சியளித்தல்.
- தமது குறிக்கோள்களை அடைவதற்கு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வரைதல்.
- சைவசமய, தமிழ் மொழி, கல்வி மறுமலர்ச்சியின் பொருட்டு, சைவப் பிரசங்கம் செய்தல், புராண படன முறைமையை மீளவும் நடைமுறைப்படுத்தல்.

- தமிழ்க் கல்வி விருத்திக்கு, ஊர்கள் தோறும் பாடசாலைகள் நிறுவுதல்; கற்று வல்ல ஆசிரியர்களை நியமித்தல்.
- தாய்மொழிக்கல்வி, ஆங்கிலக் கல்வி (சைவசமய சூழலில்) இலவசக் கல்வி (அன்னம், வஸ்திரம் இருப்பிடம் மற்றும் பாடநூல்கள் என்பன இலவசம்); எல்லோர்க்கும் கல்வி இவற்றை நடைமுறைப்படுத்துதல்.
- மரபுத் தமிழ்க் கல்வி விருத்திக்கு, காவிய பாடசாலைகள் அமைத்தல். சைவத் தமிழ் மரபுக் கல்வியை ஊக்குவித்தல்.
- ஆலயங்களில் இடம் பெறுகின்ற ஆகம விதி, முறைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளை நிறுத்தி; ஆகம முறைப்படி நித்திய, நைமித்தியக் கிரியைகள், பூசை வழிபாடுகள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளல். முக்கியமாக ஆலயங்களில் மிருகபலி; வாண வேடிக்கைகள் மற்றும் தாசி நடனங்கள் போன்ற கேளிக்கைகள்; திருமுறைகள் சாராத பாடல்களை ஆலயங்களில் பாடுதல் – இவை ஆகமங்கள் விதிமுறைகளுக்கு விரோதமானவை. இவற்றை நிறுத்துதல்.
- சைவ சமயம் சார்ந்த பிரபுக்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், ஆலய குருமார், பூசகர்கள் மற்றும் வழிபடுவோர் ஆகியோரிடையே காணப்பட்ட முறைகேடுகள், தகாத நடத்தைகள், பஞ்சமாபாதகச் செயற்பாடுகள், சைவப் பண்பாட்டு, ஒழுக்க மீறல்கள் என்பவற்றைக் கண்டுபிடித்து; கண்டனங்கள், விஞ்ஞாபனங்கள் வெளியிடுதல்.
- சைவசமயிகளை, மதமாற்றம் செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு, எதிர் நடவடிக்கை எடுத்தல்.
- சைவத் தமிழ் மக்களின் பொருளாதார, அரசியல் கலாசார, சமூக மேம்பாடுகளுக்காக உழைத்தல்.

அறியாமையே, எல்லா இடர்பாடுகளுக்கும் – சமூக உயர்வு தாழ்வுகள்; சாதிசமயப் பூசல்கள்; மதமாற்றங்கள் உட்பட மூலகாரணம் என்பதை உணர்ந்த நாவலர், ஒரு கற்றோர் சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்காக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வரைந்தார்; செயற்படுத்தும் நடவடிக்கைகளிலும், அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்.

நாவலர் வகுத்த ஐந்தாண்டுத் திட்டம்

"நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடைய, இருபதின்மர் வளர்த்த பிள்ளைகள் பரீட்சை செய்து வருடந்தோறும் தேர்ந்தெடுக்கப்படுவர். பிறப்புப் பத்திரத்துக்குப் பதிலாக, அவரவர் சாதகமும் பார்க்கப்படலாம். உயர்வாகிய கருவி நூல்களும், சமய சாத்திரங்களும் ஐந்து வருடகாலம் கற்பிக்கப்படும். ஐந்து வருடங்களில் நூறு மாணவர்கள், இருபதின்மர் கொண்ட ஐந்து வகுப்பினராய், நாவலர் கலைக்கழகத்திலே இருப்பர். வருடந்தோறும் ஐந்து வருடப் பயிற்சி பூர்த்தியான இருபதின்மர் வெளியேற, வேறு புதிய இருபதின்மர், பரீட்சை செய்து சேர்க்கப்படுவர்.

வருடந்தோறும் கற்று வெளியேறும் இருபதின்மரில் ஒரு பகுதியார், சமயப் பிரசாரகராகவும்; மற்றையோர் கற்று வல்ல உபாத்தியாயர்கள் ஆகவும் பணியில் அமர்த்தப்படுவர். இவர்களுக்குத் தொழில் வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாவலரின் தூரதிருட்டியும், செயல்திறனும், தொண்டு நலமும், சிந்திப்பதற்கும் போற்றுதலுக்கும் உரியன.

மட்டக்களப்பு மாவட்ட இந்துக் கோயில்களின் கட்டமைப்பு

மட்டக்களப்பு மாவட்ட இந்துப் பண்பாட்டு மரபின் தனித்துவத்திற்கு, இம்மாவட்டமெங்கும் நிறைந்துள்ள சிறியனவும் பெரியனவுமாகிய கோயில்களே சான்று பகருகின்றன. பண்பாட்டு வேர்கள் ஆழமாகப் புதைந்து போயிருக்கும் நிறுவனங்களாகக் கோயில்களைக் குறிப்பிடலாம். மட்டக்களப்பு மாவட்டத்தின் திருக்கோயில்களை பல்வேறு கட்டமைப்பில் வகைப்படுத்தமுடியும். இதுவரையிலான வகைப்படுத்தலில் சிவனாலயம், விஷ்ணு ஆலயம், விநாயகர் ஆலயம், சக்திகோயில்கள், முருகன் ஆலயம் ஏனைய பிற ஆலயங்கள் என தெய்வீக அடிப்படையிலே வகுக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது.

ஆயினும், மட்டக்களப்பு மாவட்டச் சமூக வரலாற்றியலுடன் தொடர்பான வகையில் மாவட்ட ஆலயங்களை வகைப்படுத்துகையில், மட்டக்களப்பு பிரதேச இந்துப் பண்பாட்டின் தனித்துவமான பண்புகள் பலவற்றை அவதானிக்க முடியும். மட்டக்களப்பு பிரதேச இந்துக் கோயிற் கட்டமைப்பினைப் பின்வரும் அடிப்படையில் சுருக்கமாக நோக்கமுடியும்:

1. மட்டக்களப்பு பிரதேச புராதன காலத்தனவும் சிதைந்த சிவாலயங்களும்.
2. தேசத்துக் கோயில்கள் எனப் புகழப்படுபவை.
3. இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியின் ஊடாக வளர்ச்சிபெற்ற இந்துக் கோயில்கள்.
4. சிற்றரசர்களின் பரிபாலனத்திற்குட்பட்ட ஆலயங்கள்.
5. தொழில்சார் நிலையங்களில் முக்கியத்துவம் பெற்ற கோயில்கள்.
6. கிராமியக் கோயில்கள் என வகைப்படுத்தலாம்.

இவ்வாறு திருக்கோயில்களின் வரலாறுகளை வகைப்படுத்தும்போது சாதிகளின் வரலாறுகளுடனும், ஊர்ப்பெயர் வரலாறுகளுடனும் தொடர்பான வகையில் ஆலயங்கள் தொடர்புபட்டிருப்பதைக் காண்கிறோம்.

மட்டக்களப்பு பிரதேச கோயில்கள் பற்றிய ஆய்வுகள் சமூகவியல் பண்பாட்டு இருப்பை மேலும் வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன. பிராமணர்கள் கிரியைகள் செய்யும் கோயில்கள், கப்புகனார் பூசை செய்யும் மண்டூர் கோயில், பூசாரிமார் சடங்கு செய்யும் கோயில்கள், சைவக் குருமாரின் பரிபாலனத்திலுள்ள கோயில்கள், ஊர்ப்பெரியவர்கள் பூசை செய்யும் கோயில்கள் எனப் பலவகையிலும் காணப்படுகின்றன. இவற்றோடு கிராமியக் கோயில்களில் அடங்கும் பெரியதம்பிரான், வீரபத்திரர், வைரவர் கோயில்களும் இதில் அடங்கும்

- பெ. பேரின்பராசா.

(நன்றி :- மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2003)

இந்து சமயத்தில் ஆறுமுகநாவலரின் எழுச்சியும் வேத சிவாகமநெறியின் மறுமலர்ச்சியும்

கலாநிதி பிரம்மஶ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா
சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர்.
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்

ஆறுமுகநாவலர் பெருமானைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் "நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே எல்லவரும் ஏத்தபுராண ஆகமங்கள் எங்கே பிரசங்கம் எங்கே ஆத்தனறிவெங்கே அறை" என்று சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் மேற்கண்ட ஆதங்கப்பாடல் யாருக்கும் நினைவிற்கு வராமல் போகாது.

யாழ்ப்பாணம் - நல்லூரில் நாவலர் பெருமான் வாழ்ந்திருந்த அந்த 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக் காலகட்டத்தில் அவ்வேளை சைவமதமும், சைவத்தமிழ்க் கல்வியும், சைவப் பண்பாடும் எதிர்நோக்கிய இடர்பாடுகளும் கற்றறிந்தோர் நன்கு உணர்ந்த ஒன்றே.

கிறிஸ்தவ மிஷனரிமாருடன் ஆசிரியப் பணிபுரிந்து கிறிஸ்தவ வேத நூலான விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்த ஆறுமுக நாவலர் கிறிஸ்தவமதத்தைப் பரப்ப மேற்கொண்ட உபாயங்களையே தாமும் பின்பற்றி சைவ சமய விழிப்புணர்வையும் சமயம் சார்ந்த தமிழறிவையும் பரப்ப மேற்கொண்ட அயராத பணிகள் காலத்தால் மறக்கமுடியாதவை.

ஆரம்பத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் மூலம் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கும் முறையை ஆரம்பித்தல், சைவத் தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்து இலவசமாக கல்வி கற்பித்தல், சைவசமயம் மற்றும் தமிழ் மொழி ஆகியவற்றுக்கான நூல்களை எழுதிப் பதிப்பித்து அவற்றைச் செவ்வனே கற்பித்தல், சமயக் கல்வியைக் கட்டாய பாடமாக்கியமை, முறைசார்ந்த கல்வி ஒருபுறமானதால் துண்டுப்பிரசுரங்கள், ஆலய பிரசங்கங்கள் மூலமான முறைசாராக் கல்வியை சிறப்பாக வழங்கியமை, அதிசிறந்ததோர் மாணவர் பரம்பரையை உருவாக்கியமை போன்ற அரும்பெரும் காரியங்களை தன்னலம் கருதாது ஆற்றிய புகழ் பூத்த பெருமகன் ஆறுமுகநாவலர் அவர்களின் கல்வி சமூக, சமயப்பணிகள் விஸ்தாரமானவை.

கல்வியின் முக்கிய நோக்கம் நல்லொழுக்கத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுப்பதாகும் என்ற தீர்க்கமான கொள்கையைக் கொண்டிருந்த நாவலரின் கல்விப் பணிகள் குறிப்பிடத்தக்கன.

தமிழ் உரைநடையின் தந்தை

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் தமிழ் மக்கள் நல்ல உரைநடை எழுதத் தொடங்கினர். அப்பணி செய்தவர்களில் முதன்மையானவர் ஆறுமுகநாவலரே. அவர் செய்த தமிழ்ப் பணியும் சமயப் பணியும் காலத்தால் செய்த அரும்பெரும் செயற்பாடாகும்.

ஏட்டிலிருந்த பல பழந்தமிழ் நூல்களை, முதன் முதலாக அச்சு வாகனம் ஏற்றினார். அந்த துறையில் பின்பு உழைத்தவர்களுக்கு அவரே வழிகாட்டியானார். செய்யுளில் இருந்த பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றை உரைநடையில் எழுதினார். அவர் எழுதிய உரைநடை நூல்களுக்கு கணக்கே இல்லை. தமிழில் முதன் முதலாகக் குறியீடுகள் போட்டு உரைநடை எழுதியவர் நாவலரே. செய்யுளில் இருந்த "நன்னூற்றுகாண்டிகை உரை" என்ற நூலை "இலக்கணச் சுருக்கம்" என்ற பெயரில் உரைநடையில் எழுதி எல்லோரும் தமிழ் இலக்கணம் படித்துப் பயன் பெற வழிசமைத்தார்.

தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காக அவர் எழுதிய "பாலபாடம்", சைவத்தைக் கற்பதற்காக அவர் எழுதிய "சைவவினா விடை" என்பன அந்தக் காலத்திற்குப் புதுமையான நூல்கள். உரையாசிரியர்களது உரைநடை போலன்றி நாவலர் எழுதியது எளிய, இனிய தமிழ் நடை. அதனாலேதான் தமிழ்கூறு நல்லுலகம், அவரைத் "தமிழ் உரைநடையின் தந்தை" என்று போற்றுகின்றது.

வேத சிவாகமநெறி

சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை எனவும் ஐந்தாம் குரவர் எனவும் சிறப்பிக்கப்பட்டுவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமயத்திலே வேதசிவாகம நெறியால் வழுவா தொழுங்கும் சைவசமய பிரசாரகராவார்.

சமய தீட்சை, விஷேட தீட்சை, நிருவாண தீட்சை, ஆச்சார்யா அபிஷேகம் என்னுமிவைகளை பெற்றுள்ளவர்கள், சிவதீட்சையில்லாத வைதிகப் பிராமணர் கையாலேயே விபூதி வாங்குதலைக் கண்டு இது சிவாகம விரோதமென்று துணிந்து அதனை நீக்கக் கருதி அவர்களிடத்தே விபூதி வாங்காத ஒரு நியமத்தை ஆறுமுகநாவலர் கொண்டிருந்தார்.

ஆதலால் சிவதீட்சையுடையோர் அ.்.தில்லாதாரை வணங்குதலும், அவர்களைச் சிராத்தம் முதலிய பிதிர் காரியங்களுக்கு வரிதலும், அவர்களின் கையாலே விபூதி வாங்குதலும், அவர்களைக் கொண்டு சிவாகமப் பிரமாணங்களுடன் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப் பெற்ற கோயில்களிலே பூசை, திருவிழாக்கள் செய்வித்தலும் பிறவுமாகிய இவைகளெல்லாம் வேத சிவாகம நெறிகளுக்கு விரோதமென்பதையும், இப்படிச்

செய்வோர் யாதொரு பயனையும் அடையமாட்டார்கள் என்பதையும் ஆறுமுகநாவலர் வலியுறுத்தி வந்ததுடன், தனது பிரசாரங்களிலே ஆணித்தரமாக சொல்லியும் வந்தார்.

ஆறுமுகநாவலரின் பிரசாரங்கள் எழுச்சி பெற்று வரும் காலத்தில் குறிப்பாக ஈழநாட்டிலே வாழ்ந்த அந்தணர்கள் சமூகமும் வைதிகநெறி, சிவாகமநெறி என இரு சம்பிரதாயங்களை வலியுறுத்தி முன்னெடுத்து வந்தது. வேதநெறியால் வந்த வைதிகப் பிராமணர்கள் சிலர் தம்மிடத்திலே விபூதி வாங்காமையினால் அவர் மேற் கோபம் கொண்டு, புறம்பே நாவலர் பெருமானைத் தூஷித்தார்கள். அத்துடன் நில்லாது சிவபெருமானின் திருமேனியையும், ஆன்மாக்களுக்கு மலத்தை கெடுத்து ஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுக்கும் இயல்பினையுடைய சிவாகமங்களையும் நிந்தித்தார்கள். அவர்கள் செய்யும் நிந்தைகளைச் சில பிரபுக்கள் (அக்கால அரசியல் தலைவர்கள்) கேட்டு, மேலும் சிவாகம நெறியை நிந்தை செய்யும்படியும் வைதிகப் பிராமணர்களை ஏவி விட்டார்கள்.

நாவலரின் செயற்பாடு

சிவாகம நிந்தையையும், சிவனடியார் நிந்தைகளையும் ஒருபோதும் பொறுக்கமாட்டாத சைவப்பிரசாரகரான ஆறுமுகநாவலர், துந்துபி வருடம் மாசி மாதம் பத்தொன்பதாம் திகதி (1862) தமது வித்தியாசாலையிலே வேதம் பொது நூலென்றும், ஆகமம் சிறப்பு நூலென்றும் வைதிக நெறிமார்க்கத்தில் ஒழுகுவோர் புண்ணிய லோகங்களை அடைவார்களென்றும், சிவாகமநெறி மார்க்கத்தில் ஒழுகுவோர் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்திகளையும் சாயுச்சியமாகிய பரமுத்தியையும் அடைவார்கள் என்றும், அநேக பிராமணங்களை எடுத்துக்காட்டி விளக்கம் கொடுத்து பிரசங்கித்தார்.

ஆறுமுகநாவலரின் இப்பிரசங்கத்துக்கு விரோத மாகிய வைதிகப் பிராமணர் சிலர், பிரபுக்களை அணுகி, அவர்களுடைய உதவியினாலே வைதிக நெறியைப் பின்பற்றுபவர்களே உயர்ந்தவர்கள் என்றும், அவர்களை சிவாகம நெறியைப் பின்பற்றுபவர்கள் வழிபடலாமென்றும், தாங்கள் பரார்த்த பூஜை செய்ய விதியுண்டு என்றும், தம்மைப் பின்பற்றி வருகின்றவர்களுக்கு பிரபுக்களின் அனுசரணையுடன் பல வெகுமதிகளையும் கொடுத்து சிவாகம நெறியாளர்களுடன் விவாதங்களுக்கும் முன்வந்தார்கள். ஆனால் வைதிகநெறியில் வந்த அந்தணர்கள் விவாத சபையில் எழுந்து நாவலருக்கு முன் பேசுவதற்கு சக்தியற்றிருந்தார்கள்.

ஜனங்களின் தெளிவு

இவைகளை அறிந்த சாதாரண ஜனங்கள் நாவலர் சொல்வதே சாஸ்திர சம்மதமெனவும், தங்களை அலைத்தவர்களாகிய வைதிக பிராமணர்கள் சொல்வது அசம்மதம் எனவும் தெளிந்து கொண்டார்கள்.

தெளிவு ஏற்படவே வைதிகப் பிராமணர்களுக்கு கௌரவம், வந்தனம் செய்து வந்த அனேகர் அவற்றைச் செய்யாது விட்டார்கள். வைதிகப் பிராமணர்களை கொண்டு பரார்த்த பூஜை செய்வித்த கோயிலதிகாரிகளுள் அநேகர் வைதிகர்களை நீக்கி சிவப்பிராமணர்களைக் கொண்டு பூஜை செய்விக்கத் தொடங்கினார்கள்.

வைதிகப் பிராமணர் கையாலே விபூதி வாங்கும் வழக்கத்தையுடைய சிவதீட்சை பெற்ற அநேகமானோர், அவர்கள் கையாலே விபூதி வாங்காது விட்டார்கள். இந்தப் பிரசாரம் தீட்சைபெற்றோருக்கு மரியாதை நடத்தலையும், அவர்கள் சைவர்களாகவே வணங்கப்படுதற்கு யோக்கியதையுடையவர் என்று சிவாகமங்களிலே சொல்லப்பட்டிருத்தலையும் அறிந்த வைதீக நெறியை பின்பற்றி வந்த பிராமணர்கள் அநேகர் தீட்சை பெற்று சிவபூஜை செய்து சிவாகம நெறியைப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

வேத சிவாகமநெறிகள் சிறப்புப் பெற்றமை

ஈழநாட்டிலே சிவாகமநெறியும், ஆராய்ச்சியும், சிவபூஜை சிறப்பும், தேவார திருவாசக பாராயண ஓசையும், சிவபூஜைக்கு இன்றியமையாத சிறப்புள்ள பூஜை மணியின் ஓசையும் சிறப்புடன் பரவத் தொடங்கின.

வைதிக நெறிமார்க்கமும், சிவாகம நெறி மார்க்கமும் இணைந்து வேதசிவாகம நெறியாக சிறப்புடன் தழைத் தோங்கத் தொடங்கியது. சைவசமயத்தை பரப்புவதற்கென்றே திருவவதாரஞ் செய்த சைவப் பிரசாரகராகிய ஆறுமுக நாவலர் பெருமானும் வேதசிவாகம பேதமின்றி இரண்டையும் ஒன்றிணைத்து, வேதசிவாகம நெறிகளாக சிறப்புடன் வாழ வைத்து திறம்படச் செய்தவர் என்பது புலனாகின்றது.

ஆறுமுகநாவலரின் மறுமலர்ச்சியின் பண்புதான் சிவாலயங்களில் பண்ணுடன் திருமுறைகள் ஓதுவது, புராணபடன படிப்பது, கதாப்பிரசங்கம் செய்வது, வேதாகம சிவாகம நெறிகளை பிறழ விடாது கடைப்பிடித்து வருவது, விரத முறைகளை மேற்கொள்வது, சிவதீட்சை பெறுதல், உருத்திராக்கம் தரித்தல், சிவபஞ்சாட்சர ஜபம் செய்தல், தமிழ் சைவப் பணிகள் செய்வது என்பன மேலும் வலுப் பெற்று மறுமலர்ச்சியுடன், சைவமக்கள் தெளிவுடன் இந்துசமயத்தை பின்பற்றுவதற்கு முன்னெடுத்து சென்றவர் ஆறுமுகநாவலரே ஆகும். ஐந்தாம் குரவர் என சிறப்பிக்கப்படும் ஆறுமுகநாவலர் விட்டுச் சென்ற பணிகளை முன்னெடுத்து செல்வதுதான் இன்று நாம் எமது சமயத்திற்காக செய்யும் அரும் பணியாகும். ஆறுமுகநாவலரின் கனவுகளையும் நிஜமாக்குவதே இன்றைய செயற்பாடாகவேண்டியுள்ளது.

இந்து மாமன்றத்தின் பணிகள்

அகில இலங்கை இந்து மாமன்றமும் ஆறுமுகநாவலரை நன்றியுடன் நினைவு கூர்ந்து பல வருடங்களாக ஆறுமுகநாவலர் குருபூசைதினத்தை சமய பின்புலத்தோடு நடாத்தி வருகின்றார்கள். காலத்தின் தேவை கருதிய நூல்களை அச்சிட்டுவருதல், சைவசமயத்தவர்களுக்கு தேவையான அடிப்படைச் சமயதேவைகளை பெற்றுக் கொடுத்தல், சமய ஆராய்ச்சிகளையும், இந்து மாநாடுகளையும் நடாத்துதல், வசதியற்றோருக்கு முதற்கண் உதவி புரிதல், ஆலய நடைமுறை விடயங்களும், விழாக்களும் சரியாக செய்யப்பட வேண்டும் என்ற அவா, சிவாச்சாரியார்கள்

கல்வி கேள்விகளில் மேம்படவேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு, இந்துக்கள் அனைவரும் சிவதீட்சை பெற வேண்டும் என்ற நிலைப்பாடு, சைவ போசனங்களை உண்ண வேண்டும் என்ற பழக்கவழக்கங்கள் போன்ற அனைத்து செயற்பாடுகளுக்கும் மேம்பட உழைத்து வருபவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றமே என சொல்ல வேண்டும். இதனூடாக நாவலரின் பணிகள் விடுபடாது தொடர்கின்றன.

குறிப்பாக இந்து இளைஞர்களின் விழிப்புணர்வு மேலும் வலுப்படுத்த சிவதொண்டர் அணியினரை உருவாக்கி இளைஞர்களின் செயற்பாடுகளுக்கு நற்சிந்தனையோடு இடமளித்து இந்து சமயத்தை வலுப் படுத்திவருகின்றார்கள். தியானம், யோகாப்பியாசம், பிராணாயாமம், வாதப்பிரதிவாதங்கள், இளைஞர் அரங்கு விவாதமேடை, சமூகசமயப் பணிகள், தன்னலமற்ற நற்பணிகள் என எமது சமயத்தவர்களை அணைத்து குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் இந்து சமய விழுமியங்கள் வித்திட்டு செல்லும் பணிகளையும் ஆறுமுகநாவலர் வழியில் அவரின் பாணியில் வளர்த்து வருவது சைவத்தமிழ் உலகில் வரவேற்கப் படுகின்ற செயலாக அமைவதோடு சமய எழுச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் சிந்தனையூட்டும் செயற்பாடுகளாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நாவலர் பெருமான் பிரமாதி வருடம் கார்த்திகைத் திங்கள் 21ஆம் நாளன்று (05.12.1879) மகம் நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார். அந்த வகையில் இம்மாதம் (டிசெம்பர்) 2 ஆம் திகதி நாவலர் குருபூசை தினமும், 5 ஆம் திகதி நினைவு தினமும் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருடம் 136 ஆவது நினைவு தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லையில் உதித்த நாவலர் பெருமான்

சுவாமி விபுலானந்தர்

கிழக்கிலங்கை தந்த பேராசான் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர், யாழ் மண் பெற்றெடுத்த சைவத் தமிழ்க் காவலன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானைப் போற்றும் வகையில் சூடிய பாமாலை;

தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
தூநெறித் தமிழுரை யாளர்
நல்லியற் புலவர் இசைதரும் புலவர்
நாடக நவிற்றிய புலவர்
சொல்லியற் றொகைநூல் வானநூல் தருக்கம்
தோமறு கணிதநூல் முதலாம்
பல்கலைப் புலவர்க்கு உறைவிட மாகிப்
பரந்திசை யெய்தும்யாழ்ப் பாணம்

ஆரியர் ஆழி வேந்தரென் றவனி
புகழ்ந்துரை அளிக்கநல் லூரிற்
சீரிய செங்கோல் செலுத்திய வேந்தர்
சென்றபின் சைவநிந் தனைசெய்
பூரியர் ஆட்சி புக்கது கண்டு
பொறாதுபுண் ணியத்திசை நடந்த
நேரியல் ஞான விளக்கெனு முனிவன்
நிறைபுகழ் மரபுமேம் படவே!

தில்லைவாழ் கூத்தன் திருவரு ளுருவாம்
சீர்ச்சிவ காமசுந் தரியார்
எல்லையில் கருணைக் கொள்கல மாய
எழிற்சிவ காமியார் வயிற்றில்
நல்லைவாழ் கந்தன் அருளினால் நல்லைக்
கந்தர்தம் தவப்பய னாக
வில்லைநேர் நுதலார் கண்வலைப் படாத
மெய்த்தவன் மகவென உதித்தான்.

குலந்தரு செல்வன் அறுமுகப் பெயரும்
கோதில்சீர் ஒழுக்கமும் மருவி
நலந்தரு கல்வி கேள்வியால் நிறைந்து
நற்றமிழ் வடமொழி குடபால்
நிலந்தரு மன்னர் மொழியிவை யுணர்ந்து
நீடுசீர் முருகனே யென்ன
அலந்தவர்க் குதவி நினைந்தது முடிக்கும்
ஆற்றலும் பெற்றுயர் வடைந்தான்!

தன்னியல் புணரத் தலைவன தியல்பு
சாற்றிய சைவநூல் பலவும்
மின்னியல் சடையார் அருளினால் அச்சில்
மேவுதல் நலமெனத் துணிந்து
பன்னல மிகுந்த சென்னைமா நகர்க்குப்
படர்தர வெண்ணிநான் மறைகள்
துன்னிநின் றேத்துந் தொல்பதி தொழுது
தொலைவில்சீர் ஆவடு துறையில்

பாவலர் போற்றும் ஞானதே சிகரைப்
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர் கூட்டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவல ரெனும்பேர் தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகுந்தகும் என்ன

சொல்லுதல் வல்லான் சோர்விலன் அஞ்சான்
துணிவுகொள் சிந்தையான் அவனை
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம்மறைப் பொருட்கிலக் காகி
நல்லையி லுதித்த நாவலர் பெருமான்
நலந்திகழ் சென்னைமா நகரின்
எல்லையை நண்ணி இயற்கலை பரப்பும்
இயந்திரம் வாங்கிய பின்னர்

கருணையே யுருவாங் கண்ணுதற் பெருமான்
கழலினைப் பதிந்த வுள்ளத்தார்
அருணைமால் வரையின் சாரலிற் சின்னாள்
அமர்ந்தனர் திருமடத் ததிபர்
பொருணிறை தமிழன் புலத்துறை முற்றும்
புண்ணியர் தகவினை யெண்ணித்
தெருணிறை யுரவோய் ஈண்டு நீ வைகச்
சிந்தை செய் திடல்நலம் என்றார்.

தம்மை யீன்றெடுத்த யாழியல் நாட்டிற்
சைவமாஞ் சமயமும் புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பணிபல புரிதல்
இம்மையிற் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் பயந்த ஈழமா நாட்டின்
இணையிலாப் பெருநிதி யனையார்

கடிகமழ் கொன்றைத் தாரினார் அழகிற்
காதலுற் றுருகுமெய் யன்பர்
வடியிலை வேற்க ணரம்பையர் வரினும்
மதித்திடா ராதலின் விதித்த
படியினிற் றூய நெறிபுக நினைந்து
படிகலிங் கத்தினிற் றலைவன்
துடிமழுக் கரஞ்சேர் சுந்தர வடிவைத்
தொழுதிட எண்ணிய தூயோர்

நண்ணினர் வினைகள் நலிவுற அருளும்
நாவலந் தீவினை யடைந்து
புண்ணியந் திரண்ட உருவியல் ஞான
போதகா சிரியனைத் தொழுது
மண்ணினிற் பிறந்தோர் மனமய லகல
வளரொளிப் பிழம்பென நின்ற
விண்ணவர் முதலைப் பூசனை புரியும்
விதியினை மதியினிற் றெளிந்தார்

மன்னுமீ ழத்தை யடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசை தருமையம் பதியிற்
றொகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே ழிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவர்தாள் தொழுதார்
இன்றமிழ் வளர்த்தநா வலனார்.

உரையுணர் விறந்த தனிமுதல் கருணை
உருவுகொண் டுலகெல்லாம் பயந்த
வரைமகள் உவகை விழியினாற் பருக
மாதவர் வாழ்த்தொலி யெடுப்பப்
பரையுரு வாய மாமணி மன்றுட்
பதஞ்சலி யாதுநின் றாடும்
விரைகமழ் கொன்றைத் தாரினா ராடல்
விரும்பிவந் தமரரும் பணிவார்

அத்திற மாய தில்லையம் பதியில்
ஆகம அளவையாற் சமைந்த
வித்தகக் கோயிற் கோபுரங் கண்டார்
விழிகணீர் பெருகமெய்ம் மறந்தார்
பத்தர்சீர் பரவும் நல்லைநா வலனார்
பாரினிற் பன்முறை விழுந்தார்
அத்தரே யென்றார் அம்மையே யென்றார்
ஆடினார் பாடினார் அன்பால்.

மாமணி மன்றுட் டிருநடங் கண்டார்
மனநெகிழ்ந் துடையவர் பாதம்
பாமணி மாலைப் பனுவலாற் பரவிப்
பல்பகல் பிரிந்தகா தலனார்
தாமணி மையிலே வருதல்கண் டுவகை
தழைத்தமெல் லியலெனத் தளர்ந்தார்
பூமணிச் சிலம்பி னொலிசெவிப் படலும்
புதுமைசேர் மருட்கையுற் றெழுந்தார்!

அன்னையும் பிதாவுமான நாவலர் பெருமான்

ஆறுமுக நாவலர் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அன்னையாயும் பிதாவாயும் இருக்கிறார். தமிழ் அறிவை வளரச் செய்தலால் அவர் நமக்கெல்லாம் அன்னை: சமய அறிவை வளரச் செய்தலால் அவர் பிதா. அன்னையும் பிதாவுமான நாவலர் பெருமானை நாம் மறக்கலாகாது. நாவலர் சரித்திரத்தை நாங்கள் படிக்க வேண்டும். நாவலர் பெருமான் தந்த பெரிய புராண வசனம் சமய பக்தியை வளர்க்கும் ஒரு பண்டசாலை. அந்த பண்டசாலையில் பிரவேசிப்பதற்கு நாவலர் சரித்திரம் உபகாரமாயிருக்கும்.

-பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

சைவக் கல்விப் பாரம்பரியத்துக்கு வித்திட்டவர்

அந்தக் காலத்தில் பாடசாலை என கட்டுக் கோப்பு கிடையாத போது நம்மவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கக் காரணமாயிருந்தது ஒரு பாரம்பரியம். அதுவே நமது சைவக் கல்விப் பாரம்பரியமாகும். அது பெரியவர்களையன்றி அடக்கவொடுக்கமாக ஒழுகி அவரிடம் வரன்முறையாக எல்லாவற்றையும் கற்றறிதலாகும். ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சைவக் கல்வி மறுமலர்ச்சியின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர்களுள் நாயக மணியாக விளங்கியவர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களாவர்.

சைவப்புலவர் க.சி.குலரத்தினம்.

(நன்றி:- சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்-1985)

இந்தியா சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச உயர்நிலைப்பள்ளியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழா

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்

நல்லைநகர் நாவலர் பெருமான் 1858 ஆம் ஆண்டில் தனது முப்பத்தாறாவது வயதில் அரிய தமிழ் நூல்கள் சிலவற்றை அச்சிடுவதற்காக இந்தியா சென்றார். அத்தருணத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஏற்பாட்டிலும் தருமபுர ஆதீனத்தின் ஏற்பாட்டிலும் சைவப் பிரசங்கங்களைச் செய்து வந்தார். தமிழ் நாட்டில் மூன்று ஆண்டுகள் பத்துமாதகாலம் வசித்தார். இச்சந்தர்ப்பத்தை தமிழ்நாட்டில் பலர் பயன்படுத்தி நாவலரிடம் கற்றனர். நாவலரின் பேராற்றலை உணர்ந்துகொண்ட பலர் தமிழ்நாட்டிலும் சைவப்பிரகாச வித்தியாலயங்களை நிறுவவேண்டுமென வேண்டினர். நாவலர் சிதம்பரத்துச் சூழலில் சைவப் பாடசாலை அமையவேண்டும் என்ற சிந்தனையை முன் வைத்தார். தில்லைவாழ் அந்தணர்கள் மரபில் வந்தவர்கள் போதிய சமய அறிவு பெறாது இருப்பது கண்டு கவலையுற்றார். சிதம்பரத்துத் தீட்சிதர்கள் விடயமாக நாவலர் துண்டுப்பிரசுரமொன்றும் வெளியிட்டிருந்தார். இந்நிலையில் முதலில் சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலையை நிறுவவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். அதன் பொருட்டு பலநாள் சிந்தித்து பதினான்கு திட்டங்களை விளக்கி ஓர் அறிக்கையை வெளியிட்டார். ஆனால் சிதம்பரத்துக் கல்விநிலையம் நிறுவ தமிழகத்தில் பணம் சேரவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் பணம் திரட்டுவதற்கு 1862 ஆம் ஆண்டு பங்குனிமாதம் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்திற்கு வந்தார்.

யாழ்ப்பாணத்திலே தாம் நிறுவிய வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் சபையைக்கூட்டி சிதம்பரத்தில் வித்தியாசாலை ஒன்று ஸ்தாபிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்கினார். அக்கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் தங்களால் இயன்ற பொருளுதவி செய்ய முன்வந்தார்கள். இந்தியாவிலிருந்து திரும்பிய சில நாட்களில் பருத்தித்துறை சித்திவிநாயகர் கோயிலில் நாவலரின் தொடர் சொற்பொழிவு இடம்பெற்றது. அச்சொற்பொழிவிலும் சிதம்பரத்தில் பாடசாலை நிறுவுவதுபற்றி எடுத்துரைத்தார். சித்திவிநாயகர் அறங் காவலர்களும் புலோலியிலுள்ள சில வர்த்தகர்களும் நாவலரது சிதம்பரப் பாடசாலை உருவாக்கலுக்கு உதவ முன்வந்தனர். 1864 ஆம் ஆண்டு தமது நாற்பத்தி ஓராவது வயதில் சிதம்பரத்தில் வித்தியாசாலை தொடங்கும் ஆயத்தங்களுடன் தமது ஐந்தாவது இந்தியப் பிராயாணத்தைத் தொடங்கினார். சிதம்பரத்தில் பாடசாலை நிறுவும் பணி சிறப்பாக நடைபெற்றவேளை நாவலர் பெருமானுக்கு கூரைவேலைக்குப் போதிய பணம் கிடைக்கவில்லை. இணுவில் வேங்கடாசல ஐயர் என்பவர் நாவலர்மீது கொண்ட பற்றினால் கூரைவேலை யாவும் தானே பொறுப்பேற்றார். யாழ்ப்பாணத்திலிருந்து கூரைக்குரிய மரங்களைக் கொண்டு சென்று சிதம்பரத்துப் பாடசாலைத் திருப்பணியை நிறைவேற்றுவதில் வேங்கடாசல ஐயரின் பங்களிப்பு பேருதவியாக அமைந்தது என நாவலரது வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். 1864 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சிதம்பரம் சைவ வித்தியாசாலை திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழா டிசெம்பர் மாதம் 3ஆம், 4ஆம், 05ஆம் திகதிகளில் சிதம்பரத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

சிதம்பரத்தில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை திறப்பு

சிதம்பரத்தில் நாவலரால் தொடக்கப்பட்ட பாடசாலை தற்போது சிதம்பரம்நாவலர் மேல்நிலைப்பள்ளிஎன்றபெயரில்சிறப்பாக இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் நாவலர்பெருமானுக்கு உருவச்சிலை அமைக்க வேண்டும்என நீண்டகாலமாகப் பலர் சிந்தித்தபோதிலும் அப்பணி நிறைவேறவில்லை. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இந்தியாவில் நடைபெற்றபோது நல்லைநகர் நாவலர் பெருமானுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என சில அறிஞர்கள் குரல்கொடுத்தபோதும் சரியான பலன் கிட்டவில்லை. கவியோகி சுத்தானந்த பாரதியார் நாவலர் பெருமானுக்குச் சென்னையிலும் சிதம்பரத்திலும் நினைவாலயங்கள் எழுப்பவேண்டுமென அறைகூவல் விடுத்தபோதும் அவை பயன்தரவில்லை. நாவலர் பெருமான் உரைநடை இலக்கியத்தின் தந்தை என்றும், நாவலரிடம் தமிழ்நாடு நன்றிக்கடன் பெற்றதென்றும் கடந்த நூற்றி ஐம்பது ஆண்டுகாலமாக தமிழகத்து அறிஞர்கள் தமது ஆக்கங்களில் எழுதினார்களே ஒழிய நாவலரின் தொண்டினை நினைவு கூர்ந்து சரியானதொரு நினைவுச் சின்னத்தை நிறுவாதது கவலைக்குரிய விடயமாகும். தமிழ் அறிஞர் உ.வே. சுவாமிநாத ஐயர் முதல் இன்றைய தமிழக அறிஞர் வரை நாவலரது ஆற்றலை மெச்சுகின்றனர். தூய செந்தமிழ் நடையின் பிதாமகர் எனப் போற்றுகின்றனர். அத்தகைய பெருமகனாருக்கு அவர் உருவாக்கிய பாடசாலை வளாகத்தில் உருவச்சிலை இவ்வாண்டு திறந்து வைப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சுவாமி ஞானப்பிரகாசர் சிதம்பரத்தில் வெட்டிய திருக்குளத்திற்கு அருகில் நாவலரால் உருவாக்கப்பட்ட சேக்கிழார் திருக்கோயிலிலிருந்து நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலமாகக் கொண்டுவரப்பட இருப்பது பெருமைக்குரிய விடயமாகும். நாவலர் மேல்நிலைப் பள்ளியில் நீண்டகாலம் அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்று வாழும் தொண்ணூறு வயது நிரப்பிய ஸ்ரீமான் திரு. க. சுவாமிநாதன் அவர்கள் நாவலர் பெருமானின் சிலையைத் திறந்து வைப்பது சிறப்பைத்தருகிறது. நாவலர்பெருமானின் நூற்றி முப்பத்தாறாவது குருபூசை தினமும் நாவலர் உயர்நிலைப்பள்ளியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவும் மூன்று தினங்கள் சைவத்தமிழ் மாநாடுபோல் இம்முறை கொண்டாடப்படுவது ஈழத்தமிழர்களுக்கு மகிழ்ச்சியையும் எழுச்சியையும் தரும் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளையினர் விழா ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். நாவலர் சிலை திறப்பு விழா, புனரமைக்கப்பட்டுள்ள நடுமன்றம் திறப்புவிழா, புதுப்பிக்கப்பட்ட பள்ளி விளையாட்டுத்திடல் மற்றும் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் திறப்பு விழா, நாவலர் புத்தகக் கண்காட்சி, முன்னாள் ஆசிரியர்கள்

பாராட்டு விழா, ஆதீனசுவாமிகள் மடாதிபதிகளின் ஆசி நிகழ்ச்சி, தமிழ்நாட்டு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், சிந்தனை அரங்கம் சிறப்புமலர் வெளியீடு எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகள் காசித்திருமடம் தெருவிலுள்ள சிவகாமி அம்மை கலையரங்கில் இடம்பெறவுள்ளது. டாக்டர். சு. அருள்மொழிச்செல்வன் தலைமையில் நாவலர் பாடசாலையில் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழா ஒழுங்குகள் நடைபெற்று வருகிறது.

சிதம்பரத்தில் நாவலரால் நிறுவப்பட்ட பாடசாலையில் ஈழத்து அறிஞர்கள் பலர் தலைமையாசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும் முன்பு பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. நாவலர் பாடசாலை நிர்வாகத்தில் நாவலர் வழிவந்த குடும்ப உறுப்பினர்களும் அவரது மாணாக்கர்களும் நாவலருக்குப்பின் நிர்வாகப்பணிகளை நிறைவேற்றினர். நாவலர் வாழும் காலத்தில் அவரது மாணாக்கர் வடகோவை சபாபதி நாவலர் அவர்கள் இப்பாடசாலையின் தலைமையாசிரியராக விளங்கி பாடசாலையை சிறப்பாக வழிநடத்தியமை சிறப்புக்குரிய விடயமாகும்.

"தன்னவரும் பிறருமென்று சாராமே நடுவுநிலை சார்ந்து நின்றே
அன்னவர்கள் வழுவியவை யஞ்சாது வெளிப்படுத்தி யறிவை யூட்டும்
முன்னவனே தமிழ்மக்கள் முதுநிதியே கற்பகமே முடியாக்கல்வி
மன்னவனே யெனவாழ்த்த வந்துதித்த நாவலன்றாள் வாழி வாழி"

(நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)

என்ற புலவரின் பாவரிக்கு தமிழ்மக்கள் கற்பகமாகக் கருதிய நாவலர் சூரிய சந்திரர் உள்ளவரை நிலைத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகி அம்மன் வழிபாடு

மட்டக்களப்பு பிரதேச மக்களால் வழிபடப்படும் சிறு தெய்வங்களுள் கண்ணகி அம்மன் முக்கியமானதொன்று. இந்த கண்ணகி அம்மன் வழிபாடு கி.பி.2ஆம் நூற்றாண்டளவில் சேர நாட்டில் கண்ணகிக்கு கோயில் எடுக்கப்பட்ட வேளையிலே, அவ்விழாவிற் கலந்துகொள்ளச் சென்ற கஜபாகு மன்னனால் இலங்கைக்கு அறிமுகமாயிற்று. பின்னர் சிங்கள மக்கள் மத்தியிலே பத்தினித் தெய்யோ வழிபாடாக பரிணமித்த இவ்வழிபாடு மட்டக்களப்பு தமிழ் மக்கள் மத்தியில் கி.பி.8ஆம் நூற்றாண்டளவில் இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத்திலேயே வேரூன்றத் தொடங்கியது.

மழை வளம் வேண்டலும் நோய் தீர்த்தலும் வழிபாட்டின் தேவைகளாக கண்ணகி அம்மன் வழிபாடு செல்வாக்குற்று, காலப்போக்கில் மட்டக்களப்பு பிரதேசத்திலே பல கோயில்களைப் பெற்றுக்கொண்டது. இங்கு வைகாசி பௌர்ணமித் திங்களிலே ஆரம்பிக்கும் திருவிழாக்களில் நிகழ்கின்ற சடங்கின்போது படிக்கப்படும் பலவகையான இலக்கியங்களுள் கண்ணகி வழக்குரை நூல் முதன்மைபெற்று விளங்குகின்றது.

- கலாநிதி செ.யோகராசா

மட்டக்களப்பில் வழிபாடுகள் யாவும் சடங்குகள் என்றே அழைக்கப்படும். சடங்கு நாட்களின் எண்ணிக்கை கோயிலுக்குக் கோயிலும், ஊருக்கு ஊரும் வேறுபடும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என இந்த எண்ணிக்கை அமையும். கண்ணகை அம்மன் கோயிலைப் பொறுத்தவரை ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது நாட்களில் சடங்குகள் நிகழும். வசதி படைத்த ஊரவர்கள் ஒன்பது நாள் சடங்கு செய்வார்கள். பெரும்பாலான ஊர்களில் ஐந்து நாள் சடங்குகளே தற்போது நிகழ்த்தப்படுகின்றன. இந்த நாட்களில் எல்லாம் பாடல்கள் பாடப்படுகின்றன. கண்ணகை அம்மன் கோயில்களில் வழக்குரை, கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியம், கண்ணகை அம்மன் அகவல், குளிர்த்தி, கண்ணகை அம்மன் கலியாணக்கால் சுற்றுக் காவியம் ஆகியவை படிக்கப்படும்.

முதலாம் சடங்கு தொடக்கம் இறுதிநாள் வரை கண்ணகி வழக்குரை கோயில்களில் கட்டாயம் பாடப்படும். முதலாம் நாள் கதவு திறத்தல் அன்றே இது ஆரம்பமாகும். கலியாணக்கால் சடங்கு நடக்கும் அன்று கலியாணக்காதை படிப்பு நடைபெறும். கண்ணகை அம்மன் சடங்கு இறுதிநாளன்று குளிர்த்தி நடைபெறும். கண்ணகை அம்மனின் கோபம் தணிவிக்கச் செய்யப்படும் சடங்கே குளிர்த்தி எனப்படும்.

-பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு

கண்ணகி அம்மன் வழிபாடு மட்டக்களப்பின் பிரதான தெய்வ வழிபாடாயிருப்பதுடன், அது ஒரு புராதன வழிபாடுமாகும். கண்ணகி அம்மன் வழிபாட்டு முறையை கேரளத்து உறவாலும், யாழ்ப்பாணத்து உறவாலும் ஏற்பட்ட ஒன்றாகும்.

மட்டக்களப்பில் 19ஆம் நூற்றாண்டுக்கு முன் தோற்றம்பெற்ற கண்ணகி அம்மன் கோயில்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஊர்சுற்றுக்காவியம், மழைக்காவியம், கூவாக்குயில், வசந்தன் முதலிய பாடல்கள் உதவி செய்கின்றன.

பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை கல்லாறெரிவில் மகிளூர்
செட்டி பாளையம் புதுக் குடி யிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக் குடா
அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்
ஆங்காங்கு நித்திய கல்யாணியாய் அமரும்
மட்டவிழ் பூங்குழல் மண் முனைக் கண்ணகையை
மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே!

என ஊர்சுற்றுக் காவியம் கூறுகின்றது. மேலும் பண்டைய கண்ணகி அம்மன் கோயில்கள் இருந்த ஊர்களாக நீலாவணை, கொக்கட்டிச்சோலை, கன்னங்குடா, ஈச்சந்தீவு, தாண்டவன்வெளி, களுவாஞ்சிக்குடி முதலிய ஊர்களும் மேற்படி பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

20ஆம் நூற்றாண்டுக்கு முன் மட்டக்களப்பின் எல்லாப் பகுதிகளிலும் இருபதுக்கு மேற்பட்ட கண்ணகி அம்மன் கோயில்கள் இருந்தன. 1964ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநிலத்தில் இருபத்தைந்து கண்ணகி அம்மன் கோயில்கள் இருந்ததாக பண்டிதர் வீ.சீ.கந்தையா கூறுவார். தற்பொழுது கிட்டத்தட்ட ஐம்பது கண்ணகி அம்மன் கோயில்கள் இம்மாநிலத்தில் உள்ளன. எனவே, 20ஆம் நூற்றாண்டில் அதிகமான கண்ணகி அம்மன் கோயில்கள் இங்கு தோற்றம் பெற்றுள்ளன. இவையெல்லாம் கிராம மக்களின் ஒன்றிணைந்த விருப்பத்தின் பேரிலேயே தோற்றம் பெற்றவையாகும்.

- பி. மகேஸ்வரலிங்கம்.

(நன்றி :- மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2003)

மட்டக்களப்பு பிரதேசத்தில் மாரியம்மன் வழிபாடு

மட்டக்களப்பு தமிழகத்தில் மாரியம்மன் வழிபாடானது புராதன காலந்தொட்டு நிலவி வருகின்றது. கிராமம், நகரம் என்ற பாகுபாடு இன்றி அனைத்து இந்து மக்களாலும் சாதி பேதமின்றி வழிபடப்பட்டு வருகின்ற ஒரு தெய்வமாக மாரியம்மன் காணப்படுகிறது. விவசாயம் செய்கின்ற மக்களுடன் இத் தெய்வம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. விவசாயம் செய்ய மழைகொடுக்கும் கடவுளாக மாரி என்ற தெய்வத்தை அவர்கள் வணங்குகிறார்கள். அத்தோடு அனைத்து மக்களும் அம்மை நோய்க்குரிய கடவுளாகவும் இத்தெய்வத்தினை வணங்குவதைக் காணலாம். எனவே, மாரியம்மன் தெய்வம் வளத்திற்குரிய கடவுளாகவும் நோய் தீர்க்கும் கடவுளாகவும் காணப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் பல மாரியம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு நகரிலேயே ஊறணி கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில், கோட்டமுனை புன்னையம்பதி மகாமாரியம்மன் கோயில், தாமரைக்கேணி முத்துமாரியம்மன் கோயில், அமிர்தகழி முத்துமாரியம்மன் கோயில், கூழாவடி முத்துமாரியம்மன் கோயில் போன்றவை முக்கியமானவை.

இவ்வாலயங்கள் அனைத்திலும் இரண்டு முறைகளில் பூசைகள் நடைபெறுகின்றன.

1. ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறை (வேதாகம முறை)
2. ஆகமம் சாராத வழிபாட்டு முறை (பத்ததி முறை)

பெரும்பாலான ஆலயங்களில் பத்ததி வழிபாட்டு மரபிலே சடங்குகள் நிகழ்கின்றன. ஆனாலும் ஒரு சில ஆலயங்களில் திருவிழாவும் செய்யப்படுகின்றது.

மட்டக்களப்புத் தமிழகத்தில் பெருவாரியாகவுள்ள மாரியம்மன் ஆலயங்களில் ஆகமமுறை சாராத பத்ததி வழிபாட்டு மரபிலே சடங்குகள் நடைபெறுகின்றன. இவ்வழிபாட்டு முறையில் பிராமணியச் செல்வாக்கோ, வேதாகமத் தாக்கங்களோ இல்லை என்றே கூறவேண்டும். இவ்வழிபாட்டினை பரம்பரை பரம்பரையாக உருவாகின்ற பூசாரிமார்களே செய்கின்றனர். இவர்கள் பத்ததி முறையில் தனது அனுபவம் ஆற்றல் திறமை போன்றவற்றின் உதவியுடன் தனது மந்திர வலிமையினாலும் கடவுளர்க்கு வழிபாட்டைச் செய்வது வழமை. மாரியம்மன் பத்ததியைக் கொண்டுதான் பூசைகளை நிகழ்த்துவர். 'பத்ததி' என்றால் எந்தக் கடவுளர்களுக்கு எவ்வாறு பூசைகளை நிகழ்த்துவது என்பனவற்றைக் கூறுவதுடன், அதனுடன் தொடர்புடைய மந்திரங்களையும் விதிமுறையாக கூறுகின்ற அகவற்பாவினால் அமைந்த நூல் அல்லது ஏடு எனப்படும்.

மாரியம்மன் வழிபாட்டு முறையானது வருடத்திற்கு ஒருமுறை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி குளிர்த்தி அல்லது பள்ளயத்துடன் முடிவடையும். இந்தக் கோயில்களில் ஐந்து அல்லது ஏழு நாட்கள் சடங்கு நிகழும். இந்த நாட்களின் எண்ணிக்கை ஆலயத்தின் பொருளாதார வரும்படிக்கு அமைய தீர்மானிக்கப்படும். இந்த சடங்கு ஆனிப் பூரணையில் முடிவடையும். மாரியம்மனுக்கு வருடத்திற்கு ஒருமுறை சடங்கு செய்வதால் ஊரில் பஞ்சம், பட்டினி, நோய்கள் ஏற்படாது என மக்கள் நம்புகின்றனர்.

மட்டக்களப்பு நகரில் சில மாரியம்மன் ஆலயங்களில் ஆகமம் சார்ந்த வழிபாடு நிகழ்வதையும் காணலாம். உதாரணமாக கோட்டைமுனை புன்னையம்பதி மகாமாரியம்மன் ஆலயத்தை குறிப்பிடலாம். இவ்வாறு மாற்றம் பெற்றாலும் மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் பத்ததி (ஆகமம் சாராத) வழிபாட்டு முறையிலே சடங்குகள் இன்றும் நிகழ்ந்து வருவதைக் காணலாம்.

- த. சுரமஞ்சரி

(நன்றி :- மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2003)

கிழக்கிலங்கையின் வேளாண்மைப் பணிக்கு நாவலர் பெருமானின் பங்களிப்பு

மனிதன் உயிர்வாழ்வதற்கு உணவு மிகவும் அவசியம். கொடிய பஞ்சத்தின் தாக்கத்தினால் நாவலர் பெருமான் இதனை உணர்ந்தார். 1872 முதல் 1877 வரை இலங்கையின் தேசாதிபதியாகவிருந்த சேர் வில்லியம் கிறகெரி என்பவர் இந்நாட்டின் விவசாய உற்பத்தியிலும் அக்கறை செலுத்தினார். திருகோணமலைப் பகுதியிலுள்ள கந்தளாய் குளத்திற்கு அண்மையிலுள்ள காட்டுப் பிரதேசத்தை சுதேசிகளின் உதவியுடன் பயிர் விளையும் நிலமாக விருத்திசெய்ய நினைத்தார். நாவலருடைய பேரூக்கத்தினால் 'யாழ்ப்பாண - மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம்' என்ற பெயருடன் சங்கமொன்று நிறுவப்பட்டது. இச்சங்கம் அரசாங்கத்திடமிருந்து கந்தளாய் பிரதேசத்திலுள்ள நிலத்தைப் பெற்று அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டது. பங்கு ஒன்று பத்து ரூபா வீதம் 3000 பங்குகளை விற்கும் உரிமையை அரசாங்கத்திடமிருந்து பெற்றது. இந்த சங்கத்தை உருவாக்கி வேளாண்மையை அபிவிருத்தி செய்யும் பணியில் நாவலரும் ஈடுபட்டார். பொதுமக்களை ஒன்றிணைத்து இதன் நன்மையை எடுத்துக் கூறி பங்குகளை வாங்கச் செய்தார். தானும் 200 பங்குகளை பெற்றுக் கொண்டார். வடக்கையும் கிழக்கையும் இணைப்பதோடு தன்னிறைவுப் பொருளாதாரம் உருவாக வேண்டும் என்பதிலும் நாவலர் பெருமான் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார்.

- சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம்

(சில வருடங்களுக்கு முன் யாழ் பல்கலைக்கழகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தன்று "நாவலர் பணிகள்" எனும் பொருளில் சிவத்தமிழ் வித்தகர் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவிலிருந்து இந்த விடயம் பெறப்பட்டது.)

சுவாமி விபுலாநந்தரின் சமதர்ம சிந்தனையும் கலை இலக்கிய நோக்கும்

திருமதி மேகலா சிவகுமாரன் (B.A hons)
மட்/வாகரை மகா வித்தியாலயம்.

தமிழுலகின் மாபெரும் மேதையாயும் நனி சிறந்த சமூகசேவையாளனாயும் விளங்கிய ஆன்மீக சிந்தனையாளரான சுவாமி விபுலாநந்தர் சமயம், பண்பாடு, இசை, நாடகம், கல்வி, இலக்கியம், ஒப்பியல் ஆய்வு என பல்துறைத் தளங்களில் தடம் பதித்தவராவார். பரந்துபட்ட சிந்தனைப் பிரவாகத்தை தன்னகத்தே கொண்டிருந்த சுவாமிகளின் வாழ்க்கைச் சுருக்கம், சமூக நோக்கு, சமத்துவ சிந்தனை, கலை இலக்கிய நோக்கு பற்றியதாய் இக்கட்டுரை அமைகின்றது.

வாழ்க்கைச் சுருக்கம்

தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தினதும் கலை முதுசங்களினதும் களமான மட்டக்களப்பின் காரைதீவில் சாமித்தம்பியருக்கும் கண்ணம்மைக்கும் மகனாக 27.3.1892 இல் மயில்வாகனனார் பிறந்தார். காரைதீவிலே மரபுவழித் தமிழ்க் கல்வியை வைத்தியநாத தேசிகர், கந்தையா பண்டிதர், கயிலாயப்பிள்ளை முதலானோரிடம் கற்றார். ஆங்கிலக் கல்வியினை கல்முனை மெதடிஸ்த பாடசாலையிலும், புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றதோடு கொழும்பு ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றார். அத்தோடு வடமொழி, லத்தீன், கிரேக்கம், சிங்களம் போன்ற மொழிகளில் புலமையும் கைவந்தவராயினார். இம்மொழித் தேர்ச்சியே பரந்துபட்ட உலகப் பார்வையையும் பன்நூல் புலமையையும் இவருக்கு அளித்தது.

கேம்பிறிச் சீனியர் தேர்வில் தேறியவுடன் ஆசிரியப் பணியாற்றத் தொடங்கிய இவர் புனிதமிக்கேல் கல்லூரி, கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை, அரசினர் பொறியியற் கல்லூரியின் இரசாயன உதவி ஆசிரியர் எனப் பல்லிடங்களில் பணியாற்றியதோடு, அர்ச் சம்பத்திரிசியர் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியராகவும் விஞ்ஞான பீடத்தை அலங்கரித்தார். இக்காலகட்டத்தில் 1919 இல் BSc தேர்விலும் தேறி கணித, விஞ்ஞான அறிவுடைய தமிழ்ப் பண்டிதராகவும் மிளிர்ந்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் தலைமையாசிரியராய் சேவையாற்றினார்.

கொழும்பில் சுவாமி சர்வானந்தரால் கவரப்பட்ட மயில்வாகனனார், இக்கவர்ச்சியின் வளர்ச்சியால் 1922 இல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து பிரபோத சைதன்னியராகி 1924 இல் சுவாமி விபுலாநந்தர் எனும் துறவுப் பெயர் பெற்றார்.

1925 இல் இலங்கை திரும்பிய சுவாமிகள் காரைதீவு சாரதா வித்தியாலயம், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி முதலான பல பாடசாலைகளை நிறுவியதோடு பாடசாலைகளில், தலைமை ஆசிரியராயும் சேவை வழங்கினார். அவர் 1931 முதல் 1933 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் 1943 முதல் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராய் பணிபுரிந்தார். யாழ் நூல் அரங்கேற்றத்தின் பின்நோயுற்று 1947.07.19 இல் இறைவனடி சேர்ந்தார்.

சமூக நோக்கு

ஒருவரின் சமூக நோக்கானது அவரின் அறிவு, அனுபவம், தத்துவ நோக்கு என்பவற்றிற்கமைய உருவாகின்றது. அவ்வகையில் விபுலாநந்தரின் இளமைக் காலமும், மட்டக்களப்புச் சூழலும், வேதாந்த ஞானமும், இராமகிருஷ்ண மடத்தொடர்பும் அவரது சமத்துவநோக்கிற்கு பின்னணிகளாயின.

இலங்கையில் பாடசாலைகளோடு இல்லம் நிறுவிப் பணியாற்றிய அடிகளார், 1930 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமைபுரிந்த காலத்தில் திருவேட்களத்திலிருந்த ஆதிதிராவிடர் சேரிகளுக்குச் சென்று பள்ளிகளை ஏற்படுத்திப் பணிபுரிந்தார். சுவாமி விபுலாநந்தருக்கு அவர்கள் அளித்த பிரிவுரை வாழ்த்தில் "தம் நலம் பேணும் பார்ப்பணர்களால் சண்டாளர்கள் என்றழைக்கப்படும் எங்களை அழைத்துத் தங்கள் வீட்டினுடனிருத்தி விருந்துண்ட காட்சியும் உவகையும் எங்கள் கண்களையும் மனதையும் விட்டு அகலுமோ?.... எங்கள் முன்னேற்றத்திற்கெனத் தங்களால் தொடங்கப்பட்ட இரவுப்பள்ளி என்றும் வளர்ந்து ஓங்குவதற்குரிய வழியொன்று தாங்கள் தேடுவதோடு, ஈழத்தீவில் தங்களால் நடாத்தப்படும் பள்ளிகளில் எம்குல மாணவர் பலரை சேர்த்துக் கொள்ளும்படியும் வேண்டுகிறோம்" என ஆதி திராவிடர்கள் குறிப்பிடுவது அடிகளாரின் சேவையையும் சமநோக்கினையும் புலப்படுத்துகின்றது.

விபுலாநந்தரின் சமதர்ம சிந்தனைக்கு, "மனிதர்கள் இரண்டு விதமாக வகுக்கப்படுவர். ஒருவிதம் பகவானிடத்தில் மனதைச் செலுத்தும் பக்தர்கள். மற்றொருவிதம் பொன் மீதும் ஆசை வைத்திருக்கும் மானிட பக்தர்கள்" எனும் வகைப்பாடும் சான்று பகர்கின்றன.

சாதி, இன பேதங்களற்ற ஒரு மனிதகுலத்தை வேண்டியவராக சுவாமி விபுலாநந்தர் விளங்கியமைக்கு தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டில் பரவிய முறை எனும் கட்டுரையில் "தம்மை ஆண்டவனுக்கு மக்களாகவும், உற்ற நண்பராகவும், தொண்டராகவும், உடன் உழைப்பவராகவும் கருதிய மூதறிஞர் வகுப்பு வேற்றுமை காட்டாது எல்லோரும் ஓர் குலம் என்னும் உண்மையினைக்

கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர்"என்று குறிப்பிட்டு எடுத்துக்காட்டாக கவுணிய குலத்தவரான சம்பந்தருக்கும் பாணராகிய நீலகண்டருக்கும் உள்ள உறவு, வேளாள அப்பரும் பிராமணரான சம்பந்தரும் கொண்ட உறவு, பாணர் குல திருப்பாணாழ்வாரை உலோக சாரங்க முனிவர் தன் தோள்மீது கொண்டு சென்றமை, அரசகுலத்தவரான சேரமான் பெருமாள் திருநீற்றுச் செலவினைக் கண்டு வண்ணான் முன்னிலையில் தலைவணங்கியமை, உமாபதி சிவாச்சாரியார் பெற்றான் சம்பானுக்கு தீட்சை கொடுத்தமை, இராமானுஜர் மறைமொழி ஓதி தீண்டாதோரும் பிறரும் உய்வெய்தியமை எனப் பல சமயஞானிகளின் சமரச நோக்கினை முன்னிறுத்துகின்றார்.

நடைமுறை வேதாந்தியான சுவாமி விவேகானந்தரின் வழிவந்த விபுலாநந்தர் இவ்வாறு ஏற்றத்தாழ்வற்ற புதுக்குலத்தினையே விரும்பினின்றார்.

சமயசமரச நோக்கு

வேதாந்தநெறி மேற்கொண்டு, பலசமயங்களில் நன்நெறி காணும் இராமகிருஷ்ணரது கொள்கைகளைத் தழுவினாரெனினும், சித்தாந்த உண்மைகளை உணர்ந்தவருமாய் திகழ்ந்தார். இதற்கு பிரபோத சைதன்னியராகவிருந்து ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயத்தில் எழுதிய கூற்றுக்கள் சான்று பகர்கின்றன. 'தமிழ் மொழியின் தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும்'எனும் தலைப்பில் எழுதுகையில் தமிழ் நூல்களின் சிறப்பினை கூறுவதற்கு மெய்கண்டாரின் சிவஞானபோதத்தினை மேற்கோள் காட்டுகிறார். "உதாரணமாக சைவசித்தாந்த உண்மைகளை எடுத்துக் கொள்வோம். தமிழர்களுக்கு அருங்கலம் போன்றிருந்த சிறந்த இத்தத்துவ நூலை முறைப்படி ஆராய்ந்து விருத்திசெய்வோமாயின், கொன்பியூசியஸ், புத்தர், ஸாதுஷ்டிரர் முதலியோருடைய நூல்களைத் துருவித்துருவி ஆராய்கின்ற மேற்றிசையறிஞர், மெய்கண்டானை உவப்புடனேற்று பீடத்திலிருத்திப் பணிந்து நிற்பர்" எனக் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து முறைப்படி ஆராயும் முறைமையினையும் விளக்குகின்றார். "முறைப்படி ஆராய்தறிதல் என்றால் பிழைபொதிந்த ஒரு விருத்தியுரையையோ, தப்புந்தவறுமான ஒரு ஆங்கில மொழி பெயர்ப்பையோ எழுதிவிட்டிருப்பதல்ல. சிவஞான சுவாமிகள் செய்ததுபோல் இலக்கணதருக்க பாண்டித்தியங் காட்டிக் கற்ற நூற்பொருளனைத்தையும் பொழிந்து ஒரு மாபாடியமெழுதி விடுவதுமல்ல. இனித் திராவிடக் கொள்கை நிறுவி உலகிலுள்ள ஏனையோரெல்லாம் எமக்கிணையில்லை என்று சொல்லும் ஒருசாராரைப் போல் மெய்கண்டான் முற்றொடர்பில்லாது ஆகாயத்தில் முளைத்த பூ என்று சொல்லி விடுவதுமல்ல" எனப் பொருள் பிறழ்வுடனோ, உயர்வு நவிற்சியுடனோ அல்லாமல் ஆராய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதையும் சுட்டிக்காட்டுகிறார்.

விலக்குபவை எவையென உரைத்த சுவாமிகள் விதிமுறை கூறவேண்டியதன் கடப்பாடுடையவராய் ஆராய்விற்கான வழிமுறைகளையும் குறிப்பிடுகின்றார், "முன்னிருந்த ஆசிரியருக்கும் சிவஞானபோத ஆசிரியருக்கும் பொதுவியல்பு, மெய்கண்டானுடைய சிறப்பியல்பு, பிறநாட்டு ஆசிரியருக்கும் மெய்கண்டானுக்கும் உள்ள ஒற்றுமை, விகற்பம், மெய்கண்டான் உதிப்பதற்கு முன் தமிழ்நாட்டு சமயநிலை, ஆசிரியரது காலம், முதல்நூல், வழிநூல் வரலாறு, பிற்பட்ட ஆராய்ச்சியினால் மெய்கண்டானது நூலில் காணப்படும் வழுக்கள், வழுவமைதி என்று இன்னோரன்னவற்றையெல்லாம் பிற நூலுதவி, பிறமொழி நூலுதவி கொண்டு ஆராயின் அவ்வாராய்ச்சி உலகத்திற்குப் பயன்படுவதாகும். உலது அதனைப் பயன்படுத்திக் கொள்ளும்" என்கின்றார். வேதாந்தியான அடிகளாரின் இவ்வெழுத்துக்கள் அவரது அறிவார்ந்த தத்துவநோக்கின் வெளிப்படுகையாய் அமைந்துவிடுகின்றது.

அடிகளாரின் இச்சமரச நோக்கே பின்னாளில் (1935இல்) சைவசித்தாந்த மகாசமாசத்தின் விழாவிற்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டமைக்கும், அவர் தலைமை தாங்கியமைக்கும் காரணிகளாயின.

கலை இலக்கிய நோக்கு

அடிகளாரது இலக்கியங்களும் கட்டுரைகளும் அவரது கலை, இலக்கியப் பார்வையைப் புலப்படுத்துகின்றன. அவற்றில் தமிழரின் தனித்துவம், தமிழ்க்கலை இலக்கியங்கள், உலகக்கலை இலக்கியங்கள், அவற்றுக்கிடையிலான பேத, அபேதங்களையும் முன் வைக்கின்றார்.

இசைக்கலையை எடுத்துக்கொண்டால், மீன்களின் இசையாராச்சியாக முளைகொண்ட இசையாய்வு பின்னாளில் இசைக்கருவூலமான யாழ் நூலை உலகிற்கு நல்கியது. சுவாமி நீரரமகளிர் பற்றி ஆராய்ந்து நிகரற்ற கவிதைகளை வழங்கியுள்ளார்.

"தேனிலவுமலர்ப் பொழிலிற் சிறைவண்டு துயிலச்
செழுதரங்கத் தீம்புனலுள் நந்தினங்கள் துயில
மீனலவள் செலவின்றி வெண்ணிலவில் துயில
விளங்குமட்டு நீர்நிலையுள் எழுந்ததொரு நாதம்"

எனப் பாடியுள்ளார்.

இசையைக் கணிதமொழியில் விளக்க முனைந்தவர் விபுலாநந்தர். இசைக்கிரமம் எனும் கட்டுரையில் தமிழிசையில் கிரமங்கள் தோன்றிய முறையினை கணித வாயிலாக ஆராய்ந்து கணித முடிவுகள் நரம்புக் கட்டுப்பாட்டிற்கும் துணைக்கருவிகளுக்கும் பயன்படுவதைக் காட்டியுள்ளார். அடிகளாரின் தமிழ், ஆங்கில, கணித, சங்கீதப் புலமைகளை ஒருங்கே வெளிப்படுத்தும் உன்னத படைப்பு யாழ் நூலாகும்.

யாழ் நூலின் சிறப்பினை அறிஞர்கள் பலரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். அடிகளாரின் இசைக்கணித வெளிப்படுத்துகையை பேராசிரியர் மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகையில், "இந்நூலைப் புரிந்துகொள்ள மூன்று வகை அறிவு தேவைப்படுகின்றது. அவையாவன இசையறிவு, கணித அறிவு, தமிழறிவு. இசையைக் கணிதமொழியில் விளக்க முனைந்த விபுலாநந்த அடிகளாரின் தமிழிசைக்கான பங்களிப்பு இசைக் கணிதமே." என்கிறார்.

தமிழிசை மரபைக் கண்டறிந்து, யாழினை மீளுருவாக்கம் செய்தமை அடிகளாரின் உன்னத பணியாய் மிளிர்கின்றது.

விபுலாநந்தரின் கலைப்பணியில் நாடக ஆராய்ச்சி மற்றுமோர் அம்சமாகும். தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் படித்த மத்தியதர வர்க்கத்தினருக்கு ஊடாக ஐரோப்பிய நாடகமரபு தமிழுக்கு அறிமுகமாகிய கட்டத்தில் மதங்கசூளாமணியை

வழங்குகின்றார். "நாடகவியலை ஆராய்கின்ற சிற்றாராய்ச்சி"என்றே தன் நூலைக் குறிப்பிடும் அடிகளார், இந்நூலின் முதல் இயலான உறுப்பியலில் இந்தியரசக் கோட்பாட்டின் அடிப்படையாகத் தமிழ் நாடக இலக்கியத்தை எடுத்துரைத்து, இரண்டாம் இயலான எடுத்துக்காட்டியலில் சேக்ஸ்பியரின் நாடகங்களில் பன்னிரண்டினை தமிழ்நாடக இலக்கணங்களுக்கமைய விளக்கியுள்ளார். கிரேக்க ஆடல்பாடலுடன் தமிழரின் வேலனாட்டத்தையும் ஒப்பிட்டுள்ளார். ஒரு நாடக ஆய்வாளனாக நாடகத்திலும் தமிழின் தனித்துவம் காண விளைந்துள்ளார்.

அடிகளாரது நூல்களும், கட்டுரைகளும், சொற்பொழிவுகளும் இலக்கியப் பணிக்கான சான்றுகளாகின்றன. தமிழின் இயல்பை ஆராய்ந்து எழுதிய 'சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்' எனும் கட்டுரை மொழியியலில் முக்கியமானதாக விளங்குகின்றது. கவிதை மற்றும் விமர்சனத்துறைகளிலும் இவரது பங்கு சிறப்பானது. இவர் தமிழ் மக்களுக்கு உலக இலக்கியங்களையும் அறிமுகஞ் செய்துள்ளார்.

மரபுவழி நின்று புதுமையை அணைத்த சுவாமி விபுலாநந்தர், உலகந்தழுவிய கலை இலக்கிய போக்கினையும், பேதங்களற்ற சமரசப்போக்கினையும் கைக்கொண்டு பல முனைகளிலும் ஆற்றிய பணிகள் உன்னதமானவை.

உசாத்துணை நூல்கள்.

1. மௌனகுரு.சி.,சுவாமி விபுலாநந்தர், (2006), குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. கமலநாதன்.ச.இ, சிவசுப்பிரமணியம்.வ, (1995), சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள், தொகுதி 1,2,3., மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை.
3. அருள் செல்வநாயகம், (2008), விபுலாநந்த இலக்கியம், திருவருள் வெளியீடு, இலங்கை.
4. விபுலம்: சுவாமி விபுலாநந்தர் நினைவுவிழாச் சிறப்புமலர். (2003).
5. விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு விழா மலர். (1991).

மட்டக்களப்பு பிரதேச இந்துக் கோயில்களில் அவைக்காற்றுக் கலைநிகழ்வுகள்

மட்டக்களப்பு தமிழகத்தில் காணப்படும் இந்துக் கோயில்களில் இடம்பெறும் வருடாந்த உற்சவங்களிலும், விசேட பூசை திருவிழாக்காலங்களிலும், விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அவைக்காற்றுக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன. ஒருவர் அல்லது பலர் முன்னே நிகழ்த்துனர்களால் நிகழ்த்திக் காட்டப்படும் கலைகளே அவைக்காற்றுக் கலைகளாகும். பார்வையாளர்கள் அவையில் அமர்ந்திருக்க, அவர்களுக்காகவே நிகழ்த்துனர்களால் இவை ஆற்றுகை செய்யப்படுகின்றன. கூத்து, கரகம், வசந்தன், கும்மி, கோலாட்டம், நாடகம், நடனம், சங்கீதம் என்பன அவைக்காற்றுக் கலைகளாகும்.

இந்த வகையில் மட்டக்களப்பிலுள்ள ஆலயங்கள் இந்து மதத்தை வளர்க்கின்ற இடமாகவும், கலைகளை வளர்க்கின்ற ஸ்தாபனமாகவும் தொழிற்படுகின்றன எனலாம். மட்டக்களப்பு இந்துக் கோயில்களை மூன்று வகைப்பாட்டினுள் உள்ளடக்கலாம். அவையாவன:

1. ஆகம முறைப்படி பிராமணக் குருக்கள் பூசை செய்யும் ஆலயங்கள்.
2. பத்ததி முறையில் தீட்சை பெற்ற பூணூல் அணிந்த சைவசமய குருக்கள் பூசை செய்யும் ஆலயங்கள்.
3. பூணூல் அணியாத பூசாரி ஆகியோர் பூசை செய்யும் ஆலயங்கள்.

இதனைவிட, வீடுகளிலும் பூசை செய்கிற முறைகளும் இங்கு காணப்படுகின்றன.

இந்த வகையில் ஆகமமுறையில் அமைந்த ஆலயங்களில் திருவிழா காலங்களில் சூரன்போர் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இவை பார்வையாளர் மத்தியில் ஒரு சடங்காகவே நிகழ்த்திக் காட்டப்படுகின்றன.

சூரபத்மனுடன் முருகன் செய்த போரையும், சூரனை முருகன் வதைத்து அவனைச் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி அருள் கொடுத்த கதையையும் கோயில் வெளியில் நிகழ்த்திக் காட்டும் நிகழ்ச்சியே சூரன் போர் ஆகும். இது ஒரு சமய நிகழ்வாகவே இங்கு நடத்தப்படுகிறது. இந்நிகழ்வினை எவரும் நாடகம் என்று கருதுவதில்லை. எனினும் இவை அவைக்காற்று கலைக்குள்ளே அடங்கும்.

இரண்டாவது வகைக் கோயில்களான தீட்சை பெற்ற பூணூல் அணிந்த சைவசமய குருக்கள் பூசை செய்யும் ஆலயங்களில் வருடாந்த உற்சவங்களின்போது, அதனை சிறப்பிக்கும் வண்ணம் இடம்பெறும் கரகம், வசந்தன், கூத்து, கோலாட்டம், கும்மி, நாடகம், பரதநாட்டியம், சங்கீதம் என்பனவற்றை இரண்டாவது வகை அவைக்காற்றுக் கலைகளாகக் கொள்ளலாம்.

இங்கு ஆடப்படும் வசந்தன், கோலாட்டம், கரகம் என்பன ஆரம்பிப்பதற்கு முன் பாடப்படும் வாழ்த்துப் பாடல்கள் இந்துக் கடவுளரை வாழ்த்தி ஆரம்பிப்பதாகவே அமைந்திருக்கும். இதனைவிட, இங்கு ஆடப்படும் நாடகம், கூத்து, நடனம், சங்கீதம் என்பனவும் இந்துக் கடவுளர் புகழ் பாடுவனவாகவும் அற்புதங்களை எடுத்துக் கூறுவதாகவுமே அமைந்திருக்கும். உதாரணமாக சிறுத்தொண்டர் நாடகம், அல்லி நாடகம், மார்க்கண்டேயர் நாடகம் என்பனவற்றின் உள்ளடக்கம் இந்துமத புராண இதிகாசக் கதைகளைக் கொண்டதாகவே அமைந்திருக்கும். இந்த வகையில் இந்து ஆலயங்கள் இந்துக் கலைகளை வளர்க்கின்ற ஒரு இடமாக தொழிற்படுகின்றன எனலாம்.

இந்த இரண்டு வகை ஆலயங்களையும் தவிர, பூணூல் அணியாத பூசாரி ஆகியோர் பூசை செய்யும் ஆலயங்களில் இடம்பெறும் மாரியம்மன் காவியம், கண்ணகி அம்மன் ஆலயங்களில் பாடப்படும் கண்ணகி வழக்குரை, விஷ்ணு கோயில்களில் பாடப்படும் கம்சன் அம்மானை என்பன தாளம், உடுக்கு வாத்தியங்களுடன் தெய்வத்திற்கு மடை வைத்து பாடப்படுகின்றன. இவையும் ஒருவகை ஆற்றுகைக் கலைகளாகவே காணப்படுகின்றன.

இதனைவிட, சுவாமி ஊர்வலங்களில் இடம்பெறும் மேளக் கச்சேரிகள், கோயிலின் வெளிவீதியில் பறைமேளக் கூத்தர் ஆட்டம், வில்லுப்பாட்டு என்பனவும் இந்துக் கடவுளர்களை வாழ்த்திப் பாடுவதாகவும், பெருமைகளை கூறுவதாகவுமே சபையோருக்கு ஆற்றுகை செய்யப்படுகின்றன.

- சீ. பரமேஸ்வரி

(நன்றி :- மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2003)

கிழக்கிலங்கையின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்தர்

திருமதி கௌரிமலர் மகேந்திரன்

கிழக்கிலங்கை, தமிழ்கூறும் உலகிற்கு வழங்கிய ஒப்பிலா நிதியம் சுவாமி விபுலானந்தர். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்றும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றும் பரந்துபட்ட பெருநோக்கத்துடன் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை. பிறந்த நாட்டிற்கும் பிறந்த மண்ணான மட்டக்களப்பிற்கும் மங்காப்புகழ் தேடித்தந்தவர். இல்வாழ்வைத் துறந்தாலும் தமிழ் மொழிப் பற்றும், சமய சமூகத் தொண்டும் செய்து அத்துறைகளில் வரலாற்றுப் பெருமைமிக்க சாதனைகளைச் செய்தவர்.

விபுலானந்த அடிகளைப் பார்க்கையில், அவரை எல்லோரும் கல்விமானாக, இலக்கியவாதியாக, ஆசிரியராக, பல்கலைக்கழக பேராசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, பல்துறைகளிலும் ஆராய்ச்சியாளராக, சமயப் பெரியாராக, பாடசாலை நிர்வாகியாக, இராமகிருஷ்ணமிஷன் முகாமையாளராகக் கண்டனர். அத்துடன் அடிகள் முத்தமிழ் வித்தகர், முத்தமிழ் முனிவர், ஈழம் கண்ட பெரும் துறவி, இராமகிருஷ்ண இயக்கச் செம்மல் என்றெல்லாம் புகழப்பட்டார். விபுலானந்த அடிகள் இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் தம் பணிகளைச் செய்தார். யாழ்நூல், மதங்க சூளாமணியை எழுதியதுமட்டுமல்லாது அதற்கு மேலாக அவர் ஆற்றிய மிக முக்கியமான சமூகப்பணியொன்றுண்டு! அதாவது ஒரு பெரும் சமுதாயத்தை அதன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்து எழச்செய்தமையாகும். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை ஒரு புது யுகத்தின் விடிவெள்ளி, பழைமையின் பிரதிநிதி, புதுமையின் நிறைமதி எனவும் கொள்ளலாம்.

விபுலானந்த அடிகளின் சமகாலத்தில் – பாரம்பரியப் பெருமையை அறியாமலும், கல்வியறிவு குறைந்து, இலட்சியமற்றும் வாழ்ந்த மக்களை விழிப்படையச் செய்து நல்லதொரு உணர்ச்சிமிக்க வீரியமுள்ள சமுதாய மாற்றத்தை உண்டாக்கினார். இதுவே அடிகளின் மிக உன்னத சமுதாயப்பணி எனலாம். விபுலானந்த அடிகளின் சீடரான சுவாமி நடராஜானந்தா பின்வருமாறு கூறுகிறார் – "தமிழ் நாட்டில் ஒரு பாரதியைப்போல், வடஇந்தியாவில் விவேகானந்தரைப் போல், நம் ஈழவழநாட்டில், அதிலும் சிறப்பாக கிழக்கிலங்கையில் ஒரு சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தியவர் சுவாமி விபுலானந்தரே."

சமயத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்தரக் கல்வியின் மூலம் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். கிழக்கிலங்கையில் ஒரு வீறுகொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கும் தம் அறிவு ஆற்றல் அருட்சக்தி அனைத்தையும் அர்ப்பணம் செய்தவர்.

சுவாமிகளின் பணிகளைப் பார்க்கும் முன் அவர் பிறந்த மண்ணான மட்டக்களப்பின் வரலாற்றுச் சூழலை நாம் நோக்கல் ஏற்றதாகும்.

ஆசிரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்த்து வனர் புகழும்
ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவைத்தீங்கன்னலொடு
தெங்கினிளநீரும் தீம்பலவினள்ளமிர்தும்
எங்குங்குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப்பெனு மாநாடாந்..."

என்று விபுலானந்த அடிகளால் போற்றப்படும் மட்டக்களப்பு நகரம் ஆட்சி நிர்வாகப் பட்டினமாகவும், கிழக்கிலங்கையின் தலைநகராகவும் விளங்குகிறது. இது புளியந்தீவு என அழைக்கப்படுகிறது. இங்குமுப்பதுமைல் நீளமானவாவியுண்டு. கடலோடு கலக்கும் வடக்குப்பகுதி அமிர்தகழி எனும் பழம்பதிக்கு அருகிலும், அழகிய தெற்குக் கரைக்கு அண்மையிலும் மண்டூர் என்னும் புண்ணிய பதியும் உண்டு.

வாவியின் தெற்குக் கரை முழுவதும் மருதத்தன் பனையும், கிழக்குக் கரையிலுள்ள ஊர்களில் தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து கண்ணிற்கும் மனதிற்கும் இனிமையளிப்பன. புளியந்தீவு நகரம் மூன்று மைல் சுற்றளவுள்ளது. காவிரி நடுவில் அமைந்த திருவரங்கம் போல் மட்டுநகர் வாவியின் நடுவில் அமைந்த புளியந்தீவு மட்டக்களப்பின் தலைநகரமாகும். இதனைக் கரந்தை தமிழ் சங்க இதழான "தமிழ் பொழில்"இல் "நீராமகளிர் இன்னிசைப் பாடல்" எனும் கட்டுரையில் விபுலானந்த அடிகளே எழுதியுள்ளார்.

மட்டுநகர் மக்களின் பேச்சில் செந்தமிழ்ச் சொல்வளமும் வாழ்வினில் பண்பாட்டு வளமும் பின்னிப் பிணைந்துள்ளன. இங்கு நாட்டுப் பாடல்கள், நாட்டுக் கூத்துக்கள் எனும் தீந்தமிழ் கலைவளமும் காணப்படுகின்றன. சோழமன்னர் ஈழத்தைக் கைப்பற்றிய காலம், மட்டக்களப்பு அவர்கள் ஆட்சியின் கீழிருந்ததாக சூளவம்சம் கூறுகிறது.

போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தையும், ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தையும் பரப்பினர். 1796இல் பிரித்தானியரால் இலங்கை முழுவதும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் பரப்பப்பட்டது. 1814 இல் மெதடிஸ்த கிறிஸ்தவர் தம்மதம் பரப்பும் பணியினை மேற்கொண்டனர். மெதடிஸ்த கல்லூரி நிறுவப்பட்டது. கிறிஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள் கட்டப்பட்டன. கிறிஸ்தவ மதகுருமார் சைவ மக்களைப் பல வழிமுறைகளிலும் மதம் மாற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டனர். மட்டக்களப்பின் பலபாகங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்கள், பாடசாலைகள் அமைக்கப்பட்டுக் கிறிஸ்தவ அடிப்படையிலேயே கல்விப் போதனைகள் இடம்பெற்றன. இதனால் மட்டக்களப்பு மக்களின் பழைமையான சைவமதம், தாய்மொழியான தமிழ், தமிழ்ப்பண்பாடு, கலை, கலாசாரம் எனும் பண்புகள் தாழ்வடையலாயின. கிறிஸ்தவ மதம், கலை, கலாசாரம் பழக்க வழக்கங்கள் உயர்வடையலாயின.

இச்சூழ்நிலையில் தாழ்ந்திருந்த மட்டக்களப்புத் தமிழகத்தை உயர்வடையச் செய்யவும் மதிப்பிழந்துவரும் தமிழ்மொழியின் புராதனப் பெருமையை நிலை பெறச் செய்யவும், சைவசமயத்தை மீண்டும் உயர்வடையச் செய்யவுமெனத் தமிழரின் கலை, கலாசாரப் பண்புகளை உலகத்தார் போற்றிடச் செய்யவும், தாழ் நிலையிலிருந்து மக்களை எழுச்சியுறச் செய்யவுமென விபுலானந்த அடிகள் வந்து சேவையாற்றத் தொடங்கினார்.

(மாமன்றப் பொன்விழா மலர் - 2005)

திருவெம்பாவை உற்சவம் இம்மாதம் (டிசெம்பர்) 17ஆம் திகதி ஆரம்பமாகிறது.

மார்கழி நாயகனுக்கோர் திருவெம்பாவை

கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

மார்கழி மாதத் திருவாதிரை நன்னாள் சிவபெருமானுக்கு மிக உகந்த அபிடேக, விரத, புண்ணிய நன்னாளாகும். ஆதிரை முதல்வன் என்றழைக்கப்படும் சிவன் ஆதிரை, ஆதிரையான் ஆகின்றான். மார்கழித் திருவாதிரை தினத்திலே சிதம்பர தலத்திலே நடராஜப் பெருமானான தில்லைக் கூத்தனுக்கு இடம்பெறும் அபிடேக ஆராதனைகள் சொல்லுந்தரமன்று. இது ஆருத்திரா தரிசனம் என்றழைக்கப்படும் சிறப்புடைய விழாவாகும். ஆருத்திரா என்பதும் சிறப்பு ஆதிரை என்று பொருள் கொள்ளலாம். இத்தினத்தில் எம்பெருமானைக் குறித்து யாம் அனுட்டிக்கும் விரதம் சிறப்பாக திருவாதிரை நோன்பு என்றழைக்கப் பெறும்.

மார்கழிமாதம் தேவர்கட்கு உதய காலமாக அமைகின்றது. ஈசனுக்கு திருப்பள்ளி எழுச்சியும் திருஎம்பாவையும் பாடித் துயிலெழுப்பும் இனிய காலம் இது.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருக்குள இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்கு
தேவ நற் செறிகழல் தாளினை காட்டாய்
திருப் பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிலரியாய் எமக்கு ஒளியாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

ஆனந்த நடராஜனின் ஆனந்த நடனத்தைத் தரிசனம் செய்ய உகந்த இடம் தமிழ் நாட்டின் கண்ணுள்ள தில்லைச் சிதம்பரமாகும். ஆரம்பத்தில் இத்தலத்தின் சுற்றாடலிலே தில்லைவனம் அமைந்திருந்ததால், இத்தலத்திற்கு "தில்லை" என்னும். காரணப் பெயர் உண்டானமை வரலாறு சிவத்தலங்களுள் மிகச் சிறந்ததும், அருள் மிக்கதும், தனித்துவமானதும் தில்லை என்றழைக்கப்பெறும் சிதம்பர மாகும்.

இத்தலத்தின் பெருமை கூறப்புகின் புராண வரலாற்றின்படி, இத்தலத்திலே தான் புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும் ஆதிசேனுடைய அவதாரமாகிய பதஞ்சலி முனிவரும் கண்டு களிக்க நடராஜமூர்த்தி தனது திருநடனத்தை ஆடிக்காட்டியருளினார். இத்தாண்டவத் தரிசனத்தை இலகுவில் காணவோ, தரிசிக்கவோ முடியாது. இத்தாண்டவம் எம்பெருமானின் ஐந்தொழிலை அதாவது பஞ்ச கிருத்தியத்தை உணர்த்தி நிற்கின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகியவை பஞ்ச கிருத்தியங்களாகம்.

"அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற வாக்கிற்கிணங்க ஐயனின் தாண்டவமே சகல உலகங்களையும், உயிர்களையும் இயங்கவைக்கின்றது. ஐந்தொழிலுக்கும் ஐம்பூதங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பிருதுவியில் வியாபித்திருக்கும் பிரம்மதேவன் படைத்தல் தொழிலை ஆற்ற, நீரில் சயனித்திருக்கும் ஸ்ரீமத்நாராயண மூர்த்தி காத்தல் தொழிலையும் அண்டமனைத்திலும் பரந்திருக்கும் அக்னிஅழித்தல் தொழிலையும் வாயு மண்டலத்திலிருக்கும் மகேஸ்வரமூர்த்தி மறைத்தல் தொழில்புரிய, வானில் உறையும் சதாசிவ மூர்த்தி, அருளல் தொழிலை ஆற்றுகின்றார். பஞ்சகிருத்தியத்தின் குறியீட்டு விளக்கத்தை நடராஜ வடிவம் வெளிப்படுத்தும் அழகினை நோக்குவோம் நடராஜ மூர்த்தியின் திருக்கரத்தில் இருக்கும் உடுக்கு, படைத்தற் தொழிலையும், ஐயனின் அனல் ஏற்றிய கரம் அழித்தற் தொழிலையும், தூக்கியதிருவடி அருளற் தொழிலையும், முயலகனை ஈசன் மிதித்து நிற்கும் பாதம் மறைத்தற்தொழிலையும் உணர்த்தி நிற்கின்றன.

இனி மார்கழி மாதத்தின் ஆன்மீகச் சிறப்பினை நோக்கின், "மாதங்களில் நான் மார்கழி" என்கின்றார் கண்ணன் கீதையில். "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால், நீராடப்போதுவீர்" என்கின்றார் ஆண்டாள். "தேவர் மாதம்" என்றழைக்கப்பெறும் மார்கழி மாதம் பண்டுதொட்டு வழி பாட்டுக்குரிய மாதமெனக் கொள்ளப்பட்டு வருகின்றது.

மனிதனுக்கு ஒரு வருடகாலம், தேவர்களுக்கு ஒரு நாள் ஆகின்றது. இது தேவநாள் எனப்படுகின்றது. இதன் படி பகற்காலம் உத்தராயணம் என்றும், இராக்காலம் தட்சணாயனம் எனவும் பெயர் பெறுகின்றது. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை பகற் பொழுதாகவும், ஆடிமாதம் முதல் மார்கழி வரை இராக்காலமாகவும் அமைந்துள்ளது. மனிதனின் ஒரு மாதம் தேவர்களுக்கு ஐந்து நாழிகையாக அமைகின்றது. இரவின் கடைசி முகூர்த்தம் எமக்கு விடியற்காலம். இதுவே பிரம்ம முகூர்த்தம் எனப்படுகின்றது. இப்பிரம்ம முகூர்த்தம் இறைவழிபாட்டிற்கு உகந்தகாலமாக அமைகின்றது.

மார்கழி மாதம் முழுவதும் ஆடவரும், பெண்களும் விடிய ஐந்து நாழிகைக்கு விழித்து, தத்தம் இல்லங்களைச் சுத்தி செய்து, முற்றத்தின் நடுப்பகுதியைச் சாணத்தினால் மெழுகி மாக்கோலமிட்டு அதன் மத்தியில் பிள்ளையார் பிடித்து வைத்து மலர் இட்டு தீப மேற்றி வணங்கி அசுர பூத பைசாசங்களிடமிருந்து தமக்கு விக்கினங்கள் ஏற்படா வண்ணம் விநாயகப் பெருமானை வேண்டித் தொழுதல் முறையாகும். மார்கழிப் பிள்ளையார் மூர்த்தங்களை பொங்கல் அன்று மோதகம் படைத்து பூசித்து மறுநாள் அவற்றை சமுத்திரம், கடல், குளம், ஆறு போன்ற நீர் நிலங்களில் இட்டு வணங்கி விநாயகப் பெருமானை எம்மை சகல விக்கினங்களிலிருந்தும் விடுவிக்குமாறு வேண்டித் துதித்தலும் மரபாகும். இப்பணியை அதிகமாகப் பெண்பாலாரே செய்வர். ஆண்பாலார் இவர்கட்கு உதவியாய் இருந்து திருப்பள்ளி எழுச்சி திருஎம்பாவை ஆகிய பாடுதலும் வழமையாகும்.

பாவை நோன்பு பெண்கள் மார்கழி மாதத்தில் மேற் கொள்ளும் நோன்பாகும். மணமான பெண்கள் மார்கழித் திங்களை மங்களத் திருநாளாகக் கொண்டு நீராடி மகிழ்ந்து தமது தாலிப் பலன் பெருக இறையை வேண்டுவர். கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல கணவனை ஈசன் அருள வேண்டி இந்நோன்பிளை நோற்பர். அத்தோடு நாட்டில் மழையும் வளமும் வேண்டியும் இந்நோன்பினை நோற்பர். இந்நோன்பை சைவ மக்களும் வைணவரும் நோற்பது வழமை. இதற்காக அமைந்ததே மணிவாசப்பெருமான் பாடியருளிய திருஎம்பாவையும், ஆண்டாள் பாடியருளிய திருப்பாவையுமாகும். இந்நோன்பு மணிவாசகப் பெருமான் காலத்தில் சேர சோழ பாண்டிய நாடுகளில் இடம் பெற்றமை வரலாறு.

இந்நாட்களில் கன்னிப் பெண்கள் விடியலின் முன் துயில் எழுந்து ஒவ்வொருவர் வீடாகச் சென்று அப்பெண்களையும் இறைவன் புகழ் பாட துயில் எழுப்பி நீர் நிலைகளுக்கு ஒன்றாகச் சென்று பொய்கைகளில் இறங்கி இறைவன், இறைவி புகழ் பாடி நீராடி நோன்பிருந்து இறைவழிபாடு செய்து இல்லம் திரும்புவர். சங்க நூல் இலக்கியத்தில் "தை நீராடல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கோகிலத்தில் மக்கள் அதிகாலை நீராடிய பின் கார்த்தியாயினி பூஜை செய்தமை பற்றி மகாபாரதம் குறிப்பிட்டுள்ளது. தொடர்ந்து மணிவாசகப்பெருமான் பாடித் தந்த "திருஎம்பாவை"ப் பாடல்களுக்கு வருவோம். இதன் கண்ணுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் "ஏல ஓர் எம்பாவாய்" என முடியும். இறைவன் தலைவன், உயிர்கள் யாவும் கன்னிப் பெண்கள். இவ்வுயிர்கள் ஆவணமலத்தால் பீடிக்கப்பட்டிருப்பதே உறக்கம். இவர்கள் துயில் எழுதல் மலபரிபாகம் எனப்படும். இவர்கள் தூய்மை பெற்று அன்பு நெறியுடன் இறையுருளில் தோய்தலே, இந்த மார்கழி நீராடல், நோன்பு ஆகியவற்றின் உள்ளர்த்தமாகும். இதன் பயனாக திருவருளின் துணையால் ஆன்மாக்கள் நாயகனாகிய இறைபாதங்களை அடைகின்றன. "பக்தியை வியந்து பாடல்" திருஎம்பாவையின் உட்பொருள். "ஏல ஓர் எம்பாவாய்" என்பதன் பொருளை நோக்கின் அம்பிகையாம் கௌரியை விளித்து வழிபாடு எனப்பொருள்படும்.

இனி திருவெம்பாவையில் இடம்பெறும் முதல் எட்டுப் பாடல்களும் கன்னிப் பெண்கள் தம்முள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புதலை உணர்த்தி நிற்கின்றன. ஒன்பதாம் பாடல் இவர்கள் தமக்குரிய நற்கணவர் இயல்பு கூறி அத்தகைய கணவரைத் தமக்கு தந்தருள வேண்டுதலைக் குறிக்கும். பத்தாம் பாடல் எம்பெருமான் பெருமையை அறுதியிட்டுக் கூறிவிட முடியாது என்பதை உணர்த்தி நிற்கும். பதினோராம் பாடல் இப்பெண்கள் நீராடத் தொடங்குதலையும் ஈசன் தம்மைக் காத்தருள வேண்டுமென்பதையும், பன்னிரண்டாம் பாடல் பொய்கையில் அன்றி சுனையிலும் நீராடலைக் குறித்து நிற்பதுடன், பதின்மூன்றாம் பாடல் தாம் நீராடும் பொய்கை தமக்கு அம்மை அப்பராகக் காட்சி தருவதையும் குறித்து நிற்க, பதினான்காம் பாடல் கௌரி நோன்பிற்குரிய சோதி நிறம் கூறி சக்தியின் அருள் திறத்தையும் இயம்புகின்றது, பதினைந்தாம் பாடல் இறையின் அருட்குணங்களையும் அருட்டிரத்தையும் விபரிக்க, பதினாறாம் பாடல் உலகத்தவரை வாழவைக்கும் மழைவளம் வேண்டி நிற்றலையும், பதினேழாம் பாடல் தன்னை வழிபடுபவர்க்கே ஈசன் அருள்புரிவான் என்ற உண்மையையும், பதினெட்டாம் பாடல் சூரியோதய வர்ணனையையும், பத்தொன்பதாம் பாடல் பெண்களின் கற்பு சிறக்க அவர்கள் ஈசனருள் வேண்டுதலையும், இருபதாம் பாடல் எம்பெருமான் ஐந்தொழிலையும் புரிந்திடும் இயல்பையும் அவன் திருவருளையும், கௌரியம்மை தம்மை ஆட்கொள்ளத் தன்மைளையும் உணர்த்தி நிற்கின்றன. மார்கழி நீராடல் அதிசிறந்த ஆன்மீகச் சிறப்பு வாய்ந்தது.

அடுத்து ஆண்டாள் திருப்பாவைப் பற்றி நோக்கின் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் சூடிக்கொடுத்த நாச்சியார் என பெயரும் பெற்றவர் தனது பாடலில் ஆயர்குல மக்கள் கண்ணன் மேல் கொண்ட தீவிரபக்தி பற்றியும் பாவை நோன்பின் தன்மை பற்றியும் பாடித்தந்துள்ளார்.

அருமையாகச் சொல்லின் திருஎம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் அம்மை அப்பன் இயல்பு அருட்பெருங்கருணை பற்றி விளம்புவதுடன் ஆன்மாக்கள் அஞ்ஞானத் துயிலிலிருந்து விடுபட்டு, ஞான வழிப்படைந்து ஈசன் அடைய வேண்டிய பாங்கினையும் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றன.

இவ்வரும் அருட்பாடல்களை யாம் திரிகரண சுத்தியுடன் மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் முறைப்படி ஓதி ஈசனருள் பெறுவதுடன் இந்த உண்மையை பாடல்களால் எமது இளம் சிறார்க்கும் கற்றுக் கொடுத்து அவர்களையும் ஓத வைத்து ஆன்மீகத்தின் தேவையை அவர்களையும் உணர வைத்து, அவர்களை நன்னெறியாம் சைவநெறி மார்க்கத்தில் அழைத்துச் செல்வது எம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

போற்றியென் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழல் இணைதுணை மலர் கொண்டு
ஏற்றி நின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டு நின்திருவடி தொழுதோம்
சேற்றிதழ் கமலங்கள் மலரும் தண்வயல்சூழ
திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாம் எமக் கொளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே

- திருப்பள்ளியெழுச்சி -

அகில இலங்கை
இந்து மாமன்றத்தின் வைரவிழா வெளியீடு
A Compendium For Hindus

மாமன்றத்தின் வெளியீடான 'இந்து மக்களுக்கு ஒரு கையேடு' நூலில் அடங்கியுள்ள பெரும்பாலான விஷயங்களுடன், மேலதிகமான பல தகவல்களையும் தாங்கியதாக "A Compendium For Hindus" என்ற ஆங்கில நூல் வெளிவந்துள்ளது.

நூலின் விலை ரூபா. 1000/=

கொழும்பிலுள்ள மாமன்றத் தலைமையகத்திலும், யாழ் பிராந்திய பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :

011 2434990 (மாமன்றத் தலைமையகம்), 021 222 1075 (யாழ் பிராந்திய பணிமனை)



உலகிற்கு ஆன்மீக வளம் பெருக்கிய யோகர் சுவாமிகள்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்

நாள்தோறும் ஒவ்வொரு மனிதனும் மன அமைதியைத் தேடி அலைந்து கொண்டேயிருக்கிறான். இந்த உலகத்தில் மற்றவர்களிடமிருந்து நாம் மனச்சாந்தியை, அதனால் வரும் பேரமைதியைத் தவிர மற்றெல்லாவற்றையம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் மனச்சாந்தியை தன்னை உணர்ந்த ஞானிகளின் கருணையினாலேயேஇ அவர்களின் வழிகாட்டல் மூலம் அநுட்டிக்கும் சாதனைகளினாலேயே பெற முடியும். எனவே மனிதன் உண்மையான மன அமைதி பெற வேண்டுமென்றால் வானுலகம் சென்றாலும் கிடைப்பதரிது. உண்மையான ஞானியினுடைய அருட்கடாட்சத்தால் அவரின் வழிகாட்டலில் செயற்படுவதாலேயே பெற முடியும். யோகர் சுவாமிகள் "சாதனை உள்ள சத்துக்கள்" காண்பரே என்று கூறுவது சிந்திக்கப்படவேண்டியது. சிந்தித்து சிந்தித்து செயற்பட வேண்டியது. ஆன்மீகம் அதாவது சாதனை செய்யும் சத்துக்களே மன அமைதியைக் காணமுடியும். இங்கே சத்துக்கள் என்பது (சத்) உண்மை. உண்மையை உணர சாதனைகள் செய்பவர்கள்தான் சத்துக்கள்.

ஆன்மீகம்

ஆன்மீகமென்பது ஆன்மாவை மெய்யுணர்விற்கு இட்டுச் செல்லும் நெறி எனலாம். மனிதனில் அழிந்துபடக்கூடிய உடலும் அழியா உயிரும் இருக்கின்றன. அழிந்து படக்கூடிய உடலை அழியா உயிர் உய்தி பெற வேண்டிச் செய்யும் செயல்களெல்லாம் ஆன்மிகத்தின் பாற்படும். அதாவது சீவனைச் சிவனாகச் செய்யும் தொண்டுகள் அனைத்தும் ஆன்மீகமே. ஆன்மா இயல்பில் அன்பு மயமானது. இறைவனும் அன்பு மயமானவன். எனவே ஆன்மா தனது அன்பு நிலையை நான், எனது என்னும் செருக்கால் மறந்த நிலையில் உலகின் துன்ப துயரங்களுக்கு உள்ளாகின்றது. எனவே ஆன்மா உண்மை சொரூபமாகிய அன்பே மயமாதலே ஆன்மீகமாகும். இத்தகைய அன்பு மயமாகும் சாதனையே சைவம் கூறும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களாகும்.

"அன்பே சிவம்" என்றார் இறை அனுபூதி பெற்ற திருமூலர்.

யோகர் சுவாமிகளும்,

"அன்பே சிவம் அறிந்திடடா அதுவே நாமெனத் தெரிந்திடடா"

"அன்னை போல் அன்பில் சிறந்து"

"அன்பே சிவமென்றூதூது"

"அன்பே சிவமென வறிவாரவல மவனியிலடையார்
தன்போலெவரையும் நினைவார் சாந்தம் பொறுமையுடையார்
துன்பே கவலை பிணிகள் தொடராதிவர்களை நாளும்",

"அன்பே சிவமாய்க் கொண்ட பெரியோர்க்குத்
துன்பங்களேதுமுண்டோ - குதம்பாய்"

"அன்புடையோர் பாலறமெல்லா முண்டாகு
மின்பமவர்க் கென்றென்றிசை"

எனவும், இவ்வாறு பல இடங்களில் முழுமைப் பொருளாகிய சிவமும் ஆன்மாவும் அன்பு நிலைப்பட்டவை என்றும்இ அன்பென்ற பேரொளி சிவம் எனவும் அதை அடையும் ஆன்மாவும் அன்புப் பொருள் எனவும் கூறியிருப்பது நோக்கற்பாலது. எனவே ஆன்மாவை சிவத்துடன் ஒன்று படுத்தும் அன்பொளியை நம்மிடத்தே ஒளிரச் செய்யும் சிவதொண்டை ஆன்மீகப் பெருநெறியாக அனுபூதியில் உணர்ந்து செயற்பட்ட ஞானியே யோகர் சுவாமிகள்.

"சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங்காரமில்லை."

என்ற சுவாமிகளின் அருள்வாக்கு எம்மால் சிந்தித்து செயற்பட வேண்டியது. நாம் அச்சத்துடனும் சினத்துடனும் அகங்காரத்துடனும் செய்யப்படும் சேவைகள் ஆன்மீக மலர்ச்சி பெற உதவாது அகங்காரம் உள்ள இடத்தில் ஒருபோதும் அன்பிருப்பதில்லை. அன்பிருக்கும் இடத்தில் அகங்காரம் தொழிற்படாது.

ஆன்மீக ஒழுக்கம்

புன்நெறியில் செல்லாது நன்னெறியில் செல்லும் செயலே ஒழுக்கம் எனலாம்.

வள்ளுவர், "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார்

அன்பு வழிப்பட்ட அறநெறியில் ஒழுகுதலே ஆன்மீக ஒழுக்கமாகும். உலகச் சமய ஞானிகள் அனைவரும் மனிதன் ஒழுக்க நெறியில் நிற்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி உள்ளனர். அன்பில்லாதவிடத்து உண்மையான ஒழுக்கம் கைகூடுவதில்லை. ஞானம் அல்லது ஆன்மீக மலர்ச்சி என்பது உடலையும் உள்ளத்தையும் அன்பு வழியில் நெறிப்படுத்தல். சுவாமிகள் ஒழுக்கத்தின் மேன்மையையும், ஆன்மீக ஒளி பெறல் ஒழுக்க வழியிலேயே சித்திக்கின்றது என்பதனையும், தன் ஆன்மீக ஒழுக்கத்தின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே
ஓமென்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்குத் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்து தம்பிமாரே
நாட்டிற் பொருள் தேட வேண்டாம் தம்பிமாரே" எனவும்,

மேலும் அன்பினில் மக்களுக்குச் சேவை செய்வது பேரொழுக்கமாகவும் சுவாமிகளால் சொல்லப்படுகின்றது.

"வாய்மையும் ஆற்றலும் வளர்த்திடல் இன்பம்
தூய்மையும் அழகும் ஆர்த்திடல் இன்பம்
மேயநன்னீதி மேவிடல் இன்பம்
நேய அன்புலகில் நிறைந்திடல் இன்பம்
பாமர மக்கட் பணிசெயல் இன்பம்"

நெஞ்சிலே உண்மை அன்பு இருக்கும்போதே வாய்மை அதாவது சத்தியம் பேசப்படுகின்றது. நெஞ்சிலே உண்மை அன்பு பெருகும்போதே தருமம் (அறம்) செய்யப்படுகின்றது. எனவே உண்மையான ஒழுக்கம் அன்பு வழியிலேயே இடம் பெறுவது. இது ஞானிகளின் அருள் ஒளியில் கண்ட அனுபவ உண்மையாகும். அன்பிருக்கும் இடத்தில் நன்றியுணர்வு, மன்னிக்கும் தன்மை, அடக்கம் முதலான சீரிய குணங்கள் காணப்படுகின்றன.

வள்ளுவரும் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் என்றுதான் கூறினார். நாம் நமக்குள்ளே ஆன்மீக நிலையில் பெருப்பதற்கு ஒழுக்கமே அடிப்படைக் காரணமாகும் என்பதைச் சுவாமிகள் பல இடங்களில் போற்றியுள்ளார். அன்பொழுக்கமே ஆன்மாவை ஒளிபெற வைக்கின்றது. சிவத்தையும் ஆன்மாவையும் ஒன்றாக்கும் அன்பொழுக்கத்தை சுவாமிகள் பல இடங்களில் எடுத்துரைக்கின்றார்.

"அன்பே சிவமென்று ஆன்றோருரைத்தார்கள்
ஆனமையால் நாங்கள் கிளியே அன்பாய் இருப்போமே
இரப்பவர்கில்லையென்று கிளியே எடுத்து நீ சொல்லாதே
ஈவது நன்மையெனக்கிளியே எடுத்தவ்வை சொன்னாரே
சாவது வந்தாலுங் கிளியே சத்தியம் மறவாதே
தாய் சொல்லைத் தட்டாதே தந்தை சொல் மந்திரமே"

"தனக்குத்தான் உண்மையாக விருந்தால் யாவும் விளங்கும். தன்னைப்போல் மற்றவர்களையும் நேசித்தலே தவம். அதுவே அறம்" எனவும்,

"நீ உடம்பன்று மனமன்று. புத்தியன்று சித்தமன்று நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியில் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்." இவ்வகையில் ஆன்மீக ஒழுக்கத்தை மக்கள் பேணும் வகையில் எளிமையாக எடுத்துக் கூறியவர் யோகர் சுவாமிகள். "மலையேறுவதற்கு உதவும் ஊன்று கோலைப் போலவே ஒழுக்கத்தை ஆன்மீக வளர்ச்சிக்கு அனுசரிக்க வேண்டும்" என்று சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

தன்னைத் திருத்தாது யாத்திரைக்குப் போவதனாலாவ தென்ன? என்ற கேள்வியை நமக்கு விடுகின்றார். ஒழுக்கமாய் நடந்து மனதை ஆத்மாவோடு சேர்த்துவிடவேண்டும். ஒழுக்கம் தவறினால் மனம் தீங்கு செய்யப்பார்க்கும் என்பதே சுவாமிகள் உபதேசம்.

யோகர் சுவாமிகள் நிலவுலகில் சஞ்சரித்த காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் பலமுறை திக் விஜயம் செய்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைத் தரிசித்திருக்கிறார்கள். ஆனால் அவர் காட்டிய வழியில் சிவதொண்டர்களாக இன்றும் வாழந்து கொண்டு வரும் அன்பர்கள் சிலராகவே உள்ளனர். காரணம் அவர் காட்டிய நெறியில் சாதனை செய்வோர் சிலரே. சுவாமிகள் செல்லப்பர் என்ற குரு மூலமாகப் பெற்ற ஆன்மீக வளத்தைக் கொண்டு தன்னையும் வளம்படுத்தி, உலகையும் வளம்படுத்துவதில் செயற்பட்ட உத்தம அருளாளர். அவரால் யாழ் குடாநாட்டில் மாத்திரமல்லாமல் இலங்கைத் திருநாட்டிலும் மேற்குத் தேயங்களிலும் ஆன்மீகப்பயிர் வளர்ந்து வருவது குறிப்பிடத் தக்க விடயமாகும். பரம்பொருள் இரண்டற்ற ஆனந்தமாய் நிலைகொண்டிருந்தாலும் மனதின் மாசினால் ஏற்படும் அறியாமையினால் காணமுடியாமல் உள்ளது. எனவே மனமாசை நீக்குவதன் மூலமே ஆன்மீக வளத்தைப் பெருக்க முடியும் என்பதனை உலகிற்கு தனது வாழ்வாலும் வாக்காலும் எடுத்துக்கூறிய அனுபூதிமான் யோகர் சுவாமிகள். இவரது ஆன்மீகப் போதனைகள் அடங்கிய நற்சிந்தனை என்ற நூல் மனித வாழ்வை ஆன்மீக வளப்படுத்தும் ஒளி விளக்காகும். எனவே நற்சிந்தனையைக் கற்று அதன் வழிநடந்தால் நாம் சிவமாகிவிடுவோம்.



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வெளியீடு

ஈழத்து ஆலயங்கள்

யாழ் மாவட்ட திருத்தலங்கள் பாகம் – I

தொகுப்பாசிரியர் : வை. சோமசேகரன்

யாழ் மாவட்டத்திலுள்ள விநாயகர் ஆலயங்கள், சிவன் ஆலயங்கள், அம்மன் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள் மற்றும் ஏனைய ஆலயங்கள் என 350க்கும் அதிகமான ஆலயங்களின் வரலாறு அடங்கியுள்ளது.

நூலின் விலை : ரூபா 1250/=

கொழும்பிலுள்ள மாமன்றத் தலைமையகத்திலும், யாழ் பிராந்திய பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு

011 2434990 (மாமன்றத் தலைமையகம்), 0212221075 (யாழ் பிராந்திய பணிமனை)

கடவுளிடத்தும் சமயத்தின்மீதும் நம்பிக்கையின்மை இளைஞர் எழில் நலன்களனைத்தையும் அழிக்கும்

பேராசிரியர் டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்
இணைப் பேராசிரியர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்

நிலவுலகிலே தோன்றிய மானிடவுயிர்களனைத்தும் இறைவனது படைப்பு என்பதே வேதவாக்கியம். இயற்கையையும், பிரபஞ்சத்தையும் உலகத் தோற்றத்தையும் உயிரியற்கையையும், படைப்பு ரகசியத்தையும் நுட்பமாக எடுத்துக் கூறுவன வேத இலக்கியங்களாகும். வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல். சமய வாழ்வு இன்பந்தருவது. கடவுள் நம்பிக்கை அனைத்து எழில் நலன்களையும் கேட்காமலே அருளவல்லது. இத்தத்துவத்தினை நம்மில் எத்தனைபேர் அறிவார்களோ?! கடவுளிடத்தும், சமயத்தின் மீதும் நம்பிக்கையின்மை இளைஞர் எழில் நலன்களனைத்தையும் லேசாகவே அழித்துவிடும். அனைத்தும் உள்ளதுபோன்று தோன்றுமே தவிர அழிவின் விளிம்பை நோக்கி ஆழமாகச் செல்வதனை உணரும்நாள் எந்நாளோ? அனைத்துமிருப்பதாகக் கருதுவதும், தெய்வந் தொழா (அ)மையும், சமய வாழ்க்கையிற் பிடிப்பின்மையும் உலக அழிவிற்கே வழிவகுக்கும். மதவாதம், அடிப்படை வாதம் என்று கூறுவோர் தாமே அனைத்தும் தெரிந்துணர்ந்தவர்கள் என்ற பான்மையில் அரசியல் நடத்துகின்றனர். கேவலங்களை வளர்க்கின்றனர். இளைஞர் சிந்தனை நீதியை எப்பொழுதும் நாடி அமைவது. இளைஞர் நலன்களை நேசிக்கும் மனப்பான்மை கொண்டவர்கள், விஞ்ஞான விளக்கங்களை அனுசரித்து உண்மையை ஏற்று நடப்பவர்கள். ஆனால் இன்று இளைஞர்களதும் யுவதிகளதும் முகத்திலே இன்பம், மாங்களம், மகிழ்ச்சி, ஆனந்தம், சாந்தம், பெருமிதம், லக்ஷ்மீகரம், பூரிப்பு, வசீகரம், கவர்ச்சி என்பன மருந்துக்கும் கிடைப்பதரிது. முகம் சுடலை மாதிரியாகிவிட்டது. சுடுகாடு என்பதே சிவன் ஆடும் மயானம். வாழும்போதே முகம் சுடலையாயமைவது சரியா என யாராவது சிந்திக்கிறார்களா? நரிக்கும் மனிதருக்குமே வேற்றுமையில்லாததாகிவிட்டது. இளைஞர்கள் நினைக்கிறார்கள் தந்திரமாயும் கபடமாயும், ஏமாற்றியும், சுக நலன்களைத் தாம் பெற்று அனுபவித்துவிடலாம் என்று. இதன் வெளிப்பாடே "முகத்தில் மூதேவி" குடியிருப்பது. எண்ணத்தின் கண்ணாடியே முகம். தமிழிலே "அகத்தின் அழகு முகத்திற் தெரியும்" என்றுள்ளது. செம்மை நலன்களும், சீரிய சமய வாழ்வும் அமையாத வாழ்க்கையின் பெறுபேறுதான் சலிப்பைத் தருகின்ற முகம்; கவர்ச்சியையும் ஒளியையும், ஞான தீட்சண்ணியத்தையும் இழந்த முகம். எனவே முகக்கவர்ச்சி விளங்கவேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும் என்பது வினா. தெய்வம், கடவுள், வாழ் முதலாகிய பொருள் என்றும் உண்டென்று ஆழமாக நம்பவேண்டியது முதலாவது செய்யத்தக்கது. அடுத்தது, முகத்தில் பாரிஸ் பவுடர், அத்தர் (சென்ற்) வகைகளை அள்ளி அப்புவதும் அலங்கரிப்பதும் மேலைத்தேச கலாசாரத்தின் செயற்பாடுகள் என்பதனையுணர்வதுடன் எத்தனை வகையினவற்றை அப்பினாலும் உடலின் இயற்கை மணம், புலால் நாற்றம் அவற்றை விஞ்சி நிற்கும் என்பது சைவப் பேருண்மை. இளைஞர்கள் இதனைப் புரிந்து கொண்டால் முதலிலே செய்ய வேண்டியது தத்தம் உடல் நாற்றமெடுக்காமல் இருக்க ஆயத்தஞ் செய்வது; அதை எப்படிச் செய்து கொள்ளலாமென்றால் சைவ உணவு முறையினால் மட்டுமே அமையும். கீழைத்தேசப் பண்பாடு பற்றிய அறிவு இதற்கு வேண்டும். உணவின் தன்மைகள், உடற் சௌமானம், வியர்வை, கழிவுப்பொருட்களை அகற்றுதல் என்று சமய நடைமுறை விரிவுபடும். கடைப்பிடிக்கவேண்டும். மனிதன், இளைஞன் மந்தையுணர்ச்சியை விடுத்து அறிவுணர்ச்சி, தெளிவுணர்ச்சியுடன் நடந்து கொள்வதற்கும் கடவுளது திருவருள் பேறு கிடைக்கவேண்டும். இது எப்படியமையும் என்பது வினா? பரம்பரை, பாரம்பரிய இயல்பூக்கம் எனவொன்று ஒவ்வொரு உயிர்க்குமுண்டு. அது தந்தை, தாய், முந்தையோர் வழிவழி - வாழையடிவாழையாய் வருவது. வினைப்பயன் என்றும், கன்மவினை என்றும் சைவசித்தாந்தம் பேசுகிறது. தாம் தாம் செய்த வினைப்பயனுக்கேற்பவே பிறவிகள் தோன்றும் என்பது முடிந்த முடிபாகும். பிரார்த்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்று வகைப்படுத்தி விரித்துரைகிறது சைவசித்தாந்தம். இதனை நம்பாத புத்திஜீவிகளும், தான்தோன்றிச் சமயப் போதகர்களும் உலகை, இளைஞர்களைப் பிழையான வழிகளிலே திசை திருப்பி வழிப்படுத்தி இடர்ப்படுகின்றனர். பொருள்முதல் வாதமும், அதிகார ஆதிக்கமும் உண்மையின் கண்களை இறுக்கமாகவே மூடப்பண்ணி விடுகின்றன. இதனால் பொய்மையும், ஏமாற்றும், தன் முனைப்பும் தாண்டவமாடத் தொடங்குகின்றன. பிழையான வாழ்க்கை நேர்மையானதாகிவிட்டது. எதற்கும் பணம் வழிநடத்துகின்றது. மயக்கமே அதிகரிக்கின்றது; நேர்மை கைகட்டி நிற்கின்றது; வாய்மை ஐயோ என்று கத்துகிறது; பண்பு அடங்கிக் கிடக்கின்றது; பணிவு அவமதிப்புக்களாகிவிட்டது; தைரியம் நசிந்து கிடக்கிறது. ஏமாற்றுக் கோலோச்சுகிறது. போதனைகள் அதிர்வெடிகளாய்க் கிளம்புகின்றன. பின்பற்றுவாரிலர். "செயல்" என்பது பிறரைக் கொண்டு செய்விப்பதாகிவிட்டது. "ஏவல் பேய் கூரையைப் பிடுங்கும்" என்று தமிழிலே முதுமொழி பிழையானதல்ல; காரண காரியத்தொடர்புடையது. இந்த இலட்சணத்தில்தான் இளைஞர்களை நாம் கடவுளிடத்தில் நம்பிக்கை வையுங்கள், சமய வாழ்வு வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என்று கூவி அழைக்கவேண்டிய நிலையுள்ளது. "சேரவாரும் செகத்தீரே" என்பது சைவத்திற்குப் புதிதானதொன்றல்ல; ஆனால் தன்னைத் திருத்துதல், தன்னையறிதல் "Know my self" என்பதனை இன்று யார்தான் எண்ணிப் பார்க்கின்றனர். இத்தருணத்தில்தான்

பொன்னையும், பதவியையும், அதிகாரத்தையும் எள்ளி நகையாடி நிந்தனை செய்த சைவநாயன்மார்கள் நமது கவனத்திற்கு உரியவர்களாகின்றனர். "ஆசை" என்பது பொல்லாதது. அது அவாவைத் தரவல்லது. "பாசம்" அதைவிட வலிமை வாய்ந்தது. எதனையும் செய்யத் தூண்டுவது. இவற்றை வளர்த்தெடுக்கும் சக்தி மனத்திற்கு உண்டு. எனவே இளைஞர் மனம் என்பது நாம் கூர்ந்து அவதானிக்கவேண்டிய பொருளாகின்றது. இன்று இளைஞர் மனம் குரங்காகிவிட்டது. அமைதியையும் அடக்கத்தையுமுடைய மனதைக் காண்பது அரிதினும் அரிது. குழப்பமும், தவிப்பும், கோபமும், வேகமும் கொண்ட மனத்தை உடையவர்களே, வக்கிர மனம் படைத்தவர்களே மாந்தருள் மாணிக்கங்களெனத் திரிகின்றனர். இதற்கென்ன காரணம் எனப்புரிதல் கடினமானதொன்றல்ல; கற்ற கல்வியும், கற்ற பாடங்களும் தான் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றுடன் தொடர்புடையது. கல்வி என்பதன் பொருள் விளங்காமலேயே கற்றுவிட்டோமென்று எண்ணுகின்றோம். கல்வி எது? எதைக் கற்பது? ஏன் கற்பது? என்பதனை யாராவது கேள்வியெழுப்பி ஆராய்ந்து தீர்மானித்தார்களா? கிடையாது. தந்திரமும், ஏமாற்றும், பணம் உழைத்தல் நோக்கமும் சுய நலக்கொள்கையும் முதல் நோக்கமாக அமையும். சீவியத்தில் கடவுள் நம்பிக்கை, சமய வாழ்வு என்பன கேலிக் கூத்துகளாகவே முடியும். எதில் நேர்மை இல்லையோ அது அழியும். எதில் உண்மையில்லையோ அது நிறைவேறாது. இதற்கு வேறு சான்றுகள் காணவேண்டியதில்லை. பெரிய புராணமும், கந்த புராணமும், பன்னிரு திருமுறைகளும், அடியார் வரலாறுகளுமே சான்றுகளாகும். இவற்றை யாராவது கருத்தூன்றிக் கற்கிறார்களா? வாசித்தறிகிறார்களா? கற்றுத் திருந்தவேண்டும் என்றாயினும் நினைக்கிறார்களா? என்று இளைஞர்களே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் சமுதாய நலன் மேம்பாடு நல்ல சமுதாயத்திற்கான அறிவுரைகள், ஞானமேன்மைக்கான ஆன்மீகத்திட்டங்கள் என்று சிந்திக்க வேண்டாமா? அப்படிச் சிந்திப்பதுதான் தவறானதா? எது சரி? எது பிழை? என்று அலசிப்பார்க்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. "மனம் வெளுக்க வழியில்லை எங்கள் முத்துமாரி" என்றுதான் நாமும் ஒத்துப்பாடவேண்டியுள்ளது. எனவே இனி மனதைத் திருத்துவது, மனதைப் பயிற்றுவிப்பது எப்படி? என்பது முன்னுள்ள பெரிய கேள்வி.

இன்று தமிழ் இலக்கிய மரபிலும், சைவப் பண்பாட்டு மரபிலும் சொல்லப்பட்டுள்ள விடயங்களும், விழுமியங்களும் எள்ளி நகையாடப்படும் போக்கிலேயே சிதறுண்டு கிடக்கின்றன. அவற்றின் பெறுமதியை அரசாங்கமோ, அமைச்சர்களோ, அதிகாரிகளோ, நிர்வாகிகளோ ஏறெடுத்துப் பார்ப்பதாக இல்லை; மிலேச்ச கலாசாரமே அத்தனை பேரிலும் படிந்துபோய் கிடக்கின்றது. தர்மம், நீதி, நேர்மை, கடமை, கண்ணியம், மதிப்பு, கௌரவம் என்பனவெல்லாம் யாருக்கு என்ற கேள்வி எழுந்துவிட்டது. ஒடுக்குமுறை, அடக்குமுறை, பேதம், பாரபட்சம், அநீதி என்பனவற்றைக் கேட்கவும், பார்க்கவும் முறையிடவும், தீர்வுகாணவும் முடியாத இக்கட்டான அதிகாரத்தனம் உலக நாடுகளிலே கோலோச்சுகின்றன. எரிகிற வீட்டில் பிடுங்கினது மிச்சம் என்று சர்வதேச ராஜதந்திரிகள் தமது வேட்கையைத் தீர்த்துப் பிழைத்துக் கொள்கின்றனர். எதற்கும் நம்பகமான தீர்ப்பு என்பது ஒன்று கிடையாது. நாடகமே உலகமென்றாகிவிட்டது. இவற்றினால் ஆவது ஒன்றுமில்லை என்ற ஏக்கம் ஒரு புறம், மறுபுறம் இவற்றுக்கான எதிர்த்தாக்கம்தான் என்ன? என்ற வினா உண்டென்பதனை எவருமே மறந்துவிடக்கூடாது. அதுதான் கடவுளிடத்து நம்பிக்கையும், சமய வாழ்வில் ஈடுபாடும் என்பது, தாக்கத்திற்கு எதிர்த்தாக்கம் நிச்சயம் என்பது ஓர் உண்மை எடுகோள். இதனைக் கண்ணுக்கு முன்னாலேயே காண்கிறோமல்லவா? எனவே முதலில் நம்மை நாமே திருத்திக் கொள்வோம். நமது குறைபாடுகள் பற்றிக் கதைப்போம்; விவாதிப்போம்; நடுநிலையில் நின்று தீர்மானிப்போம். ஒத்துக்கொள்வோம்; விட்டுக்கொடுப்போம். பிறருக்காகவல்ல; நமக்காக; நமது நன்மைக்காக; நமது சமுதாய வாழ்வுக்காக; நமது கௌரவத்துக்காக; நமது இனமத மேன்மைக்காகவென்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. இவ்வளர்ச்சி நாயன்மார் நமக்குக் கண்டு காட்டியது. பொதுப் பணியில் கடைப்பிடித்தது; கடவுட்பணியில் வெற்றி தந்தது. ஆகவே கண்ணை மூடிக்கொண்டு காரியங்கள் செய்வதைவிட கண்ணை அகலவிரித்துக் கொண்டு நலநோக்க மேம்பாட்டோடு காரியங்கள் செல்வதையே இளைஞர்கள் இன்று வலியுறுத்த வேண்டிய விடயமாகும்.

"காலம்" பல்வேறு சரியான - தேவையான காரியங்களைச் செய்யும் என்பது வாஸ்தவம். தேவையானவற்றைக் காலத்திற்கு ஏற்ப உருவாக்குபவன் கடவுளே! ஆதலால் "காலத்தை உருவாக்கும் காரணன்" என்று கடவுளை அழைப்பதுண்டு. ஒருவனை இன்னொருவன் ஆளுகின்றான் என்பதே மாபெரும் தவறு. அது எப்படி? என்பது இன்று ஆட்டங்கண்டுவிட்டது. அடிமை கொள்ளவும் முடியாது. எனவே நிகழுகின்ற துன்ப துயரங்களுக்குப் புதிதாய் என்ன தீர்வு! என்பதுதான் கேள்வி, அப்படியொரு புதிதும் வேண்டியதில்லை. எல்லாத்திற்கும் பழைய முறையிலேயே சரியான உறுதியான தீர்வு சொல்லப்பட்டுவிட்டது. அதனைப் பாராததும், படிக்காததும், பரப்பாததும்தான் நம்மீதுள்ள மாபெரும் குற்றம். குற்றங் களைந்து குறைதீர்க்கும் சிந்தனையாளர் தோன்றும் வரை இடர்தான் மிஞ்சும். பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டிருப்பதால் தீர்வு வராது; தீர்ப்பு வந்துவிட்டால் பிரச்சினை சொல்பவர்களது பதவி தேவைப்படாது. எனவே பதவியாசையுடைய மேதாவிகள் தாமிறக்கும்வரையில் நீதிக்கு அடிபணியப்போவதில்லை. அநீதியைப் பெருப்பிக்கவே ஆசைப்படுவர்; அதற்கு நெய்யூற்றுவர்; இதுதான் நடைமுறையிலுள்ளது. இதனால்தான் ஞானிகள் "தம்மைத்தாம் முதலிலே திருத்திக் கொண்டார்கள்." அதிகமான சான்றுகள் வேண்டியதில்லை. "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும்" என்று தொடங்கும் தாயுமானவர் பாடல் ஒன்றே நமது மனந் திருந்தப் போதுமானது. இன்று யாருக்கு யார் சொல்வது? என்பது பாரிய பிரச்சினையாகும். இவையனைத்தும் சைவநெறியை அறியாதாருக்கே பிரச்சினைகள். இனிக் கடவுள் நம்பிக்கைக்கும், சைவாசார சமயவாழ்வுக்குமெனக் கடைப்பிடிக்க வேண்டியவையென்பது குறித்து நோக்கலாம்.

"மண்ணுலகிலேயே பிறவிமாசற வாழலாம்" என்பதனை முதலிலே நம்ப வேண்டும். ஞானசம்பந்தப்பெருமான் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்றும்,

"பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததையெண்ணில் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்றும் நம்பிக்கையுடன் தேவாரத்திலே அருளிச் செய்துள்ளார். ஒழுக்கமுடைமை, அடியவர்களுக்குரிய பண்புகளைத் தாங்கி நிற்றல், அடியார்க்கு இங்கிதமான உருவ வடிவினராக இறைவன் காட்சிப்படல், தல யாத்திரை, தீர்த்த யாத்திரை முதலியவை பக்தியுடன் இணைந்த செயற்பாடுகள். இறைவன் பெருமைகளைக் கேட்டல், உருகிப்பாடல், தொழுதின்புறல், இறைவன்மீது உரிமை கொள்ளல் முதலியவை பக்திநெறிக்கு மேலும் வலுவூட்டுகின்றன. வீடுபேறு அடைவதற்கு பக்தி வழிமுறையாகின்றது. பக்திச்சுவையோடு ஈடுபடல் வீடுபேற்றினை அடைவதற்குரிய கலைநுகர் நடவடிக்கையாகின்றன.

சமயம் என்பது நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. மக்களை மக்களாக வாழ்வதற்கு வழிகாட்டுவது. வாழ்க்கையில் தன்னம்பிக்கையும் தளராத முயற்சியையுந் தருவது. வாழ்க்கையில் குடும்பத்தில் இருந்து கொண்டே பரம்பொருள் நாட்டமும் கடவுள் நினைப்பும் உலகியலில் பூரணத்துவமும் பெறுவதற்குச் சமயம் நெறிப்படுத்துவது மனித நேயத்தை வளர்ப்பது, அனைத்திற்கும் ஆதாரமாயுள்ள இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்வது. இந்தப் பெரு நம்பிக்கைதான் சமுதாய மேம்பாட்டிற்கும் செம்மைக்கும் மூலகாரணமாக அமைவது.

சைவசமயம், சைவக்கடவுள் ஆடம்பரத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல; எளிமையையும் உண்மையையுமே அவை ஏற்றுக்கொண்டவை சைவம் எளிமையானது; சிவனெனும் கடவுள் உண்மையானது. இளைஞர் சமுதாயத்திற்கு நல்ல ஆங்கிலப்புலமை வாய்ந்த நாவலர் பெருமானும், மேலைத்தேச ஆராய்ச்சியிலே சிந்துவெளிப் பண்பாட்டின் பெருமையை ஆதித்தொன்மையுடைய சிவவழிகாட்டினூடே கண்கொட்டிய சேர். ஜோன் மார்ஷல், ஆர். டி. பனர்ஜி போன்றவர்களும் ஒருங்கே எடுத்துரைப்பது வருமாறு. இவ்வாங்கில மேற்கோள் கற்றுணர்தற்குரியது.

"Among the many revelations that Mohanjadaro and Harappa have had in store for us. None perhaps is more remarkable then this discovery that saivism has a history going back to the chalcolithic age, or perhaps even further still and it thus takes its most ancient lining faith in the world (Vide Mohanjadaro and the Indus Civilzation Vol. I.P. VII) என்று தெளிவுறுத்தல் எண்ணத்தக்கது.

சைவசமயம் உலகத்திலேயே மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதும், அந்நெறிக்குரியவர்கள் தமிழர்கள் என்பதும் அறிஞர் பெருமக்களின் கருத்தாகும். இளைஞர்கள் அறிவார்ந்த அடிப்படையிலே சைவத்தின் பேருண்மைகளை நாவலர் வழியில் ஆழமாகவே கற்று அதன் பேருண்மைகளைத் தெளிவாகப்புரிந்து கொள்ளல் வேண்டும். சைவம் பெருந்தொகை நூல்களைக் கொண்டிலங்குவது; நூலளவேயாகுமாம் நுண்ணறிவு; வாசித்துணர்ந்தறியக் கடவர். பல போராட்டங்களைக் கண்டதும் அவற்றை வென்று வாகை சூடியதும் சைவ சமய வரலாற்றிலே உண்டு. "நாமார்க்கும் குடியல்லோம்" என்பது திருநாவுக்கரசரது கோஷம். நெருக்கடி ஏற்படும் பொழுதெல்லாம் சைவநெறியைக் காக்கத் திருவருளால் ஞானிகளும் சான்றோர்களும் தோன்றியுள்ளனர். சைவ சமயத்தினைப் புறச்சமயத்தினின்று காக்கவும் தமிழர் நம்பிக்கைகளையும் பண்பாட்டினையும் பேணவும் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிக்கவாசகர் என்ற நால்வரும் தோன்றினர். பண்சுமந்த பாடல்களில் அப்பரும் சம்பந்தரும் பதிகங்களைப் பாடி மக்களைத் தடம் புரளாமல் காத்தனர். இவர்களால் சைவம் எங்கும் நிலைபெற்றது. வட நாட்டுப் பக்திப் பண்பாட்டை விடவும் தென்னாட்டு பக்திப்பண்பாடு வீரியமிக்கது; செழுமை வாய்ந்தது. அருள் வயப்பட்டது. எனவே தியான வழிபாட்டின் மகோன்னதத்தைவிட மகோன்னதமானது பண்ணிசைத் திருமுறை வழிபாட்டு மரபு என்பதனை அறிந்துணர்ந்து தெளிந்து விட்டால் போதுமானது. அருளால் ஆட்டுவிப்பது பண்ணிசைத் திருமுறை வழிபாடே. இறைவன் கேட்பது பண்ணையே; அருள் புரிவதும் திருமுறைத் தமிழுக்கே. அற்புதங்களைச் செய்வதும் திருமுறைத் தமிழுக்கேயாம். எல்லோர்க்கும் எளிதானது திருமுறைகளை மனனம் பண்ணி மூலைமுடுக்கெல்லாம் ஓதுவதே. மொழியுணர்வும், இறையுணர்வும் ஏற்பட இறைவனது அருட்கருணை வேண்டும். இவை வேண்டாம் என்ற பிடிவாதம் மேலும் அழிவையே நல்கும். திருந்தவேணும்; திருந்தலாம் என்று நினைப்போருக்கே எழுத்தும், கருத்தும்; வெளியீடும். அந்தச் சிந்தனையற்றோரைக் காப்பாற்றவேண்டிய தேவை எமக்கில்லை; அழிவதை நிறுத்துவது யாமல்ல. அழியப்போகின்றோம் என்பதையும் நம்மால் தடுக்கமுடியாது. இயன்றளவு முயல்வோம்..... விதிப்படி - ஊழின் வழி நிகழும் என நம்புவோம்; வேறென்ன செய்யமுடியும்? அழிவதைக் கண்டு பதறுவதைத் தவிர்ப்போம்! "கெடுகுடி சொற்கோளாது" என்று தமிழிலே வேலைமினக்கெட்டுச் சொல் வைக்கவில்லையே! புரிந்து செயற்படுவோமா என்ன சொல்லுங்கள்!

இளைஞர்களே! நீங்கள் சைவாலய வழிபாடு செய்தால் இக்கட்டுரையாளருக்குப் பயன் கிடைக்காது. உங்களது வழிபாட்டுணர்ச்சியினால் பலனும் உங்களுக்கானதே. ஆலய வழிபாட்டின் அடிப்படைத் தத்துவத்தை நீங்கள் உணர்வது இக்கட்டுரையை எழுதும் எமக்கு ஒருபோதும் உதவப்போவதில்லை. அது உங்கள் மனைவி, மக்கள், உறவினர்கள், சமுதாயத்தினர் என்போர்க்கே பயன்படப் போகிறது. எனவே நன்மையும் நலனும் விளையவேண்டும் என்பதே நமது உயர் நோக்கு ஆசை; எனவே ஆலயந்தொழுவது சாலவும் நன்று; "கோயில்லாத ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது புதியதல்ல; ஆகப்பழமையானது; செய்யத்தக்கது. "பொல்லாங்கு" என்பது ஔவையாரின் சொல். "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்." என்பது சைவசமயப் பெரும் பண்பாடு. அகன்ற ஞானச்செல்வர்கள் - மன விரிவும் விசாலமுமுடையவர்கள் எவரையுமே பொல்லாங்கு சொல்ல மாட்டார்கள். இளைஞர்கள் விவேகமும், உடற்பலமும், நீதி முறைமையில் நம்பிக்கையுமுடையவராதலினாலே பிறரைப் பொல்லாங்கு சொல்லமாட்டார்கள்; ஒருவரையுமே பொல்லாங்கு சொல்லமாட்டார்கள். ஆகவே சைவநெறி தழைத்தோங்குவதற்கு இப்பொல்லாங்கு சொல்லும் பண்பை நிறுத்துவோம். "மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்" என்பது இன்னுமொரு அறிவுரை. இவற்றை நாம் நினைந்தொழுகவேண்டும்.

தமிழ்மூலம், பண்பாடு மூலம் இவற்றின் தாற்பரியங்களைத் தெளிவுற அறிந்து ஒழுகுதல் வேண்டும். சொந்தத் தாயினிடத்தில் அன்பு பாராட்டாதவன் பிறரிடத்தும், கடவுளிடத்தும் எப்படி அன்பு - நேசம் கொள்வான் என்பது மிகப்பெரிய பயனுள்ள கேள்வி. ஆலய வழிபாட்டிற்கு மீசையை விலக்கல், தாடி வைத்தல், காவி கட்டல், உருத்திராக்கம் அணிதல் போன்ற புறச்சின்ன அலங்காரங்கள் இளைஞர்களுக்குத் தேவையில்லை. சிவசின்னங்களை அணிதல் கோல அழகு தரும். திருநீறு தரித்தல், சித்தத்தைக் கடவுளிடத்துச் செலுத்துதல் இரண்டுமே போதுமானது. அகத்தூய்மையே ஆலய வழிபாட்டின் ஆணிவேர்.

முழுமுதற்கடவுள் சிவன் என்ற தெளிவில்லாத பலர் இன்று தாம்தாம் உருவாக்கும் கடவுளர்களே குலதெய்வம் என்று மலைப்புற்றுக் கெடுகின்றனர். இவ்விடத்தில் தெளிவுபெறுதல் அவசியமாகும். மனிதர்கள் எவருமே கடவுளரல்லர். பிறப்பும் இறப்புமற்ற சிவன் ஒருவரே உலகுக்கு முழுமுதற் கடவுள். காலத்தால் முற்பட்ட, இன்னும் ஆராய்ச்சியினாலும், வழிபாட்டினாலும் கண்டு காட்டொணாத தன்மையன் சிவபெருமான் மட்டுமே என்பதே பேருண்மையாக அமைய உலக மாந்தர் தத்தம் ஈடுபாடு காரணமாக யோனிவாய் பிறந்து மடியும் தன்மையாளரை கடவுள் என்று கொண்டாடுவது பொருந்தாது எனின், மகான்களையும் ஞானிகளையும் அருளாளர்களையும் மார்க்க சீலர்களையும், அடியார்களையும் விலக்குங்கள் என்று கூறுவதென்பது அர்த்தமல்ல; முழுமுதற் கடவுள்பற்றிய பிரக்ஞையே இங்கு அலசப்படுவது. இதில் தெளிவு ஏற்படாதுவிடின் இடர் பல உருவாகும். வேதனை மிகும்; துன்பம் தொடரும்; தீமை மலியும்; மரணம் பெருகும்; சோகம் நீடிக்கும். துயர் ஒருபோதும் தீரமாட்டாது.

சரியானவற்றுக்குக் குரல் கொடுக்கும் பண்பு இளைஞர்களுக்குரியது. அநீதியை உரிய இடத்திலேயே தட்டிக் கேட்டல் என்பது தர்மத்தின் பாற்படுவது. எனவே திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள் நிகழுமிடத்து அவற்றை விலக்கி வைக்கத் தொழிற்படும் சிவதொண்டரணியினர் தோன்ற வேண்டிய கட்டாயம் உண்டாகியுள்ளது. திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள் பற்றிய அறிவு அனைவர்க்கும் அத்தியாவசியமானவையாகும்.

1. ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். அதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும், பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்பவன் என நூல்கள் கூறுகின்றன.
2. ஆசாரமில்லாது நடமாடுதல்; விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்.
3. ஒரேமுறை பிரகாரத்தில் வலம் வருதல்.
4. எச்சில் உமிழ்தல்; மலசலம் கழித்தல்.
5. நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்.
6. மயிர் கோதி முடிதல்; சூதாடுதல்.
7. பாதரட்சை இட்டுக்கொள்ளுதல்.
8. வீண்வார்த்தை பேசுதல், பொய் பேசுதல், இரைந்து சிரித்தல்.
9. பிறரைத் துன்புறுத்தல்; விளையாடுதல்.
10. சுவாமிக்கும், பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்.
11. அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம் வருதல்.
12. திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்.
13. காம எண்ணங்கொள்ளல்.
14. கம்பளி ஆடை அணிதல்.
15. இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல்; தாம்பூலம் தரித்தல், புகைத்தல்.
16. விக்கிரகத்தைத் தொடுதல்.
17. தூபி, துவஜஸ்தம்பம், கொடி மரம், பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்.
18. உற்சவம் கொண்டருளும்போது அவ்விடத்தைவிட்டு உள்ளே போய் வணங்குதல்.
19. வழிபடுவோர்க்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளல் என்பன திருக்கோயிலில் செய்யத் தகாதவைகளாகும்.

நாம் சிவனை வழிபடும் சைவர்கள் என்பதை மரணபரியக்தம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். சைவர்களுக்கே "முத்திப்பேறு" என்பதுண்டு என்று கூறுவது சைவசித்தாந்தம். பிற சமயங்களிலே முத்தி கிடையாது. எச்சமயத்தினராயினும் ஈற்றில் சைவசமயம் சார்ந்தே உயிர்கள் முத்தியடைய வேண்டும் என்பதே நியதி முறைமை; இதனை எவராலும் மாற்றுவதரிது. மாற்றமுடியாததொன்று முத்தி; நாம் சிவனை வழிபடும் சைவர்கள். எங்கள் முழுமுதற் கடவுள் சிவன். வேதவிதிமுறையை நம்பாத அவைதிக நெறியினர் பொய்கூறி மயங்கித்திரிவர்.

இளைஞர்களே! எங்கள் முழுமுதற்கடவுள் சிவன், விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், வீரபத்திரர், உமையம்மை சிவமூர்த்தங்கள். சிவனுடைய இந்த மூர்த்தங்களும் சைவ சமயத்தவர்களின் வழிபாட்டிற்குரியவையே. சிவனையும் சிவமூர்த்தங்கக்களையுமே நம் வழிபடு தெய்வங்களாகக் கொள்ளமுடியும். சிவனை மட்டும் தான் வழிபடவேண்டிய நிலையிலுள்ள நாம் சிவமூர்த்தங்களிலும் சிவனைக் காணும் முறைமையாலே அவற்றையும் வழிபடமுடியும்.

உலகச் சைவசமயிகளே! உலகச் சைவ இளைஞர்களே! நாம் புரிந்து கொள்ள வேண்டியதொன்றுள்ளது. அதாவது, சைவனுக்கு என்று ஒரு வாழ்வியலுண்டு. சைவனுக்கென்றொரு பண்பாடுண்டு. சைவனுக்கென்றொரு கோலமுண்டு. பார்த்த பார்வையிலே ஒருவன் சைவனா? அல்லனா? என்று கண்டு கொள்ளமுடியும். அந்தளவுக்குச் சைவம் அவன் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்து கிடக்கின்றது. சைவசமயத்தவனின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் சைவசமய வாழ்வுடன் தொடர்புடையவைதான். இவற்றை ஒழுங்காகக் கடைப்பிடித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

பல்துறை வித்தகர் நாவலர்

நாவலர் பெருமான் வாழ்ந்த வாழ்வு பெருவாழ்வு. ஊதியம் பெறாத ஆசிரியராக, பாடசாலைகளின் நிறுவுனராக, நிர்வாகியாக, அச்சியந்திர கூடங்களின் சொந்தக்காரராக, நூல் வெளியீட்டாளராக, வியாக்கியானம் செய்பவராக, பதிப்பாளரா, மொழிபெயர்ப்பாளராக, கவிஞராக, கிடைத்தற்கரிய ஓலைச்சுவடிகளைத் தேடிச் சேகரித்தவராக, பேச்சாளராக, பிரசங்கியாராக, கண்டன எழுத்தாளராக, துண்டுப்பிரசுர (சிறுநூல்) எழுத்தாளராக, பாடநூல் எழுத்தாளராக, நீதியுதவிக்கு அரசாங்கத்திடம் விண்ணப்பிப்போனாக, சக மனிதர்களின் துன்பங்களை நீக்குபவராக, சமூக – சமய – அரசியல் – பொருளாதார சீர்திருத்தவாதியாக நாவலர் பெருமான் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

(நன்றி : இந்து சாதனம் - 30.11.2001)

Service of ACHC and CYWHA are indeed commendable

Speech delivered by Mrs. Jeeva Perumalpillai Essex (Chief Guest)

at the opening of Yarl Angadi at Saraswathy Hall on 31st October 2015

A Very Good Morning tothe Honorable President of the Ceylon Hindu Congress, President of the Young Women's Hindu Association, Ladies and Gentleman.

Thank you for inviting me on this special occasion of the opening of the Jaffna Bazaar or YarlAngadi where both the sponsoring organizations are celebrating importantmilestones ie. the 60th anniversary of the All Ceylon Hindu Congress and the 50th anniversary of the Colombo Young Women's Hindu Association. Both organizations have been very successful in being able to raise funds for key activities that address vulnerability and those in need, throughout the country– for providing assistance to those affected by natural disasters and the war to providing homes for elders and orphans. This is indeed commendable.

Many of you may not know me, so a little introduction. I have lived most of my life overseas and have now taken early retirement from July 2015 from the World Bank to assist in the development of Sri Lanka ,and Northern Province, in particular. My late parents –father from Thambasetty- the first Sri Lankan Veterinarian and mother a teacher from Kokuvil– one of the first women in Jaffna to have obtained a degree from the University of London by correspondence, have imbibed in us the need to come back and invest in our country. The current situation has given us the opportunity. For example, in the past Two years my elder brother Dr. Ravi Pillai, has established a cardiac unit at the North Central Hospital in Jaffna and this has provided a great opportunity for the people in the North. Something that was in the distant past and considered impossible.This is not a one-off activity, similar initiatives have been taken bythe diaspora- broadly defined as those living out the Province. I would urge the diaspora to continue and contribute their knowledge and expertise to strengthen the community. There is so much to do!

I am now committed to invest my knowledge and assist in developing the Northern Province. As an economist and having worked in international financial institution for the past 35 years it is time to give something in return to my native soil.

I would like to see the Northern Province contribute to national GDP –from 3.6% in 2014(Based on report of the Central Bank) to atleast 10% (commensurate with the area ratio with the rest of the country , over the next five years. The Northern Province contributes the least to national GDP amongst the 9 provinces. But there is tremendous potential – we have adequate natural resources- good agriculture, fisheries and livestock and ample opportunity for tourism. What we lack are entrepreneurs and innovators who can exploit the resources for economic benefit and especially increasing employment and improving livelihood.

In the short time living in Jaffna, I find the women in the North extremely hardworking, involved in many activities. With help in marketing theywill be able to improve their livelihoods in leaps and bounds.

The bazaar is a great concept for promoting products of the North. There are about 60, 000 female- headed households in the five districts of Northern Province. The reasons for the large number of female headed households relate directly to the war - deaths, disabled spouse, husband in detention, missing , migration etc. Additionally, there are issues of separation, drug and alcohol dependent spouses. Many of the women are members of community based organizations (CBOs). Many of them are already engaged in a number of vocations: tailoring, small shops, food /spice processing, farming and livestock, greeting cards, leather bags etc. . I have interacted with them. They main problem is that they do not have access to markets, they do not know what the market wants, they do not know what "quality" and packaging attracts demand for their products.

I hope some of you will give us ideas and feedback on the products sold here from Jaffna that can attract suitable markets both here in Colombo and for export. If you can let us know suitable retailers/wholesalers who are willing to buy these products –we can endeavor help to train the producers to ensure quality and standards. Ideally getting contracts (maybe 5 years or more) there will be a viable business model for the producers / groups to borrow money and invest in materials and equipment to meet demand. I believe in getting the groups to invest their own resources and train them so as to improve their livelihood , as the saying goes : " teach people to fish rather than giving them the fish" .

I note that this bazaar is called YarlAngadi- Given that most of the Northern Province produce similar products it would be beneficial to get the Vanni area to be more involved, they were most affected by the recent war.

I hope to reach out to many of you to help me understand and to let me know what is the best way forward – your knowledge and experience is invaluable.

I wish the organisers the very best and a very successful fund raising event.

Thank you very much.

IMPORTANT FASTS TO BE OBSERVED

It is our duty to think of God who has given us much benefits, and praise and worship him. Those beings who have no sixth sense cannot do so. For the human beings with sixth sense it is an essential duty. However due to the fast changing world it may not be possible. At least on certain days people can do so. Those days are the fasting days.

To prevent the mind from going astray, even by giving up the meals or reducing the amount of food and by thought word and deed one should worship God sincerely. This is fasting says the Tamil scholar Arumuganavalar.

Fasting is done to redeem the soul. Fasting is one of the seven meritorious deeds mentioned by the elders. By observing fasts, the mind and thought would be pure. And this will lead to achieving good wisdom (Gnana spiritual wisdom)

The fasts and the rules of observing them

Vratham or fasting means to control the five senses. That means the mind must concentrate without straying. This can be done by giving up food or reducing amount of food, and by keeping the body mind and soul pure. In this way one can worship God sincerely.

During fasting days, the one who observes fast should not chew betel, smoke, sleep during day time, involve in carnal pleasures. If one does so one is subject to punishment for committing such sins for which there is no atonement.

Fasting will enhance one's life and lead up to gain benefits. There are many kinds of fast that deal with taking meals:-

1. Yasitham
   Eating twice a day
2. Pathakrichanam
   Eating good food
3. Pannakrichanam
   Soak the tender leaves of athiri, bo-tree or vilvam and eat.
4. Saumiakrichanam
   Any one of the following milk, butter milk, water, and roasted flour can be taken.
5. Athikarichanam
   For three days eat only one handful of rice or go without it.
6. Krichana krichanam
   drink only milk for twenty one days.
7. Prasapathiya krichanam
   Be without food for three days, for three days eat only in the morning, for three days eat in the evenings and for three days there will be a pause.
8. Parka krichanam
   Be without food for twelve days.
9. Santhapana krichanam
   One day urine of cow, one day cow dung, one day milk, one day water in which holy grass (thatpai) is soaked and one day the food could be taken.
10. Maha santhapana krichanam
    Observe any one of the above mentioned.
11. Santhrayanam
    During waxing moon one handful of food is increased and during waning moon reduce food by one handful daily and bathe three times a day.
12. Vala santhrayanam
    During this santhrayanam take four handfuls of food at night only.

Chithirai (April)

The full moon in April

It is not only the first full moon after the Tamil New year but it is also the day when Chithra gupthar (one who keeps the record of the dead for Yaman God of death) took an Avathar (incarnation). On this day those who lost their mother fast in honour of their mother so that their soul will rest in peace. On that day avoid salt and abstain from taking cow milk or curd. This will lessen the ill effects of sins committed.

Chithirai Thiruvonam

Among all the Abisekams done to Lord Nadarajah the one done after the birth of the new year in April which falls on Thiruvonam it is an important day for prayers to Lord Nadarajah.

Vaikasi (May)

Vaikasi Visaakam

Not only is it the day when the evil asuras (Evil demi gods) were vanquished to protect the devas and dharma established on earth but also it is the day God Muruka's incarnation in the pond called Saravanapoihai took place. So it is a day most suited for worship of God Muruka.

Aani (June)

Aani Utharam

That was the day when our Lord Nadarajah performed His cosmic dance at Thillai (Chithambaram.) By this dance our Lord Nadarajah performs the five functions (Panchakrithiyam) of creation, protection, distraction, enfolding and bestowing grace. This is a special day to have a dharshan (view) of Lord Nadarajah.

Aadi (July)

Aadi Chevai (Tuesday in the Thamil month of Aadi – July

This day is special for a tharsan of Goddess Ambal. If unmarried girls fast on this day they will be blessed with a

married life. Those who are under the adverse effect of the planet mars (Chevai) and others should start the fast with a resolution. It is excellent to do so. This fast could be observed by taking rice or milk and fruit just once.

Aadi amavasai (the new moon in the month of Aadi)

This is the good day to perform the rites to the forefathers. Those who have lost their father should fast on this day and spend the day in prayer and in giving alms for their souls to rest in peace.

Aadi pooram

Pooram is a particular star constellation. It seems it is on this day Goddess Umathevi attained age (when she took an avathar on earth). This day iis best to have a tharsan of her and observe a fast. The day is more suitable to acquire Ambaal's eight kinds of bliss (success).

Aavani (August)

Aavani Sathurthi (fourth day of the waxing moon)

This day is the day God Vinayagar took an avathar. Hence this is the best day to worship God Vinayagar.

The fast on Vinayaga Sathurthi

Every month the fourth day of the waxing moon is Vinayaga Sathurthi. It is most opportune to observe this fast. This fast gives more benefits than the other fasts say religious texts. On that day it is not good to see the crescent moon. During the day one must fast and after worshipping at the temple eat some sweet meats like kolukaddai, and mothakam after offering these to God Vinayaga. Those who observe this fast do poojah to God Vinayaga using arukam pul (grass). This will give them endless benefits. Those who observe this fast and worship God Vinayaga with sincerity will receive the grace of God Vinayaga. The fourth day of the waning moon is called Sankadahara sathurthi and on this day too devotees fast.

Aavani Sathurthasi

This is one of the days when an abishekam is done for Lord Nadarajah and it is a good day for a tharsan of Lord Nadarajah.

Aavani Moolam

To save one of His ardent devotees saint Manikavasakar, who was put in prison for failing to purchase some horses for the Pandiya King, God Shiva adopted a tactic. The saint used the money given by the state, to feed some Shiva devotees and was imprisoned. God Shiva converted some foxes in the forest into horses and bailed him out. On this day the star galaxy of Moolam was overhead. Hence this is observed as a day when God Shiva carried a basket of soil in exchange for a meal of pittu.

Aavani Gnayiru (the Sunday in the month of Aavani – August)

The Sundays of the month of Aavani are observed as days of fasting for the sun and the worship of the sun. At this time the sun enters Leo and so the Sundays are of importance.

Purataathi (September)

Fasting for Nine nights

In the thamil month of Purataathi from the first day of the waxing moon to the end of the ninth day Kumbam is set up and poojah performed for nine days and Goddess Thevi is worshipped. The fasting for the nine days is for Her. The eighth day during this time is called Maha addami, and the ninth day or navami is known as maha navami. So this fasting is called maha nonpu (great fasting) or of mahar nonpu and observed. This fast is specially done by the devotees of Thevi. During these nine days of fasting the first three days devotees fast beseeching Goddess Thurka to give them courage, as she is the Goddess of courage. The next three days, they fast entreating Goddess Luxmi to grant them wealth, and the last three days they fast requesting Goddess Saraswathy to grant them knowledge through learning. Those who observe this fast on the day after full moon called prathamai, apply oil on their heads and bathe (oil bath). During the first eight days they have only one meal a day. On the ninth day known as maha navami they do not take solid food at all. This is an excellent act. On these days they should sing Abirami Anthathi and Sahalakala maalai composed by Kumarakuruparar.

The poojah methods for the nine days

Day	Raga	Offering	Fruit	Flower	Leaf
One	Thodi	Milk rice & gram	Banana	Jasmine	Vilvam
Two	Kalyani	Tamarind rice	Mango	Mullai	Basil (Thulasi)
Three	Kambothi	Sweet rice with jaggery	Jak	Sampanki	Maru
Four	Bairavi	Mixed rice & chips	Guava	Jaathi Malli	Kathir pachchai
Five	Panthuvarali	Curd rice	Pomegranate	Pavala Malli	Viputhi pachchai
Six	Neelampari	Coconut rice	lemon sp	Semparathi	Sandalwood leaf
Seven	Pilahari	Lime rice	Dates	Screwpine	Thumpai
Eight	Punnahavarali	Payasam & murukku	Grapes	Rose	Paneer leaf
Nine	Vasantha	Curdled milk	Naaval (Black berry)	Lotus	Maruko lunthu

Purataathi sani (Saturdays in the Thamil month of Purataathi – September)

Generally Saturdays are set a aside for worship of Lord Saturn. Yet the fast on Saturdays in the month of Purataathi are of special significance. This gives great benefits to the devotee. On this day Black gingelly seeds are wrapped in black cloth and kept in a clay lamp (Chutty vilakku) filled with gingelly oil and lit. The devotees take this lamp round the shrine of Saturn and worship him .

Ketharagowry Viratham (Fast)

This fast starts during the waning moon in the thamil month of purataathi on the eight day (Addami after the new moon) or ninth day (navami after the new moon) or tenth day (thasami after the new moon). Such days are referred as "Thithi". It ends on the fourteenth day after full moon (Sathurthasi "thithi") of the waning moon. The fast lasts for twenty one days it is a great fast. Goddess Umathevy meditated

on God Shiva and performed Shiva poojah. As a result she achieved the status of Arthanareeswarar (Umathevy became the left half of God Shiva by fasting.) Hence it is known as Ketharagowry viratham. Married women observe this fast to remain married and young girls observe this fast so that they could be blessed with a good married life. Men also observe this fast to lead of a life of auspiciousness. From the beginning of the fast the devotees keep forming a knot on a twine having twenty one threads and on the last day get the priest to tie on their wrist. For men it is tied on the right wrist and for the women on the left wrist.

Mahalayam

The mahalaya padcham (side) ends on the new moon in the thamil month of Purataathi (September). This is observed fifteen days before the new moon. This is done in memory of the forefathers and alms are given. Those who cannot give alms every month for the sake of their forefathers can do so at this time and earn the merit of giving alms for twelve months. This is called mahalayam. This is the day when the forefathers come to earth. The fourteenth day of waning moon in Purataathi is called Poorvapakka sathurthasi. Out of the six abishekams done for Lord Nadarajah, the abishekam done on this day is supposed to be a day of great significance.

Purataathi poorvapakka Sathurthasi (the fourteenth day "thithi" of the waxing moon in the Thamil month of Purataathi)

Out of the six abishekams done for Lord Nadarajah, the abeshekam done during this period is also one. This day is excellent to have a tharsan of Lord Nadarajah.

Aipasi – October

Fridays fast

"Sukkiravaram" means Friday. The Friday fasting is done on each Friday in the Thamil month of Aipasi. From the first Friday this fast is observed for God Subramaniam. On this day to observe Upavaasam (no meals for the day) is very good. Those who cannot do so may take in fruits in the night. If they are not able to do even this they may take a mid day meal. This fast should be observed for at least three years. When the fast ends a santhi kiriyai must be done. This kiriyai is called 'uthiyapanam'. It is said this is done to achieve merit. The last Friday is the best day for 'uthiyapanam'. Besides this day is also dedicated to Goddess Ambihai and God Vinayaga.

Kantha Sashti Viratham

The day after pirathamai the first 'thithi' after new moon, the six days following are observed as Kantha Sashti. Every day after the bath worship God Muruga and take only some water and observe 'upavaasam' for six days. On the seventh day join the Shiva devotees and have a meal. Those who cannot do so during the first five days may take a meal a day and on the last day observe 'upavaasam'. This fast should be continuously observed for six years.

On the said day that is 'pirathamai', from the third eye of God Shiva six sparks emerged and fell into the pond called 'saravana poihai'. They took six forms. When Goddes Uma took them together, they fused into one form with six faces and twelve hands. It happened on this Kantha Sashti day. It is on this day that God Muruga vanquished an Asura called Soorapathman. In the Kantha puraanam this is given in detail. The devas observed this fast and reaped much benefits, it is told.

Kaarthikai (November)

Kaarthikai Vilakeedu (Substitute with a lighted lamp)

Once upon a time, the devas worshipped God Shiva and did penance and were given many boons. Later they became egoistic and ignored God Shiva. One day God Shiva came to their place disguised as an old man and planting a fiber and ask them to pull it out. None of them could do it. They became humble and looked in awe at the old man. Then God Shiva appeared as a pillar of light. That day of the month of Kaarthikai also happened to be the Kaarthikai star galaxy too and it also full moon day. This is celebrated as Kaarthikai Vilakeedu.

Vinayaga Satti Viratham

This fast is observed the day after the Kaarthikai star galaxy and goes on for twenty one days. On the last day the star galaxy and the Satti 'thithi' are together. This is of great importance as it is one of the best days among all the fasts for God Vinayaga. It is on this day God Vinayaga vanquished the Asura called Gajamuka. Tying the twine round the wrist (Kaapu) is an important event. At that time relate verses of Vinayagar Ahaval and Vinayaga puranam.

Kaarthikai Viratham

In the Thamil month of Kaarthikai monthly,during the Karthikai star galaxy, fasting is done, praying to God Muruga. This is known as Kaarthikai Viratham. It is also known as kiruthikai. The day before this is 'Parani'. On that day in the customary way take one meal only and the next day that is Kaarthikai worship God Muruga in the proper way, and observe 'Upavaasam' and the next day on the 'Rohini' star day it is best to have a meal early in the morning. Those who are not able to do so may take fruits in the night. In this way the fast is observed for twelve years. Arichandran, Anthimaan, and Santhimaan did so and earned much merit and achieved much success in life says history. (Anthimaan and Santhimaan are the liberal donors of the middle ages)

Somavaaram

Among the fasts observed for God Shiva Somavaara Viratham is the very best. Monday is the day for the moon. Hence Monday is known as Somavaaram as soon as the 'Kirutha yugam' was born the moon got the chance of being placed in God Shiva's crown. This also happened on Somavaaram. That is why the Mondays of the Thamil month of Kaarthikai are important. On Mondays, fast throughout the day and pray to God and have a meal in the night.

Maarkazhi (December)

Thiruvempaavai

The month of December is the best among all months. Sri Krishna said this in Geethopathesam. Besides for the devas it is early morning. Hence thinking of God Shiva devotees sing Thirupalli Eluchchi and Thiruvempaavai, which is most suitable for December. During the Thamil month of Maarkazhi (December), the nine days before the star galaxy Thiruvaathirai, are festival days of Thiruvempaavai. On Thiruvaathirai, this ends. Thiruvempaavai is dedicated to God Shiva only. Besides the festivals in Maarkazhi denote God's functions of bestowing grace and therefore it is best of all festivals. The abishekam for Lord Nadarajah and the Aaruthra tharsan are essential for redeeming the souls.

Thiruvaathirai Viratham (fast)

The day in December when the Thiruvaathirai star galaxy is overhead, devotees fast. This is much liked by God Shiva because of this God Shiva is referred to as head of Aarthirai or Aathiraiyan. In Maarkazhi on Thiruvaathirai day special treatment of God Shiva is done. Among this, the one done at Chithamparam is the best. To fast at Chithamparam is great. Many devotees go there for the Aaruthra tharsan. It is most important to fast on this day. A book in Sanskrit called 'Sankara sangithai' gives the glory of this fast. The book is translated by Koneriappa Mudaliyar, student of Kachchiyappa Sivachchariyar.

Thai (January)

Thaippoosam

Along with the full moon in the Thamil month of Thai comes the star galaxy called Poosam. It is the best day for worship of God Muruga. On this day many carry milk pots on their heads called 'paat kaavadi'.

Thai Amavaasai (New moon)

It is on this day saint 'Abirami pattar' prays and pleads with Goddess Ambikai to make it a full moon day. By the grace of Goddess Ambikai a full moon was seen. Devotees sing 'Abirami Anthaathi' on this day.

Maasi (February)

Maha Sivarathri

Generally rathri means dark night. But the real dark time was when God Almighty made the whole world shrink. This is called 'Sarva sankaara kaalam' or 'Pralaya kaalam' (deluge) or 'Ulimudivu' end of the world, are some of the terms said about this. As at night everything is silent and still and so do the five elements,thanu(the body) karanam, puvana, pokankal remain still and inactive. At that time there would be peace. At this dark hour only Shiva stays alone. What is seen daily is night for all beings. This state of the world is for Shiva only. That is why it is called Shivaraathri. Then again for the world to regain its original position, God Shiva appears in the form of a pillar of lght and produces Shakthi as Ilalitha thevi and she worships Shiva as 'Lingotpavar' and creates Brahma to start the function of creation. This is denoted by the night of the Thamil month of Maasi in the 'Sathurthasi thithi' and the Linga poojah throughout the night. For those who are devoted to God Shiva this is the best fast.

The method of observing the fast

Sivarathri Viratham should be observed by Saivites. In the Thamil month of Maasi (February) on the 'thithi' called Sathurthasi of waning moon fasting for God Shiva is called Shivaraathri Viratham.

While going without food (Upavaasam) the whole night one must remain awake and worship God Shiva. It is best to do the Poojah four times of the nights called 'naangu saamam' (6 p.m. to 9 p.m to 12 p.m and finally at 3 a.m.) At least at one of these times one must perform poojah which is average. During the first Saamam (6 p.m.) with milk the second Saamam with curd during the third Saamam with ghee and during the last Saamam with honey abishekam is done for God Shiva. At all the times pooja is performed with Vilvam leaves. It will give great benefits for the devotees. At this time the poojah must be done for God Vinayagar and Sandesvarar. Those who cannot do Shiva poojah could have a tharshan of the temple during the four Saamams and recite Shivapuranam and chant Panchchadchara prayer, and spend the night listening to these holy songs. Those who cannot fast the whole day may take in water or milk. Those who cannot keep up the whole night may keep awake till 2 a.m. which is called Lingotpava time. This will give great benefit. This time is about the will of God. Those who observe fast the whole day, must get up the next day and cook and eat along with Shiva devotees. They should not sleep during the day. The effect of this fast is to be absolved from all sins and for the world to do well.

The kinds of Shivaraathri

1. Maha Shivaraathri
2. Yoga Shivaraathiri
3. Nithiya Shivaraathiri
4. Maatha Sivaraathiri
5. Padcha Sivaraathiri

The rules of observing Shivaraathri Viratham and the poojah during the four Saamams. Then one saamam is a period of three overs.

Saamam	Flower	Leaf	Fruit	Incense	Vethas to be related
First	Lotus & Olcander	Vilvam	Vilvam	Benzoin	Irukku Vetham
Second	Magnolia & Lotus	Basil & Vilvam	Jak	Sandalwood	Yasur Vetham
Third	Water Lilly, Aththi & Pichchai	Mul Kiluvai, Vilvam & Aruku	Pomegranate	a gum resin called Kunkuliyam	Saama Vetham
Fourth	Nanthiyavartham	Wood apple leaf	all types	camphor	Atharva Vetham

Pirathosa Viratham

During the waxing moon and waning moon the thirteenth 'thithi' is called prathosa kaalam. This occurs on the 'Thirayothasi thithi' about one and a half hours before sunset and later one and a half hours (4.30 p.m. – 6 p.m.) is the prathosa kaalam. At this time too the fast is observed meditating on God Shiva. This fast can be started during the Pirathosam on a Saturday in any of the months of October, November, April and May. And avoiding the meal during the day bathe before the said hour perform the Shiva poojah and have a tharsan of the Shiva Temple. And after the Prathosa time is over have a meal with Shiva devotees. During the Prathosa time go round the Shiva Temples and worship Nandi and Sandesvarar. All the holy waters in the world reach Nandi thevar during Prathosa time say the Puranaas. At this time having a tharsan of Shiva through the space between the horns of Nandi is excellent say the books on religion. Offering of Kaaparisi is said to be excellent and this can be taken as the food for the Viratham too.

God takes the form of holy waters (theertham) and redeems the souls and bestows grace upon them. Such holy waters at Prathosa time with the help of Nandi theva will reach Nandi theva and through him devotees have a tharsan of God Shiva. They bathe in those holy waters. In doing so their sins are washed away and they become cleansed. What is done in many places in various times and receive the benefits of bathing in the sacred waters can be achieved in one place and at one time and for all devotees to mentally perform act of bathing in the sacred waters, by the help of Nandi theva is a proof of God's great mercy. If such a fast is observed according to the said rules it will enhance their life. The act of going round the temple during Prathosa time is called Somasoothra Prathadchanam. During Prathosa time part taking of meals, sleeping, smearing oil, bathing and reading books should be avoided. The effect of this Prathosa Viratha tharsan will help to remove debts, poverty, illness, fear and sins.

The method of doing Somasoothra Prathad chanam

During the Prathosa time from 4.30 p.m. to 6 p.m. the way to go round the temple and praying method is called Somasoothra Prathadchana Murai. At first worship God Shiva and Nandi and turn left and worship Sandesvarar and come round and worship God Shiva and Nandi and then again Sandesvarar and come back and worship God Shiva and Nandi. This should be done three times. This is the method of doing Somasoothra Prathadchanam.

Maasi Maham

The Thamil month of Maasi (February) on the star galaxy of Maham is a day when there is an abishekam for lord Nadarajah. This abishekam is one of the six abishekams done for God Shiva. Hence it is a great day for the tharshan of God Shiva. It was on this day that Goddess Ambihai took an, Avathaar on a lotus, as Thadchayani.

Pankuni (March)
Pankuni Utharam
(Kalyana sunthara viratham)

Umaiyal, the universal mother, took an Avathaar as the daughter of Malai Arasan and married God Shiva on this day. This day is special to have a festival and to have a tharsan.

During this fast take fruit and payasam in the night. Those who cannot do so could have a meal during the day.

Pankuni Thinkal
(the Monday in the Thamil month of Pankuni – March).

This day is special for the worship of Goddess Ambiha.

(This is a chapter from the Compendium for Hindus published by All Ceylon Hindu Congress)

ஒரு பார்வை

இந்து ஒளி (தீபம் 19 - சுடர் 08)

மாத்தளை குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

சைவவித்தகர் வெற்றிவேல் சசிகரன்
வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத் திருநாட்டிலே இந்துக்களினை அறவழியில் இணைத்துச் செல்லும் நிறுவனமாக அகில இலங்கை இந்து மாமன்றம் திகழ்கின்றது. இதன் அறப்பணிகளில் ஓர் அங்கமாக இந்து ஒளி சஞ்சிகையும் காலந்தவறாமல் காலத்திற்கு ஏற்ற வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதற்கமைய 19ஆவது தீபத்தின் 08ஆவது சுடர் அருள்மிகு மாத்தளை குமரமலை குமரப்பெருமான் மகாகும்பாபிஷேக சிறப்பிதழாக வெளிவந்திருந்தது.

இதன் அட்டையின் முகப்பினை எழில்மிகு குமரமலை முருகப் பெருமானின் அருட்பார்வை அலங்கரிக்க உட்புறத்தில் மாமன்றத்தின் சமய, சமூக சேவைகளின் அடையாள நிழற்படங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக உள்ளே பஞ்ச புராணத்துடன் இணைந்த முகவுரையானது "மதுபாவனை நிறுத்தப்படுவது அவசியம்" எனும் தொனிப்பொருளில் வெளிவந்திருந்தது.

அதனையடுத்து ஆன்மீகச் சுடரின் அருள்மடல் பிரசுரமாகியிருந்தது. இதில் "தனித்துவமான மாத்தளை நகர்" எனும் தலைப்பில் மாத்தளை நகரின் சிறப்பினையும், தற்கால நிலையினையும் எடுத்துரைத்திருந்தார். அதனையடுத்து மாமன்றத் தலைமையகத்திலிருந்தான எதிர்காலத்திட்டங்கள் தொடர்பிலான செய்தி குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்து "மாத்தளை சிந்தாக்கட்டி குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் ஆலயம்" எனும் கட்டுரை வாயிலாக இவ் ஆலயத்தின் இயற்கையான அமைவிடச் சிறப்பு, வரலாற்றுப் பெருமை, பூசைமுறைகள், அவற்றுடன் இணைந்ததாக ஆலயத்தினால் சமூகத்திற்கு ஆற்றும் பணிகள் போன்றவற்றை சு. புண்ணியசீலன் அவர்கள் சிறப்பித்து எழுதியிருந்தார். அடுத்த கட்டுரையாக "குமரமலை திருக்குமரன் நமக்கு வளமான வாழ்வளிக்கத் தோன்றி விட்டார்" எனும் தலைப்பின் ஊடாக முருகப் பெருமானின் சிறப்புக்களையும், அற்புதங்களையும் திரு. த. மனோகரன் அவர்கள் குறிப்பிட்டு எழுதியிருந்தார். அடுத்து மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய நிர்வாக சபையினரின் வாழ்த்து மடல் இடம்பெற்றதுடன் அதன் தொடர்ச்சியாக அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வரலாற்றினை கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா அவர்கள் எழுதியிருந்தார்.

அதனை தொடர்ந்து "மாத்தளை மாவட்ட திருத்தலங்கள்" எனும் தலைப்பின் வாயிலாக மாத்தளை மாவட்டத்தின் வரலாற்றுக் கதைகளின் மூலம் திருத்தலங்களின் சிறப்பினை இலக்கியச் செம்மல் மாத்தளை பெ.வடிவேலன் அவர்கள் வரைந்திருந்தார். அதில் முருகப்பெருமானின் சிறப்புக்களும், திருப்புகழின் விளக்கவுரைகளும் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

அடுத்து தெய்வத் திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் "ஆறுமுகப் பெருமான்" எனும் தலைப்பின் வாயிலாக முருகப்பெருமானின் ஆறுமுகங்களின் விளக்கங்களை பல்வேறுபட்ட விதங்களில் ஆய்வு செய்து எழுதப்பட்டிருந்தது. அடுத்த கட்டுரையாக "ஆறுமுகம் - அழகானவன் முருகனுக்கு அழகு முகம் ஆறு" என திருமதி ஹேமா சண்முக சர்மா அவர்களினால் எழுதப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக "கந்தபுராணம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள்", "முருகவழிபாடு" எனும் குறிப்புக்களின் வாயிலாக முருகப்பெருமானின் திருவவதாரப் பெருமைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

"சஷ்டியில் மா அறுத்த சங்கரன் பிள்ளை" எனும் தலைப்பின் ஊடாக கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களால் கந்தசஷ்டி விரதத்தின் விளக்க உண்மைகள் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. அத்துடன் ஓர் ஆய்வுடன் கூடியதாக "ஈழத்திற் கந்தபுராண கலாசாரம்" எனும் கட்டுரையினை கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தொகுத்து எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து "முருக வழிபாட்டுத் தோற்றமும் சிறப்புக்களும்" திரு. கி. புண்ணியமூர்த்தி அவர்களின் கட்டுரையின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அடுத்ததாக "கார்த்திகை விளக்கீடும் வழிபாடும்" எனும் தலைப்பின் வாயிலாக கலாநிதி பாலகைலாசநாதசர்மா அவர்களால் திருக்கார்த்திகை விரதம் பற்றிய விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டிருந்தது.

இவற்றினை அலங்கரிக்கும் பொருட்டு இடையிடையே முருகப் பெருமானின் வழிபாட்டுச் சிறப்புகளும், இந்து சமய விழாக்களும், விரதங்களுக்குமான நாட்காட்டியும் அமையப் பெற்றிருந்தன. அதன் தொடர்ச்சியாக "உள்ளத்தை ஒளிப்படுத்தும் திருநாள் தீபாவளி" எனும் தலைப்பில் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் அவர்களின் கட்டுரை அமையப் பெற்றிருந்தது.

அதனையடுத்து விபுலானந்தர் பக்கத்தை அமரர் இரா. மயில்வாகனம் அவர்கள் கவிதையின் வாயிலாக விபுலானந்தரின் அவதாரம், வித்தையிற் சிறந்த விபுலானந்தர் சாதித்த சால்புகள் போன்ற உபதலைப்புக்கள் மூலமாக குறிப்பிட்டு அலங்கரித்திருந்தார். அதனையடுத்து யோகர் சுவாமிகள் பக்கத்தின் ஊடாக சுவாமிகளின் வாழ்வியல் கருத்துச்சிறப்புக்கள் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக "மலேசியா பத்துமலை பகுதியில் உள்ள முருகன் கோவிலின் விடயங்களும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக நாவலர் பக்கத்தினை களம் சேர்க்கும் பொருட்டு "நாவலர் ஓர் சீர்திருத்தவாதி" எனும் தலைப்பின் ஊடாக இலக்கிய கலாநிதி. க. சிவராமலிங்கம்பிள்ளை அவர்களின் ஆக்கம் அமைந்திருந்தது. அத்துடன் "Marriage Rites" எனும் தலைப்பில் ஆங்கிலத்திலான கட்டுரையானது திருமணம் தொடர்பிலான பல விளக்கங்களை தெளிவுபடுத்துவதாக அமைந்திருந்தது. அத்துடன் இந்துஒளி **(தீபம் 19 சுடர் 07)** இன் நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழின் ஒரு பார்வையை சைவவித்தகர் யோ.கஜேந்திரா அவர்களால் நோக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து அடுத்த கட்டுரையான "சைவ சாதனங்களில் ஒன்றாக முக்கியத்துவம் பெறும் திருநீறு" எனும் தலைப்பில் இரா.ஜீவன் பிரசான் அவர்களால் விபூதியின் மேன்மையை உணர்த்தும் வகையில் எழுதப்பட்ட கட்டுரை அமைந்திருந்தது.

இவற்றினை மேலும் சிறப்புச் சேர்க்கும் பொருட்டு கந்தபுராணம் சொல்லும் முருக அவதாரம், முருகன் புகழ்பாடும் நூல்கள், முருக வழிபாட்டின் தத்துவ சிந்தனைகள், முருகனின் படை வீடுகள், தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய திருப்பணிகள் போன்றவையும் காணப்பட்டிருந்தன.

அத்துடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுதாபம் அமையப் பெற்றிருந்தது. இவ் அனுதாபத்தின் வாயிலாக அமரர் சிவசோதி வல்லிபுரம் அவர்களின் வாழும் காலத்தில் மேற்கொண்ட பணிகளைக் சுருக்கமாகக்கூறி மாமன்றத்தின் அனுதாபமும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவற்றுடன் இணைந்ததாக மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாட்டு நிழற்படங்களும் இந்து ஒளியின் பின்புற அட்டையினை அலங்கரித்திருந்தன.

இவ்வாறு பல்வேறு ஆன்மீக விடயங்களை உள்ளடக்கி சமூகத்தில் சிறந்ததோர் அறிவார்ந்த தலைமுறையை உருவாக்கும் நோக்குடன் செயற்படும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சஞ்சிகைக் குழுவினர் இன்னும் பல காலத்திற்குப் பொருத்தமான ஆன்மீகம், அறநெறி சார்ந்த விடயங்களைக் கொண்டு இச் சஞ்சிகையை மெருகூட்டி என்றும் நிலைபெறச் செய்து இவ் வையகத்தை வளப்படுத்த எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

மாமன்றச் செய்திகள்

யாழ் அங்காடி மூலம் கிடைத்த நன்கொடை

யாழ். வலிகாமம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு நிவாரண உதவிகள்

அறுபதாவது ஆண்டு நிறைவுகாணும் அகில இலங்கை இந்து மாமன்றமும், ஐம்பதாவது ஆண்டு நிறைவு காணும் கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் கடந்த அக்டோபர் 31 ஆம் திகதியன்று, கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் யாழ் அங்காடி ஒன்றை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது. வீரகேசரி, மெட்ரோ நியூஸ் பத்திரிகைகள் இதற்கு ஊடாக அனுசரணை வழங்கியிருந்தன.

இந்நிகழ்வின்போது உலக வங்கியின் ஓய்வு நிலை ஆலோசகரும், யாழ் மண் தந்த புகழ்பெற்ற பொருளாதார நிபுணருமான திருமதி ஜீவாபிள்ளை எஸ்ஸெக்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்து உணவு வகைகள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் புடைவை, ஆடை வகைகள் என்பன யாழ் அங்காடியில் காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட்டன. அங்காடி நிகழ்வில் கிடைக்கப் பெற்ற ரூபா ஏழு இலட்சத்துக்கும் அதிகமான நிதியிலிருந்து யாழ் வலிகாமம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப் பட்டன.

கடந்த நவம்பர் 5 ஆம் திகதியன்று மாமன்ற உப தலைவரும் யாழ். இந்து ஆராய்ச்சி நிலையகௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களினால் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக இடம் பெயர்ந்தோர் சங்கத் தலைவர் திரு. ஏ. குணபாலசிங்கம், செயலாளர் திரு. எம். நாகேந்திரசீலன் ஆகியோர் முன்னிலையில் உலர் உணவுப்பொருட்கள் வழங்கும்நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் இங்கு தங்கியிருப்பவர்களுக்கு இந்து மாமன்றத்தின் அறுபது ஆண்டு நிறைவையொட்டி 60 வேட்டிகளும், கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் ஐம்பது ஆண்டு நிறைவையொட்டி 50 சேலைகளும் மற்றும் இங்குள்ள சிறுபிள்ளைகள், இளைஞர்களுக்கு தீபாவளியை முன்னிட்டு புதிய உடுப்புக்களும் வழங்கப்பட்டன.

மாமன்றத்தின் சமூகப் பணிகள்

மருத்துவ உதவி

பின்வருவோரின் கஷ்டநிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட மருத்துவ சேவைக்கான நிதியுதவியை மாமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது

திரு.பி. மனோகரன் என்பவரது சிறுநீர் பிரச்சனைக்கான உபகரணம் கொள்வனவிற்காக நான்கு தடவைகளில் ரூ. 8,500.00 வழங்கப்பட்டது. ஏற்கனவே 2014 ஆம் ஆண்டிலும் இவருக்கு ரூபா. 10,000 வழங்கப்பட்டிருக்கிறது. பொலன்னறுவையைச் சேர்ந்த மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரான திரு. ரமேஷ் என்பவரின் இருதய அறுவைச்சிகிச்சைக்காக 50,000 ரூபாவும், திருமதி. எஸ். சுகன்யா என்பவரின் சத்திரசிகிச்சைக்கான முழுச்செலவில் 50% மாகிய 65,000 ரூபாவும், அக்கரைப்பற்றைச் சேர்ந்த செல்வி. பாக்கியராஜா லசோதா என்பவருக்கு இரத்தமாற்றுச் சிகிச்சைக்காக 50,000 ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

அன்பளிப்புக்கள்

காலிமாவட்டத்திலுள்ள நாக்கியாதெனிய சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்திற்கென கருங்கல்லிலான பிள்ளையார் சிலை ரூ. 32,000.00க்கு மாமன்றத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

பொலனறுவை அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு என ரூபா 22,000/= க்கு மாமன்றத்தினால் தாளவாத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

நிதியுதவிகள்

மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான ஆலயடி வேம்பு இந்து மாமன்றத்தின் கட்டட முதலாம் மாடியை நிர்மாணிப்பதற்காக ரூபா 14 இலட்சம் நிதியுதவி வழங்கும்படி மன்றம் விடுத்த வேண்டுகோளை, மாமன்ற முகாமைப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்படி முதற்கட்டமாக ரூ. 500,000/- வழங்கப்பட்டுள்ளது. அதன் முன்னேற்ற அறிக்கையைப் பரிசீலித்த பின் இரண்டாம் கட்டமாக ரூ 500,000/- உம், இதன்பின் மூன்றாம் கட்டமாக மிகுதிப்பணமும் வழங்கலாமெனவும் மாமன்ற முகாமைப் பேரவை தீர்மானித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற தலைமன்னார் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வுக்காக மாமன்றம் 100, 000 ரூபாவையும், மாத்தளை சிந்தாகட்டி குமரமலை முருகப் பெருமான் ஆலயத்திற்கு கண்டாமணி பெற்றுக் கொள்வதற்கு 400,000 ரூபாவையும், அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் இந்து சமய எழுச்சி விழாவுக்காக 50,000 ரூபாவையும் மாமன்றம் நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

அகில இலங்கை இந்து மாமன்ற அனுசரணையுடன் நடைபெற்ற நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் எழுச்சி விழா – 24.10.2015

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் உரை

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் உரை

நாவலப்பிட்டி இந்து மன்றத் தலைவர் திரு. எம். இராஜேந்திரன் உரை

இந்து மாமன்றத்தின் அன்பளிப்பாக மாணவர்களுக்குப் பாடசாலைப் பைகள் மாமன்றத் தலைவரால் வழங்கப்படுகிறது

நிகழ்விற்கு வருகைதந்த பார்வையாளர்களுள் ஒரு பகுதியினர்

வலிகாமம் பகுதி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகள்

அகில இலங்கை இந்துமாமன்றமும், கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து 2015.10.31 ஆம் திகதியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய யாழ் அங்காடி நிகழ்வில் கிடைத்த நிதியுதவியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உலர் உணவுப்பொருட்களை வலிகாமம் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு மாமன்றத்தின் சார்பாக மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் வழங்குவதையும், வலிகாமம் இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் திரு. ஏ. குணபாலசிங்கம், செயலாளர் திரு. எம். நாகேந்திரசீலன் மற்றும் உணவுப் பொருட்களை பெற்றுக் கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

உ

சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும்

சிவதொண்டர் மாநாடும் நாவலர் நினைவு ஆன்மீக ஏழுச்சிக் கருத்தரங்கும்

ஒழுங்கு அனுசரணை:
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை

ஆதரவு:
கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம்

காலம்:
மன்மத வருடம் கார்த்திகை மாதம் 19ம், 20ம் நாள்
(2015 டிசம்பர் 5ம், 6ம் திகதிகள்)

இடம்:
மட்டக்களப்பு நாவற்குடா சுவாமி விபுலானந்தர்
அழகியற் கற்கைகள் நிறுவன அரங்கு

முன்னிலை

வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார்,
இளையபட்டம் பேரூர் ஆதீனம், இந்தியா

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர், நல்லை ஆதீனம்)

வணக்கத்திற்குரிய சதுர் குஜானந்தஜி மகாராஜ் சுவாமிகள்
தலைவர், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன்

பிரதம விருந்தினர்கள்

மாண்புமிகு இரா.சம்பந்தன், (நாடாளுமன்ற உறுப்பினர்)
எதிர்கட்சித் தலைவர்

மாண்புமிகு தே.ம.சுவாமிநாதன், (நாடாளுமன்ற உறுப்பினர்)
புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்

1ம் நாள்

05-12-2015 சனிக்கிழமை

தலைமை

மாண்புமிகு சீ.யோகேஸ்வரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
(தலைவர், ம.மா.இ.இ.பே)

காலை 8 மணி

ஊர்வலம்

கல்லடி பேச்சியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்

மங்கள விளக்கேற்றல்

நந்திக் கொடி ஏற்றல்

இறை வழிபாடு

தலைமையுரை

மாண்புமிகு சீ.யோகேஸ்வரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
(தலைவர், ம.மா.இ.இ.பே)

ஆரம்ப உரை

திரு. கந்தையா நீலகண்டன்
(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

ஆசியுரைகள்

வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார்,
(இளையபட்டம் பேரூர் ஆதீனம், இந்தியா)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர், நல்லை ஆதீனம்)

வணக்கத்திற்குரிய சதுர் குஜானந்தஜி மகாராஜ் சுவாமிகள்,
(தலைவர், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன்)

பிரதம விருந்தினர் உரை

மாண்புமிகு இரா.சம்பந்தன், (நாடாளுமன்ற உறுப்பினர்)
(எதிர்கட்சித் தலைவர்)

நூல்கள் வெளியீடு

இந்து ஒளி (சிறப்பு மலர்)

சுவாமி விபுலானந்தர் – பன்முகப்பார்வை
தொகுப்பு
பேராசிரியர் செ. யோகராசா,
திரு. க. குமரன்

தென்கிழக்கிலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
ஆசிரியர்:
திரு. என். கே. எஸ். திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்

நூல் அறிமுகம்

கிழக்கிலங்கையின் சடங்குகள்
ஆசிரியர்:
கலாநிதி வடிவேல் இன்பமோகன்

நன்றியுரை

திரு. சா. மதிசுதன்
செயலாளர், ம.மா.இ.இ.பே

மதியம் 12.45 முதல் 1.45 மணிவரை

போசன இடைவேளை

1ம் நாள் - 05-12-2015 சனிக்கிழமை
பி.ப 1.45 மணி முதல் மாலை 8.00 மணி வரை

சிறப்புக் கருத்தரங்கு – 1

தலைமை

பேராசிரியர் கலாநிதி பெ. வினோபாவா
வீலங்கியல்துறைப் பேராசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகம்

1. *நாவலரும் அறிவின் அரசியலும்*
திரு. எஸ். முகுந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

2. *நாவலரும் விபுலானந்தரும்*
திருமதி சாந்தி கேசவன்
இந்து நாகரிகத் துறைத் தலைவர், கிழக்குப் பல்கலைக்கழகம்

3. *நாவலரும் புராணப்படலமும்*
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதம், கிழக்குப் பல்கலைக்கழகம்

மாலை 03.00 முதல் 3.30 மணிவரை

தேநீர் இடைவேளை

சிறப்புக் கருத்தரங்கு – 2

மாலை 3.30 மணி முதல் 5 மணி வரை

தலைமை

கலாநிதி மு. கதிர்காமநாதன்
பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

1. *நாவலரும் காலணித்துவ சூழலும்*
பேராசிரியர் கலாநிதி செ. யோகராசா
தமிழ்த்துறைப் பேராசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகம்

2. *நாவலரும் கந்தபுராண கலாச்சாரமும்*
பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
தமிழ்ப் பேராசிரியர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்

3. *நாவலரும் வள்ளுவரும்*
தமிழருவி த. சிவகுமாரன்
ஸ்தாபகர் - வவுனியா தமிழ்ச் சங்கம்

மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை

வில்லிசை நிகழ்வு

கல்முனை சிவநெறி அறப்பணி மன்றம்
வழங்கும்

"நல்லை நகர் நாயகன்"

மாலை 5.30 மணி முதல் 5.50 மணி வரை

வந்தாறுமூலை அம்மன் அறநெறி பாடசாலை
மாணவர்கள் வழங்கும்

"சிலம்பு" (குறுநாடகம்)

2ம் நாள்

06-12-2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
முதல் பகல் 12.00 மணி வரை

மங்கள விளக்கேற்றல்:

இறை வழிபாடு

சிவதொண்டர் மாநாடு

பிரதம விருந்தினர்

மாண்புமிகு தே.மு. சுவாமிநாதன், (நாடாளுமன்ற உறுப்பினர்)
புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்

தலைமை

திரு. கந்தையா நீலகண்டன்
தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்.

ஆரம்ப உரை

விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா
(உப தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்)

சிறப்புரை

வணக்கத்திற்குரிய சீர்வளர்சீர் மருதாசல அடிகளார்
(இளையபட்டம் பேரூர் ஆதீனம், இந்தியா)

சுழல் கருத்தரங்கு

எமது சமய மறுமலர்ச்சியில்
சிவதொண்டர் அணி

அரங்குத் தலைவர்

திரு. கந்தையா நீலகண்டன்
(தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்)

அரங்கில் கருத்துப்பரிமாற்றம் செய்வோர்

1. தமிழருவி த. சிவகுமாரன்
2. பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
3. பேராசிரியர் கலாநிதி. செ. யோகராசா
4. திரு. ச.முகுந்தன்
5. திருமதி சாந்தி கேசவன்
6. சைவவித்தகர் வெ. சசிதரன்
7. சைவவித்தகர் யோ. கஜேந்திரா
8. கலாநிதி முருகேசு கதிர்காமநாதன்
9. திரு. ஜெயபிரகாசம் நிரோஷ்காந்த்

மதியம் 12.00 மணி முதல் 12.30 மணி வரை
பொலனறுவை காமதேனு இந்து சமய வளர்ச்சி மன்ற
சிவதொண்டர் அணி வழங்கும் கலைநிகழ்ச்சிகள்:-
கவியரங்கு
நடன நிகழ்ச்சி

நிறைவுரை

அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02, தொலைபேசி : 2434990
யாழ் பணிமனை: 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

List of people Converted to Hinduism from other religions

I always says that, why Hinduism is a great religions. Some famous people, who converted to Hinduism.

From Christianity

- Chantal Boulanger - French anthropologist who wrote wide in Tamil culture.
- Claudia Ciesla - German model, actress and singer embraced Hinduism and believes in Karma
- Job Charnock - British trade agent who has been controversially described as the founder of Calcutta.
- Ilan Chester - Venecuelan singer, keyboardist, arranger and composer.
- Alice Coltrane - Illuminations(raised Baptist but became a follower of Satrya Sai Baba) - American jazz pianist, organist, harpist and composer.
- Michael Cremo - American creationist, author and editor
- Bhagavan Dast - (Born Kermit Michael Riggs) - Western Yogi and former born again Christian
- Roy Eugene Davis - American Kriya Yoga teacher
- Krishna Dharma - British author and convert to Gaudiya Vaishnavism under ISKON
- David Frawley - author on Hinduism, Yoga and Ayurveda
- Elizabeth Gilbert - author of Eat Pray Love
- George Harrison - popular Musician, best known as a member of THE BEATLES who died chanting the Hare Krishna Mahamantra in the company of monks from ISKON. He is also known for donating Bhaktivedanta Manor, a Hindu temple to the Hare Krishna community in Britain.
- Lawrence Raghavendra - Tamil and Telugu choreographer, film actor, director, composer and Philanthropist.
- Christopher Isherwood - Anglo-American novelist
- Jomol - Malayali Actress
- Lizy - (born Aliyamma Malayalam of Elizabeth adopted the name Lakshmi) Malayalam Actress
- Swami Kriyananda - (born J. Donald Walters) direct disciple of the yogi Paramahansa Yogananda
- Timothy Leary - Harvard professor and American writer and psychologist
- Satsvarupa Dasa Goswami - one of the eleven senior American selected to become an initiating guru in ISKON
- Savitri Devi Mukherji - (born Maximiani Portas) French woman who became enamored with Hinduism and Nazism, trying to synthesise Hinduismwith Nazi philosophy and racial ideology.
- Sister Nivedita - (born Margaret Elizabeth Noble) Anglo Irish social worker, author and teacher
- Leelawathy Ramanathan - Australia born, Hindu writer and activist, Converted upon marrying Ponnambalam Ramanathan
- John Levy - British philosopher who translated books on Advaita Vedanta
- Annie - (Actress) and(born Annie Jobbie adopted the name Chitra) Malayalam Actress
- Joseph Ritson - English antiquarian and traveler
- Julia Roberts - American Actress
- Han Snel - Dutch painter of Bali
- Satyananda Stokes - Famous English farmer in Himachal Pradesh
- Bhakti Tirtha Swami - (Born John E. Favors) American Hindu leader and disciple of Bhaktivedanta Swami Prabhupada.
- Romapada Swami - Preacher of ISKON
- Kenneth R.. Valpey - Gaudiya Vaishnava Theology who studied at Oxford University, St. Cross College
- Shaunaka Rishi Das - (born Timothy Kiernan) Director of the Oxford Center for Hindu Studies
- Nayantara - (born Diana Mariam Kurian) South Indian Actress, model

From Islam

- Bukka I - king of Vijayanagara Empire who converted to Islam, then reconverted.
- Nargis - noted Bollywood actress, politician and social workers. Mother of actor Sanjay Dutt. She converted to Hinduism and took the name of Nirmala Dutton on her marriage to actore Sunil Dutt
- Annapurna Devi - (born Roshanara Khan) surbahar player and music teacher in the North Indian classical tradition.
- Harilal Mohandas Gandhi - son of Mahatma Gandhi. Upon converting to islam he adopted the name Abdullah Gandhi, but later again reverted back to Hinduism.
- Asha Gawlik - (Born Ayesha) wife of Arundel Gawlik, notorious gangster turned politician from Mumbai.
- Harihara I - King of Vijayanagara Empire who converted to Islam, then reconverted.
- Aashish Khan - (born Ustad Aashish Khan Debsharma) Indian musician
- Hassan Palakkode - Malyali writer on Islam
- Netaji Palkar - Maratha noble and commander-in-chief of the army of Shivaji, 19 June 1676
- Sarmad - 17th century mystical poet and sufi saint, arrived from Persia to India, beheaded from assumed heresy by the Mughal emperor, Aurungzebe's. Sarmad renounced judaism, briefly converting to Islam and then Hinduism. He later denounced all religion and rejected belief in God.
- Anwar Shaikh - British Author
- Ifa Sudewi - Chief Judge for the 2002 bombing trails.
- Khusbhoo Sundar - Tamil movie actress. She converted to Hinduism upon Marriage.
- Haridas Thakura - Prominent Vaishnavite saint, instrumental in the early appearance and spread of Hare Krishana Movement.
- Zubeida - Hindi film actress, on whose life story the film

Zubediaa was based. She converted to Hinduism upon marriage.
- Nalini Patel - Page(Born Nayyara Mirza) Miss India Finalist of 1967, was the first Muslim to participate in the pageant. She converted to Hinduism after marriage. She is settled in teh USA.
- Sonam - (Born Bakhtawar Murad) wife of Bollywood directore Rajiv Rai. She converted to Hinduism upon marriage.
- Fatima Ghadially - Wife of ajith agarkar

From Judaism
- Ram Dass - (Born Richard Alpert) syncretist, and followers of the Hindu deity Hanuman, Professor of phychology at Harvard University
- Tamal Krishna Goswami - (born Thomas G. Herzig) governing body commissioner of the International Society for Krishna Consciousness.

From Buddhism
- Mihirakula - Huna ruler
- Rajasinghe II - Sri Lankan king who conquered Kandy
- Rishabhadata - Satrap viceroy
- Rudradaman I - Starap ruler and conqueror of the Satavahanas
- Vasudeva I - Kushan King and numismatist

From Jainism
- Mahendravarma I - Pallava King and patron of the arts
- Visnuvardhana - King of Hoysala empire and prominent temple builder
- Tirunavakkarsar - Saivite saint and one of the most prominent of the sixty three Nayanars

Others
- Charairongba - Manupuri ruler
- Heliodorus - Greek minister of King Bhagabhadra
- Pamheiba - Manipuri King
- Suhungmung - Ahom Kingdom ruler who extended Assam up to the Kamarupa Kingdom
- Annie Besent - (former atheist) Theosophist, orator and feminist
- John dobson - (former athiest who become a believer in Vedanata) astronomer and Telescope designer
- Sita Ram Goel - (former atheist) Indian Commentator, writer and Hindu activist
- Agehananda Bharti - (born Leopold Fischer) academic Sanskrit, a prolific author about religious subjects and a Hindu monk in the Dasanami Sannyasi order
- Alain Danielou - (Converted to Shaivism) French historian, intellectual, musicologist and Indologist
- Ambarish Das - Page(born Alffred Ford) American Businessman, great grandson of Henry Ford, and follower of Bhaktivedanta Swami Prabhupada (the foundre of ISKON)
- Urmila Devi Dasi - (born Edith E. Best) female ISKON educator
- Geoffrey Guiliano - American Biographer
- Nina Hagen - Follower of Haidakhan babaji, German Singer
- Aldous Huxley - disciple of Swami Prabhavananda, English writer who emigrated to the United States, author of Brave New World
- Joe Don Looney - Follower of Swami Muktananda, Football Player
- J. Mascis - lead Vocalist, guitarist and drummer for Dinosaur Jr.
- John McLaughlin - become a disciple of Sri Chinmoy, Jazz fusion guitar player
- Lex Hixon - Suncretist and disciple of Swami Nikhilananda, poet, Philosopher, spritiual practitioner and teacher
- Mathias Rusty - German Daredevil Pilot
- J. D. Salinger - American author best known for The Batcher in the Rye
- Kelli Williams - American Actress who played Lindsay Dole Donnel on the ABC legal Drama the Practice.
- Ricky Williams - Miami Dolphins football player
- Crispian Mills - English rock singer named Krishna Kantha Dasa. He wrote a forward to book by Bhaktivinoda Thakur titled Sri Siksastaka.
- Jeffrey Armstrong - Canadian Author, Speaker, Poet.

Source: Global Hinduism
www.globalhinduism.blogspot.com

சங்கடஹர சதுர்த்தி

ஒவ்வொரு மாதத்திலும் பூரணை திதிக்கு பின்னர் வரும் (தேய்பிறை) சதுர்த்தியை சங்கடஹர சதுர்த்தி என்று அழைக்கப்படுகிறது. வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்கள் நீங்கவும் கடன் தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெறவும் துன்பங்கள் குறையவும் இந்தப் புனித தினத்தில் விநாயகரைப் பூஜிக்கின்றனர். சங்கடங்கள் அனைத்தையும் நீக்கி சௌபாக்கியம் கொடுக்கவல்லது சங்கடஹர சதுர்த்தி விரதம். அன்றைய தினம் சூரிய அஸ்தமனத்தின் பின் சந்திரன் உதயமான பிறகு விநாயகரைப் பூஜித்து இரவில் உபவாசமிருப்பது வழக்கம்.

இந்த விரதத்தை முதன் முதலாக மாசி மாதத்து தேய்பிறை சதுர்த்தியன்று தொடங்குவது விசேட பலனைத் தரவல்லதாகச் சொல்லப்படுகிறது. மாசி மாதத்து தேய்பிறைச் சதுர்த்தி மிகமிக உயர்வானது. அந்நாள் செவ்வாய்க்கிழமையாக அமைவது மிகவும் விசேடமானது. அது மஹா சங்கடஹர சதுர்த்தி எனவும் அழைக்கப்படுகிறது. அந்த நாளில் காலையிலிருந்தே உபவாசமிருந்து விநாயகரைத் தியானிக்க வேண்டும். இரவு பூஜை முடிந்த பின் படைக்கப்பட்ட நிவேதனத்தை மட்டும் உண்டு தனிமையில் உறங்கவேண்டும்.

முதன்முதலில் விநாயகரே தன் தாயாரான பார்வதி தேவிக்கு சங்கடஹர விரத மகிமையை சொல்லி அருளினார். பார்வதிதேவி ஓராண்டு காலம் இவ்விரதத்தை மேற்கொண்டு தன் பதியை அடைந்ததாக புராண வரலாறு சொல்கிறது. சிவன், இந்திரன், இராவணன் போன்றோர் இந்த விரதத்தினால் நற்பயன் அடைந்திருக்கின்றனர். அனுமன் சீதையைக் கண்டது, தமயந்தி நளனை அடைந்தது, அகலிகை கௌதமரை அடைந்தது போன்றவை நிகழ்ந்ததும் இவ்விரதத்தின் மகிமையால்தான் என்றும் சொல்லப்படுகிறது.

மாமன்றம் விடுத்திருந்த தீபாவளிச் செய்தி

இந்த நாட்டிலுள்ள பதினான்கு சிறைச்சாலைகளில் 217 தமிழ் அரசியற் கைதிகள் பல ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டுள்ளமை நீதிக்கும் நியாயத்திற்கும் முரணாகத் தொடர்வதை அந்தக் கைதிகளின் உறவினர்கள் பலர் மீண்டும் மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

தீபாவளிக்கு முன் இவர்கள் விடுதலை செய்யப் படவேண்டும் என ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் மாமன்றம் வேண்டுகோள் விடுத்திருந்தது. உண்ணாவிரதம் இருந்த கைதிகளுக்கு அவர்களின் பிரச்சனைக்கு 07.11.2015க்கு முன் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி தந்த உறுதி மொழியைத் தொடர்ந்து அந்த உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது.

எனினும் தற்போது 09.11.2015 அன்று 32 கைதிகள் மட்டும் பிணையில் விடுவிக்கப்படுவார்களென அரசு அறிவித்துள்ளமை கைதிகளிடையே இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனவே கைதிகள் யாவரும் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டு தீபாவளிக்கு முன் தங்கள் குடும்பங்களுடன் இணைய வழிவகுக்க வேண்டும. இல்லாவிடின் அக்கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க இருப்பதாக அறிகிறோம். இதனை இந்நாட்டு இந்து மக்களின் சார்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சகல அரசியற் தலைவர்களுக்கும் பகிரங்கமாக தெரிவிக்கின்றோம்.

இதை மனிதாபிமான முறையில் நல்லாட்சியின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் தாமதமின்றி செயல்படுத்த வேண்டும். இந்த அரசியற் கைதிகளுக்கு உடன் விமோசனம் கிட்ட அரசு உறுதிமொழி வழங்க வேண்டும் எனவும் விநயமாக மாமன்றம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இந்த கைதிகளுக்கு கொடுக்கப்பட்ட உறுதி மொழி மீறப்பட்டு அவர்கள் உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பித்தால் இந்த நாட்டு இந்து மக்களும் அவர்களுக்கு ஆதரவு தர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அத்துடன் 10.11.2015 அன்று இந்த நாட்டு இந்து மக்கள் தீபாவளியைக் கொண்டாடும் நிலையில் இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவிப்பதுடன் எமது சகோதர சகோதரிகள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்க விட்டுவிட்டு அரசாங்கமோ, அரசாங்கத்தைச் சேர்ந்த எவருமோ தீபாவளியை கொண்டாட எந்த நடவடிக்கையும் எடுப்பதையிட்டு இந்நாட்டு இந்து மக்கள் எந்தவித திருப்தியும் அடையமாட்டார்கள். மாறாக இன்னும் வேதனையடைவர் என்பதையும் அரசு எந்தவித கொண்டாட்டமோ களியாட்ட நிகழ்வோ ஏற்பாடு செய்தால் சுய கௌரவமுடைய எந்த இந்து மகனும் அதில் கலந்து கொள்ளமாட்டான் என்பதையும் இந்துமக்கள் சார்பில் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

வேதனையாலும் சோதனைகளாலும் வாடும் எமது மக்களுக்கு விமோசனம் வேண்டி தீபாவளித் தினத்தன்று வழிபாடுகளிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுமாறும் அன்றைய தினம் எவ்வித கொண்டாட்டங்களிலோ கேளிக்கைகளிலோ ஈடுபடவேண்டாமெனவும் சகல இந்து மக்களையும் வேண்டி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கும்படி மாமன்றம் கோரிக்கை

மலையக தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்தச் சம்பளத்தை 1000.00 ரூபாவாகக் கூட்டி வழங்கும்படி காலத்திற்குக்காலம் வேண்டுகோள் விடுத்தும் கம்பனிகளோ அரசாங்கமோ அதனைப் பரிசீலனை செய்வதாகத் தெரியவில்லை. அரசியல் தலைவர்களும் உறுதிமொழிகளை வழங்குகின்றார்களே தவிர நடைமுறையில் எவையும் சாத்தியமாகவில்லை. தொழிலாளர்களது பணிப் பகிஷ்கரிப்போ உண்ணாவிரதப் போராட்டங்களோ எவையும் கருத்தில் கொள்ளப்படவில்லை.

இவர்களில் பெரும்பான்மையோர் இந்துமதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால் இது தொடர்பாக மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர். புதிய அரசாவது அவர்களின் கஸ்ட நிலையை உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குமென எதிர் பார்த்தனர். எனினும் இதுவரை அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை

இம்மக்களின் நியாயமான கோரிக்கையை சகலரும் ஆதரிக்க வேண்டுமென்றும் குறிப்பாக அரசியல் தலைவர்கள் தமது ஆதரவைக் கொடுத்து அவர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அகில இலங்கை இந்து மாமன்றம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

அரசியற் கைதிகளுக்கு மாமன்றம் சட்ட உதவி

பல ஆண்டுகளாகச் சிறையில்வாடும் அரசியற் கைதிகளுக்கு போதிய சட்ட உதவி கிடைப்பதில்லையெனவும் வெளிநாட்டிலிருந்து நிதி உதவி அனுப்பப்படுவதாகச் சொல்லப்பட்டாலும் அது உரிய முறையில் அரசியற் கைதிகளுக்கு நிவாரணம் கிடைக்கும்

வகையில் சட்ட உதவிக்கு பயன்படுத்தப்படுகிறதாவென சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தக் குறையைப் போக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கும் வடமாகாண முதல்வருக்கும் வேண்டுகோள்கள் கிடைத்திருக்கின்றன. இந்தச்சட்ட உதவியை முறையாக நிர்வகித்து கைதிகளுக்கு உதவ ஒரு நிதியம் அமைக்குமாறு வடமாகாண முதல்வரை இந்து மாமன்றம் கேட்டிருக்கிறது. அந்த நிதியம் நிறுவப்படும் வரையில் இந்தச் சட்ட நடவடிக்கைக்கு உதவுபவர்களிடமிருந்து நிதி சேகரித்து இந்து மாமன்றமும் தன் பங்கை அளித்து அரசியற் கைதிகளுக்குச் சட்ட உதவி வழங்கத் தீர்மானித்திருக்கிறது.

வடமாகாண முதல்வர் ஒரு நிதியத்தை நிறுவினால் இந்து மாமன்றம் சேகரித்ததன்மூலம் பெற்ற பணமும் அந்த நிதியத்திற்கு மாற்றம் செய்யப்படும்.

முதற்கட்டமாக சிவஸ்ரீ சந்திரா ஜயா ரகுபதி சர்மா அவர்கள் மேன்முறையீடு செய்யவும், சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தசர்மா ஆகியோருக்கு சட்ட உதவி வழங்கவும் இந்து மாமன்றம் தீர்மானித்திருக்கிறது.

இந்த பணிக்கு நிதியுதவி செய்ய விரும்புபவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் தொடர்புகொள்ளலாம்.

நல்லாட்சியிலும் அழிப்பு தொடர்கிறதா? மாமன்றம் விசனம்

கடந்தகால ஆட்சியில்தான் மத சுதந்திரம் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டதெனில் கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னரான நல்லாட்சியிலும் இவை தொடர்கின்றதா என ஐயுறவேண்டியுள்ளது.

ஒவ்வொரு பிரஜையும் தமது மதங்களை சுதந்திரமாகப் பின்பற்றவும் ஆலயங்கள் போன்ற மத அடையாளங்களைப் பேணவும் உரித்துடையவராவார். இது அரசியலமைப்பில் கூறப்பட்ட விடயமாகும். எனினும் இலங்கையைப் பொறுத்த வரை கடந்தகால அரசினால் மேற்கொள்ளப்பட்ட மத அழிப்பு ஜனவரி 8ஆம் திகதிக்குப்பின்னரும் நடைபெற்றுக்கொண்டு உள்ளது. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள இந்துக் கோவில்கள் அடிக்கடி உடைக்கப்படுவதும், திருடப்படுவதும், விக்கிரகங்கள் களவாடப்படுவது அல்லது உடைத்துச் சேதமாக்கப்படுவதையும் அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் மிகுந்த வேதனையடைவதோடு தனது கண்டனத்தையும் தெரிவிக்கின்றது. உதாரணமாக கடந்த 23.10.2015 ஆம் திகதி இரவு மட்டக்களப்பு மாவட்டத்தில், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குருக்கள் மடம் கிராமத்திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயம் உடைக்கப்பட்டு சுவாமி விக்கிரகங்கள், நவக்கிரகங்கள் உட்பட சுமார் பதின்மூன்று வரையான விக்கிரகங்கள் உடைக்கப்பட்டதோடு ஸ்ரீ ஆஞ்சநேயர் விக்கிரகம் கிணற்றுக்குள் வீசப்பட்டும் உள்ளது. இது ஓர் மதத்துவேஷ நடவடிக்கையென்பது வெளிப்படை. இவ்வாறான காடைத்தனம் புரிவோரின் நோக்கமென்ன என்பது புரியாததாக உள்ளது. ஒரு சாராரின் மத நம்பிக்கை இன்னொரு சாராரால் திட்டமிட்டே அழிக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் பொலிசில் முறையிட்டும், பொலிசாரின் நடவடிக்கை ஆமை வேகத்திலேயே நடைபெறுகிறதென ஆலய நிர்வாகத்தினர் எமது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

எனவே இவ்வாறான மதத்துவேஷ நடவடிக்கைகள் நிகழாதிருக்க சம்பந்தப்பட்ட அமைச்சர் உரிய அழுத்தத்தை அரசாங்கத்திற்குக் கொடுப்பதன் மூலம் நல்லாட்சியை மலரச் செய்யலாமென இந்து மாமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

(இது இந்து மாமன்றத்தினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிக்கை)

'வணக்கம்' கூறுவது எதற்காக?

நமது பரம்பரையின் மூலைக் கல்லாக விளங்குவது மரியாதை. முதியோரிடமும், மதிப்புக்குரிய பெரியோர்களிடமும் வணக்கம் கூறுவதும் நமது பரம்பரைச் சொத்து.



ஒரு நபரை ஒரு நாளில் முதலாவதாகச் சந்திக்கும் போதும், பலநாட்களுக்குப்பின் காணும் போதும் வணக்கம் கூறி வாழ்த்தி வரவேற்பது வழக்கம். மேலும் விருந்தினர் வரும்போது நம் இருக்கையில் இருந்து எழுந்து வணங்கி வரவேற்று விருந்தினரை அமரச் செய்த பின்னரே நாம் அமருவது வழக்கம். விருந்தினர் விடைபெறும் போதும் வாசல் வரை சென்று வழியனுப்பி விடைகொடுப்பதிலும் நாம் தவறுவதில்லை. ஆனால் இப்போது காலம் மாறிவருகின்றது. இன்றைய தலைமுறை இவ்வழக்கங்களை உதறிவிடவும் ஏளனம் செய்யவும் தயங்குவதில்லை.

இரண்டு கைகளும் சேர்த்து தலைகுனிந்து வணங்கி 'நமஸ்தே' என்று சொல்லும் போது நாம் பொருளாக்குவது என்னவென்றால் 'ந' என்பது இல்லை என்றும், 'ம' என்பது என்னுடையது என்றும், 'தே' என்பது உங்களுடையது என்றும் ஆகும். என்னுடையதாகக் காணும் இவ்வுடல் என் சுயலாபத்துக்கானதல்ல, என்றும் உங்கள் சேவைக்கானது என்றும் பொருள்படக் கூறுகின்றோம். தன்னை விட தம் முன்நிற்கும் நபருக்கே உயர்வளிக்கும் பண்பு இதில் நமக்குக் காண இயலும்.

- ஓலைச்சுவடி

மாமன்றத்தின் அனுதாபம்

அமரர் ஆறுமுகம் இராசரத்தினம்

யாழ் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் இராசரத்தினம் (ஓய்வுநிலைப் பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்) அவர்களது மறைவையிட்டு மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகின்றது.

அமரர் ஒரு சிறந்த சமயப் பெரியாராவார். அத்துடன் சமூக நலசேவைகளிலும் அக்கறையுடன் செயற்பட்டவர். இந்து மாமன்றத்துடன் நெருங்கிய உறவினைப் பேணிவந்த அமரர் இராசரத்தினம் மாமன்ற ஆன்மீக இதழான "இந்து ஒளி" சஞ்சிகைக்கும் பெரும்பங்களிப்புச் செய்தவர். தனது தரமான ஆக்கங்களைத் தந்துதவியது மூலம் இந்து மக்களிடையே ஆன்மீகச் சிந்தனைகளைத் தூண்டியவர். அவ்வப்போது "இந்து ஒளி" வெளியீடு சம்பந்தமாக மாமன்றத்திற்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கிவந்தார் என்பதையும் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

திரு. இராசரத்தினம் அவர்களின் மறைவு இந்து மாமன்றத்திற்குப் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு இந்து மாமன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

மாமன்றச் செய்தி

திருமுறிகண்டியில் மடாலயம்

திருமுறிகண்டியில் அரசாங்கத்தால் நீண்டகால குத்தகைக்குத் தரப்பட்ட காணியின் அனுமதிப்பத்திரம் சகல தரப்பினராலும் விதந்துரைக்கப்பட்டு இறுதியாக கௌரவ காணி அமைச்சரின் அனுமதி பெறப்பட்டு தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பிரசுரிக்கப்பட்டு ஆறு கிழமைகள் முடிவடைந்ததும் எமக்கு காணி உரிமம் வழங்கப்படும். இக்காணியில் ஒரு மடாலயத்தை நிர்மாணித்து முருகப்பெருமானை பிரதிஷ்டை செய்வதெனவும் இதற்காக கட்டட ஒப்பந்தக்காரர் ஊரெழு திரு. க. சண்முகநாதனிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ரூ.7.3 மில்லியனுக்கான கேள்வியை ஏற்று நிர்மாணப் பணிகளைத் தொடங்குவதற்கு மாமன்ற முகாமைப் பேரவை தீர்மானித்துள்ளது.

நல்லை நகர் நாவலர்

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே – எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை.

- சி. வை. தாமோதரம்பிள்ளை

இந்தச் சுடரில்...

- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- ஓம்காரம் - தத்துவமும் மகத்துவமும் 4
- விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் 5
- வாழ்த்துச் செய்தி 6
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய தொண்டுநலம் 7
- இந்து சமயத்தில் ஆறுமுகநாவலரின் எழுச்சியும் வேத சிவாகமநெறியின் மறுமலர்ச்சியும் 10
- நல்லையில் உதித்த நாவலர் பெருமான் 12
- இந்தியா சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச உயர்நிலைப் பள்ளியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழா 14
- சுவாமி விபுலாநந்தரின் சமதர்ம சிந்தனையும் கலை இலக்கிய நோக்கும் 17
- கிழக்கிலங்கையின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய சுவாமி விபுலானந்தர் 20
- மார்கழி நாயகனுக்கோர் திருவெம்பாவை 21
- உலகிற்கு ஆன்மீக வளம் பெருக்கிய யோகர் சுவாமிகள் 23
- கடவுளிடத்தும் சமயத்தின்மீதும் நம்பிக்கையின்மை இளைஞர் எழில் நலன்களனைத்தையும் அழிக்கும் 25
- Speech of Mrs. Jeeva Perumalpillai - Essex 29
- Important fasts to be observed 30
- ஒரு பார்வை - இந்து ஒளி (தீபம் 19 - சுடர் 08) 34
- மாமன்றச் செய்திகள் 36
- சிவத்தொண்டர் மாநாடு - நாவலர் நினைவு ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு நிகழ்ச்சி நிரல் 38
- List of people Converted to Hinduism from other religions 40
- மாமன்றச் செய்திகள் 42
- மாமன்றத்தின் அனுதாபம் 44

வத்தளை இந்து மன்றம் அங்குரார்ப்பணம் – 31.10.2015

வத்தளை பிரதேசத்தில் இந்து மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட நிகழ்வின்போது கலந்து கொண்ட மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், உப தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, மாமன்ற சமூகநலன் குழு செயலாளர் திரு. ஜெ. நிரோஷ்காந்த், திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோருடன் வத்தளை இந்து மன்றத் தலைவர் திரு. எஸ். இராதாகிருஷ்ணன் உட்பட ஏனைய உறுப்பினர்களையும் நிகழ்வுக்கு வருகை தந்தவர்களையும் காணலாம்.

திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி நிகழ்வின்போது மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா பக்தர்களுக்கு நந்திக்கொடிகளையும், மாமன்ற ஆன்மீக இதழான "இந்து ஒளி" பிரதிகளையும் வழங்குவதைக் காணலாம்

ஆலையடி வேம்பு இந்து மாமன்ற கட்டடத்துக்குரிய நிதியுதவியாக இந்து மாமன்றத்தினால் காசோலை வழங்கப்படுகிறது

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் யாழ் அங்காடி நிகழ்வு – 31.10.2015

ஓய்வுநிலை உலக வங்கி ஆலோசகர் திருமதி ஜீவா பிள்ளை எஸ்ஸெக்ஸ் நாடாவை வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார்

மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை மங்கள விளக்கேற்றி வைக்கிறார்.

நாவலர் நற்பணி மன்றத் தலைவர் திரு. ந. கருணை ஆனந்தன் மங்கள விளக்கேற்றி வைக்கிறார்.

பிரதம விருந்தினர் திருமதி ஜீவா பிள்ளை எஸ்ஸெக்ஸ் உரையாற்றுகிறார்

திருமதி ஜீவா பிள்ளை எஸ்ஸெக்ஸ் அவர்களை திருமதி அ. கயிலாசபிள்ளை கௌரவிக்கிறார்.

வலிகாமம் இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் திரு. ஏ. குணபாலசிங்கம் கௌரவம் பெறுகிறார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கலாநிதி அ. கந்தசாமி, திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. யூட் கனகசபை, திரு. ந. கருணை ஆனந்தன் திரு. செந்தில்நாதன், திருமதி ஜீவா பிள்ளை எஸ்ஸெக்ஸ், திரு. வி.கயிலாசபிள்ளை, திரு. இ. செல்வஸ்கந்தன், திருமதி.அ.கயிலாசபிள்ளை, திரு. எம். நாகேந்திரசீலன், திரு. ஏ. குணபாலசிங்கம்

இவ்விதழ் இல 488, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிலுவனத்தில் அச்சிடப்பட்டு அதில் இவ்வகை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.